67

# CIVICS

## FOR CEYLON SCHOOLS

### J. S. C. CLASS OR STD. VIII

# குடி இயல்

[ஜே. எஸ். ஸி. வகுப்புக்குரியது]

BY

V. E CHARAWANAMUTTU
PH.B., B.S., A.C.P., J.P., F.R.G.S., BAR-AT-LAW.



புதிய பதிப்பு.

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67

Donated By. C. Srikhantha
in memory of his late father
S. S. COOMARASWAMY

# குடி இயல்

[ஜே. எஸ். ஸி. வகுப்புக்குரியது.]

Donated By. C. Srikhantha
in memory of his late father
S. S. COOMARASWAMY

**வ. எ. சரவணமுத்து**
PH.B., B.S., A.C.P., J.P., F.R.G.S., BAR-AT-LAW.
இயற்றியது.

புதிய பதிப்பு.

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

பதிப்புரிமை] 1941 [விலை சதம் **75.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Edition November 1941.

*Copyright Reserved.*

Sri Sanmuganatha Press Jaffna.

Donated By: C. Srikhantha
in memory of his late father
S. S. COOMARASWAMY

# முகவுரை.

இலங்கை வித்தியா பகுதியாரின் புதிய பாடத் திட்டத்துக் கிணங்கக் குடியியல் என்னும் நூல் கனிஷ்ட பாடசாலைத் தராதர பத்திர வகுப்புக்குத் தமிழில் இதுவரையில் ஒரு புத்தகமும் வெளிவரவில்லை. ஆதலின் இந்நூலை வெளியரங்கப் படுத்தும் ஆக்கியோனாகிய நான் எவ்வித சிரமத்தையும் மேற்கொள்ள நேரிடாதென நம்புகிறேன்.

இக்காலத்திலே நாட்டிலுள்ள பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை மூலமாகச் சனசமூக ஆட்சிமுறையிற் பங்குபற்றுமுரிமை கிடைத்திருப்பதனால் குடியியல் என்னும் பாடத்தை ஏன் கற்க வேண்டுமென்ற வினாவை எவருமே கேட்கமாட்டார்கள்.

வருங்காலத்திற் பிரஜைகளாக வருபவர்கள் இக்காலத்துச் சிறுவர் சிறுமியர்களே யாவர். அதனால் தேசத்தின் அரசியல் விஷயங்களை அறிந்து அவற்றிற் பங்குபெறத் தக்கவாறு நமது சிறார்களைப் பயிற்றுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

மாணவர்கள் தங்கள் நடைமுறை வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய பாடத்தைக் கற்கின்றோமென்பதனை உணர்ந்துகொள்ள வேண்டும். இப்புத்தகம் வாசிப்புக்குரிய ஒரு கருவியாகக் கொள்ளப்படாமல், பல விஷயங்களை அறிவதற்குரிய மூலாதாரக் கருவியாகவும் சம்பாஷணைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதப் பிரதிவாதங்கள் நிகழ்த்துவதற்குரிய கருவியாகவும் கொள்ளப்படல் வேண்டும். மாணவர் வகுப்புடன் குழுமுறையாகவேனும் தனித்தேனும் பொது ஸ்தலங்களைப் பார்வையிட்டு அவை எவ்வாறு நடைபெறுகின்றன வென்பதை அறிந்து கொள்ளவேண்டும். இதனால் இயன்றவரை உண்மைகளைக் காணவும் அநுபவ அறிவு பெறவும் சந்தர்ப்பங் கிடைப்பதனால் மாணவர் அதிக பயனைப் பெறுவர்.

இந்நூல் நமது இலங்கை பிரித்தானியாவுடன் அரசியலில் எவ்வாறு சம்பந்தப்பட்டதென்பதையும், பிரித்தானியா, பிரித்தானிய சக்கராதிபத்திய நாடுகள் என்பவற்றின் அரசியற் பரிபாலனங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன வென்பதையும் விசேடமாய் எடுத்துக் கூறுகின்றது. அன்றியும் கனிஷ்ட பாடசாலைத் தராதர பத்திர வகுப்புக்குரிய பாடங்களை விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துரைப்பதினால் அவ்வகுப்பு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்பதே எமது நம்பிக்கை.

இந்நூலை இயற்றும் விஷயமாக ஊக்கப்படுத்தினவர்களுக்கும் உதவி யளித்தவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதனை வாசிக்கும் நண்பர்கள் இதன் முன்னேற்றங் கருதித் தெரிவிக்குந் திருத்தங்களை மனமுவந்து ஏற்றுக்கொள்வோம்.

இங்ஙனம்,

3-11-41. **ஆக்கியோன்.**

# பொருளடக்கம்.


| அதிகாரம். | | பக்கம் |
|---|---|---|
| **1.** | **ஆரம்பம்** | 1 |
| **2.** | **இலங்கை பிரித்தானிய ஆளுகைக்குள் வந்தமை** .... | 5 |
| **3.** | **பிரித்தானிய சக்கராதிபத்தியம்** .... | 13 |
| **4.** | **மாக்ஷிமை தங்கிய மன்னர் பிரான்** .... | 28 |
| **5.** | **பிரித்தானிய பாராளு மன்றம்** .... | 45 |
| **6.** | **பிரபுக்கள் மன்றம்** .... | 53 |
| **7.** | **பொதுமக்கள் மன்றம்** .... | 66 |
| | (a) *பாராளுமன்ற அங்கத்தினர் உரிமைகள்* | 76 |
| | (b) *பாராளுமன்றம் செய்யுங் கடமைகள்* | 80 |
| **8.** | **பிரதம மந்திரியும் மந்திரி சபையும்** | 84 |
| | (a) *மந்திரிசபை அங்கத்தினர்* .... | 86 |
| | (b) *மந்திரி சபையின் கடமைகள்* .... | 88 |
| **9.** | **பிறிவிக் கவுன்சில்** .... | 95 |
| **10.** | **பாராளு மன்றத்தின் கடமைகள்** .... | 108 |
| | *சட்டமாக்கப்படும் முறை* .... | 115 |
| **11.** | **வரவு செலவுத் திட்டம்** .... | 120 |
| | *வருமானம்* .... | 131 |
| | *செலவு* .... | 132 |
| **12.** | **ஆட்சியாளர்** .... | 134 |
| | *அரசாட்சியின் அங்கங்கள்* .... | 135 |
| | *கருவூலம்* .... | 140 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு மந்திரியின் பகுதி .... 141
பிறநாட்டு மந்திரியின் பகுதி .... 143
போர்ப்பகுதி .... 146
இந்திய மந்திரியின் பகுதி .... 146
குடியேற்றநாட்டு மந்திரியின் பகுதி .... 147

**13.** **நீதி பரிபாலனம்** .... 152
(a) பிரித்தானிய நீதிமுறை .... 154
(b) பிரித்தானிய நீதிமுறைச் சட்டங்கள் 155
(c) நீதி மன்றங்கள் .... 158

**14.** பேரரசின் பாதுகாப்பு .... 173
(a) கடற்படை .... 173
(b) தரைப்படை .... 180
(c) ஆகாயப்படை .... 186

## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| iii | 7 | மாக்ஷிமை | மாட்சிமை |
| 14 | 6 | அர்லாந்து | அயர்லாந்து |
| 15 | 8 | அரசிற் | அரசியற் |
| ,, | 22 | பிரகிதிகள் | பிரதிநிதிகள் |
| 21 | 15 | பெருகிலேப் | பெருகிலப் |
| 25 | 20 | தாக்கப்படாதபடி | சாக்காதபடி |
| 28 | 2 | மாக்ஷிமை | மாட்சிமை |
| | | (4-ம் அதிகாரம்) | |
| ,, | 12 | ஜனங்களாற் | ஜனங்களால் |
| 37 | 10 | Inter Regime | Interregnum |
| 40 | 19 | பராயம் | பிராயம் |
| 54 | 9 | அங்கத்துவ | அங்கத்துவத்தி |
| 67 | 13 | சசக்காதிபத்தியத்து | சக்கிராதிபத்தியத்து |
| 76 | 3 | Griminal | Criminal |
| 85 | 12 | கூட்டங்களெல்லாம் | கூட்டங்களுக்கெல்லாம் |
| 100 | 26 | முதலிய யோர் | முதலியோர் |
| 104 | 2 | வேண்டி | வேண்டிய |
| 117 | 2 | தென | னவென |
| 150 | 19 | பற்றுவருமல்லர் | பற்றுபவருமல்லர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடி இயல்.

## 1-ம் அதிகாரம்.

## ஆரம்பம்.

குடியியலைப் பற்றிய ஆராய்ச்சியைக் கிராமத்தை அடிப்படையாகக்கொண்டு இதற்கு முந்திய நூலில் நாம் தொடங்கினேம். அந்நூலில் கிராமச் சங்கம், கிராம நீதிமன்றம், கிராமாதிகாரி, பொலிஸ், (நகர் காவலர்) வைத்தியசாலை, மருந்துச்சாலை, தபால் தந்திப்பகுதி, சந்தை, வியாபாரம் முதலிய சனசமுதாயத்திற் குதவியான பலதிறப்பட்டவைகளைப் பற்றியும் கற்றறிந்தோம். பெரிய கிராமங்களினதும் பட்டினங்களினதும் பரிபாலனத்தை நடாத்தும் ஸ்தாபனம் நகரசபை எனப்படும். இந்த நகரசபைகளுக்குக் கிராமச் சங்கங்களைப் பார்க்கிலும் கூடின அதிகாரம் உண்டு. கொழும்பு, கண்டி, காலி என்னும் பெரிய நகரங்களின் பரிபாலனத்தை முனிசிப்பாலிற்றி எனப்படும் நகர சங்கங்கள் நடாத்துகின்றன. கிராமச் சங்கம், நகர சங்கம், முனிசிப்பாலிற்றி என்னும் பெரிய நகர சங்கம் ஆகிய இவைகளெல்லாம் ஸ்தல ஸ்தாபன அரசியல் அங்கங்களாகும். நாம் வசிக்கும் கிராமத்தையோ பட்டணத்தையோ பரிபாலனஞ் செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகட்கு நாம் கொடுக்கும் இறைப்பணத்தை 'றேற்ஸ்' (Rates) என்று ஆங்கிலத்திற் சொல்வர். அதேபோல் மத்திய அரசாங்கத்திற்கு நாம் கொடுக்கும் இறைப்பணம் 'ராக்ஸ்' (Taxes) எனப்படும். முந்திய நூலில் இலங்கையின் மத்திய அரசாங்கத்தைப்பற்றி, தேசாதிபதி, அரசாங்கசபை, அரசியலின் உயர்தர கீழ்த்தர லிகித உத்தியோகங்கள், நீதிபரிபாலன ஸ்தாபனங்கள் முதலியவைகளைக் குறித்துக் கற்றோம். மத்திய அரசியலைக் குறித்து ஆராயுங்கால் இலங்கை பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தைச் சேர்ந்தது என்பதனையும் நாம் அனைவரும் பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் பிரஜைகள் என்பதனையும், பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் மன்னராகிய **மேன்மைதங்கிய VI-ம் ஜோர்ஜ்** என்பவருக்கு நாம் ஒவ்வொருவரும் அமைந்து நடக்கும் கடமைப்பாடுடையோம் என்பதனையும் கற்றோம். தேசாதிபதியை நியமிப்பவர் மன்னர் பிரானது பிரதான மந்திரிகளுள் ஒருவராகிய குடியேற்றநாட்டு மந்திரியே. தேசாதிபதி தமது உத்தியோகத்தை நடாத்துங்கால் அம்மந்திரியாருக்கே கீழ்ப்பட்டவராயும் உத்தரவாதமுள்ளவராயும் இருப்பர்.

இந்நூலில் இலங்கை பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் ஒரு பாகமாய் எவ்வாறு இருக்கின்றது என்பதைப் பற்றியும் அச்சக்கிராதிபத்தியத்தின் அரசியலைப்பற்றியும் ஆராய்ந்து கற்போம்.



மன்னர்பிரானது அதிகாரத்தை அதிஷ்டித்தே சட்டநிர்வாகம் நடப்பதும் அரசியல் நடப்பதுமாகும். நாம் உபயோகப்படுத்தும் காசுகள், தபால் முத்திரைளிலெல்லாம் நமது மன்னர்பிரானின் தலையின் வடிவம் அழுத்தப்பட்டிருக்கின்றது. பிரித்தானிய கடற்படை, ஆகாயப்படை, தரைப்படைகளே இந்நாட்டின் பாதுகாப்பைச் செய்கின்றன. இப்படைகளின் சிறுபகுதிகள் இக்காலத்தில் இலங்கைத்தீவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நாம் அந்நியநாடுகளிற் பிரயாணஞ் செய்யும் பொழுது பிரித்தானிய அரசாட்சியாரால் கொடுக்கப்படும் பிரயாண உத்தரவுச் சீட்டொன்றைக் கொண்டு செல்கின்றோம். அரசாங்க உத்தியோகக் கட்டடங்களின் மேற்றொங்கவிடப்படும் கொடி, பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் கொடியாகிய யூனியன் ஜாக் (Union Jack) ஆகும். இலங்கை ஒரு பிரித்தானிய குடியேற்றநாடு. இந்தநாட்டில் நடைமுறையிலிருக்கும் அரசியற்றிட்டம் மன்னர் பிரானலேயே கொடுக்கப்பட்டது. சட்டங்களைத் தாமாகவே நிரூபிக்கும் உரிமை மன்னர் பிரானுக்குண்டு. அவ்விதம் அவர் நிரூபிக்குஞ் சட்டங்கள் மந்திராலோசனைச் சபைக் (Order-in-Council) கட்டளைகள் எனப்படும். அவ்விதமாகவே சட்டசபைக்கும் புறம்பான சில சட்டங்களை நிரூபிக்குமுரிமை தேசாதிபதிக்குமுண்டு. மேலும் சட்டசபையில் நிரூபிக்கப்படும் எந்தச் சட்டமும் தேசாதிபதியின் அங்கீகாரம் பெறவேண்டும். அது மாத்திரமன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகமுக்கியமான விஷயங்களைக் குறித்த சட்டங்களையும், சனங்களிடையே பெரிய அபிப்பிராய பேதங்களை உண்டாக்கும் சட்டங்களையும் தேசாதிபதி தாமே அங்கீகரிக்காமல் குடியேற்றநாட்டு மந்திரியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிப்பார்.

பிரித்தானிய சக்கிராதிபத்தியத்துள் அடங்கிய நாடுகள் பலதிறப்பட்ட அரசியற்றிட்டங்களை உடையனவாயிருக்கின்றன. அவற்றுட் சில சுயாதீனநாடுகள், குடியேற்றநாடுகள், பாதுகாப்பு நாடுகள், சாட்டுதல் செய்யப்பட்ட நாடுகள் முதலானவை. கனடா, ஔஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, அயர்லாந்து என்பன சுயாதீன நாடுகளாகும். மால்ற்ரு, இலங்கை, தொடுவாய் நாடுகள், மொறீஷியஸ் என்பன குடியேற்ற நாடுகளாகும். நைஜீரியா, உகண்டா, பெக்குவானாலான்ட் என்பன பாதுகாப்பு நாடுகள். பலஸ்தீனா, ஜேர்மனிய தென், மேலாபிரிக்க நாடுகள் சாட்டுதல் செய்யப்பட்ட நாடுகளாகும்.

இந்நாடுகள் எல்லாம் சேர்ந்து பிரித்தானிய சாம்பிராச்சியமாகும். பிரித்தானிய சாம்பிராச்சியத்தைப் பிரித்தானிய சுய அரசுநாட்டுத் தொகுதி (The Great British Commonwealth of Nations) என இக்காலத்தி லழைப்பர்.

---

## 2-ம் அதிகாரம்.

# இலங்கை பிரித்தானிய ஆளுகைக்குள் வந்தமை.

எங்கள் இலங்கை நாட்டின் சரித்திரத்தைப் பற்றியும் அது எப்போது எக்காரணங்கள் பற்றிப் பிரித்தானிய ஆளுகைக்குட்பட்ட தென்பதைப் பற்றியும் சிறிது ஆராய்வது நன்று.

கர்ணபரம்பரையாயுள்ள கதைகளின்படி இராக்ஷதர் எனப்பட்ட ஒரு சாதியினரே ஆதியில் இத்தீவில் வசித்தனர் என்பர். இராமாயண காலத்தில் இராக்ஷதர்களே இலங்கையில் வசித்தனரென்பது அயோத்தி மன்னரின் மூத்த புதல்வராய ஸ்ரீ இராமச் சந்திரனுடைய மனைவியாகிய சீதாபிராட்டியை இலங்கை வேந்தனாகிய இராவணன் கவர்ந்துகொண்டு வந்தான் என்பதனாலும், சீதாபிராட்டியைச் சிறைமீட்டற்காக ஸ்ரீ இராமச்சந்திரன் இலங்கைக்குப் படையெடுத்து வந்தான் என்பதனாலும் தெரிய வருகிறது.

கி. மு. 483-ம் ஆண்டில் வட இந்திய நாட்டைச் சேர்ந்த விஜயன் என்னும் அரசிளங்குமரன் தன் பரிவாரங்களோடு இலங்கைக்கு வந்தான். அவனும் அவனுடன் வந்தவர்களும் ஆரியராவர். அவர்கள் வந்திறங்கியபோது இந்நாட்டில் வசித்தோர் நாகர், இயக்கர் எனப்படுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியினர். நாகரும், இயக்கரும் முறையே சர்ப்ப, பைசாச வழிபாடுடையவர்களாயிருந்தனர். விஜயனுக்கும் இந்நாட்டு நாகர்களுக்கும் போருண்டாயது. குவேனி எனப்பட்ட நாக வம்ச அரசிளங்குமரியின் உதவிகொண்டு விஜயன் அவர்களை வெற்றிகொண்டான். நாகர், இயக்கர் எனப்பட்ட பண்டைக் குடிகளின் பிற்றோன்றல்களே இக்கால இலங்கை வேடராவர். விஜயனும் அவனுடன் வந்தவர்களும் இலங்கையிற் குடியேறியபின் சிங்களரெனப் பெயர் பெற்றனர்.

அக்காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள அரசர்கள் பன்முறை இந்நாட்டின்மீது படையெடுத்தபோதும் விஜயனால் நிலைநிறுத்தப்பட்ட இராச வம்சம் பலநூற்றாண்டுகளாக இலங்கையில் நிலைபெற்றிருந்தது. இவர்களது இராச்சியகாலத்தில் பெரும்பாலும் பௌத்தசமயம் இராச்சிய சமயமானது. சிங்கள அரசர்கள் பெரும் பொருள் செலவு செய்து அலங்காரமான புத்தமதக் கோவில்களையும், பயிர்த் தொழில் நன்கு நடைபெறும் பொருட்டு அநேக குளங்களையும் கட்டுவித்தார்கள்.

அக்காலத்தில் தமிழருக்கும் சிங்களருக்குமிடையில் இடையிடையே போர் ஏற்பட்ட பொழுதிலும் கி. மு. 177-ம் ஆண்டிலேதான் தமிழர் அநுரதபுரியில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். அன்று தொடக்கம் போர்த்துக்கீசர் வந்தகாலமாகிய கி. பி. 1506-ம் ஆண்டுவரையும் சிங்கள




அரசர்க்கும் தமிழ் அரசர்க்குமிடையே அடிக்கடி போர் நடைபெற்றது. போர்த்துக்கீசர் இந்நாட்டின் கடற்கரை நாடுகளை, கி. பி. 1640-ல் ஒல்லாந்தர் இந்நாட்டிற்கு வரும்வரையும் கைப்பற்றி இருந்தனர்.

ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்தவுடன் போர்த்துக்கீசரைத் தோற்கடித்து, அவர்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளைக் கைப்பற்றினர். ஒல்லாந்த கிழக்கிந்திய சமுதாயத்தார் எனப்பட்ட வர்த்தக சங்கத்தினர், கி. பி. 1796-ம் ஆண்டுவரையும் மேற்குறித்த கரைநாட்டுப்பகுதிகளை ஆண்டுவந்தனர். அக்காலத்தில் கண்டியிலிருந்து அரசாட்சி செய்த மன்னன் மலைநாட்டை ஆண்டுவந்தான். கி. பி. 1796-ல் பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றினர். ஆரம்பத்தில் இந்நாட்டு அரசியல் பிரித்தானிய கிழக்கிந்திய சமுதாயத்தார் கையிலிருந்தது. அவர்கள் சென்னையிலிருந்து அரசியலை நடாத்தினர். கி. பி. 1798-ல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினர் இந்நாட்டைப் பிரித்தானிய மன்னருக்குச் சமர்ப்பித்தனர். அவ்வாறு நிகழ்ந்தபோது சங். விறெடிறிக் நோர்த் (பிற்காலத்தில் கில்போர்ட் பிரபு) என்பவரே முதற்றேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். பிரித்தானியர் இந்நாட்டிற்கு வந்த காலம் முதல் சிலவருடங்களாகக் கண்டியரசனுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள முயன்றனர். அதிலவர்கள் அநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலமடையவில்லை. கி. பி. 1815-ல் கண்டியில் அரசாண்ட ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என்பவனின் கொடுங்கோன்மை காரணமாகச் சனங்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதைக்கண்ட பிரித்தானிய துரைத்தனத்தார் சில சிங்களப் பிரமுகர்களின் உதவிகொண்டு மன்னனைச் சிறைப்படுத்தி நாடு கடத்தியதுமன்றி, கண்டி இராச்சியத்திலுள்ள சிங்களப் பிரமுகர்களுடன் ஓர் உடன்படிக்கையும் செய்துகொண்டனர். கி. பி. 1815-ல் செய்த இவ்வுடன்படிக்கைப்படி தேசமன்னனின் ஆளுகைக்கீழ் அரசியல் எவ்வாறு நடந்ததோ அம்முறை பிறழாது தாமும் அரசியலை நடாத்துவதாக ஒப்புக்கொண்டனர்.

தங்கள் அரசனுக்கு மாறாய்ப் பிரித்தானியருக்குதவிசெய்து நாட்டைக் கைப்பற்றிக் கொடுத்த சிங்களப்பிரமுகர்கள், விரைவில் பிரித்தானிய அரசியலில் அதிருப்தி அடைந்தார்கள். கி. பி. 1817-ம் ஆண்டு பிரித்தானிய அரசினர்க்கு மாறாய் ஒருபுரட்சியை ஆரம்பித்தனர். அதனைப் பிரித்தானியர் இலகுவாக அடக்கிவிட்டனர். இப்புரட்சியின் பின்தான் கண்டிக்குத் தெருவீதி திறக்கப்பட்டது. யுத்தகாலத்தில் உதவியாயிருக்கும்பொருட்டே தெருவீதி திறக்கப்பட்டது. பக்கங்களிலுள்ள நிலங்களைப் பண்படுத்திக் கோப்பித் தோட்டங்களைச் செய்ய ஆங்கிலேய விவசாயக் குழுவினர் ஆரம்பித்தனர். அவ்வாறு அவர்கள் ஆரம்பித்ததும் மேற்படி தெருவிலிருந்து உண்ணடுகளுக்குச் செல்ல வேறு தெருக்களும்



ஔஸ்திரேலியா, கன்பெராவிலுள்ள பாராளுமன்றக் கட்டடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பட்டன. இவற்றின்மூலம் போக்குவரவு வசதிகளும் ஏற்படலாயின.

கி. பி. 1867-ம் ஆண்டு கொழும்பிலிருந்து கண்டிக்குப் புகைரத வீதி திறக்கப்பட்டது. அதன்பின் வேறு புகைரத வீதிகளும் தெரு வீதிகளும் திறக்கப்பட்டன.

இந்நாட்டை ஒருமைப்பாடடையச் செய்த ஏதுக்கள் ஆங்கிலேயரால் அமைக்கப்பட்ட தெருக்களும் புகைரத வீதிகளு மன்று. கி. பி. 1500க்கு முன் இடையிடையே சிலகாலங்களிற்றான் இலங்கை ஒரே மன்னனுடைய தனி ஆணைக்குட்பட்டிருந்தது. 16-ம் நூற்றாண்டு தொடக்கம் கடலோரங்களிலுள்ள பகுதிகளில் ஒருவித அரசியலும், மலைநாட்டுப் பிரதேசங்களில் இன்னொரு வகை அரசியலும் நடைபெற்றன. கி. பி. 1833ல் இலங்கை முழுவதையும் ஆங்கிலேயர் ஓர் அரசியலமைப்புக்குட் படுத்தினர். அரசியலைச் செவ்வனே நடாத்தும் பொருட்டு இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்தையும் ஒவ்வொரு தலைமை உத்தியோகஸ்தரின் பொறுப்பில் விட்டனர்.

இவ்வாறு புதிய அரசியல் முறையை ஸ்தாபித்ததும் ஒரு சட்ட நிரூபண சபையையும் ஏற்படுத்தினர். அரசாங்கத்தார் ஜனங்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவற்றிற் கேற்றவாறு நடக்கும்பொருட்டுச் சட்டநிரூபண சபையில், ஜனங்



களிடையே செல்வாக்குள்ள சில பிரமுகர்களையும் அச்சபையில் அங்கத்தவர்களாய் வைத்தனர். காலஞ் செல்லச் செல்ல, பட்டணங்கள் ஏற்பட்ட பொழுது அவற்றில் வசிக்கும் ஜனங்களின் சுகாதார முதலிய காரியங்களைக் கையேற்றுப் பார்ப்பதற்கு அவ்வப் பட்டணங்களில் ஸ்தல ஸ்தாபன அதிகார சபைகளை ஆங்கிலேய அரசினர் நிறுவினர். அவை கொழும்பு, கண்டி, காலி என்பவைகளிலுள்ள முனிசிப்பாலிற்றி என்னும் நகர சபைகளும் வேறு சிறு பட்டணங்களிலுள்ள (Local Boards) ஸ்தல சபைகளும், சுகாதார சங்கங்களுமே. இச்சிறு பட்டணங்களைப் பரிபாலிக்கும் சபைகள் இப்போது பெரும்பாலும் (Urban Councils) பட்டின பரிபாலன சபைகளாய் விருத்தியடைந்து வருகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சியால் ஏற்பட்ட சமாதானம் காரணமாகவும் கிருஷிகாபிவிருத்தி காரணமாகவும் நாட்டு மக்களில் உயர் குடிகளாயிருந்தோர் செல்வராயினர். கிறிஸ்தவ மிஷனறிமாராலும் பிறராலும் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகள் மூலமாயும் புதினப் பத்திரிகைகளின் மூலமாயும் ஜனங்களிடையே அறிவுவிருத்தி உண்டானபோது, பொது ஜனங்கள் தேசீய விஷயங்களிற் சிரத்தையெடுக்கத் தொடங்கினர். தெருக்கள், புகைரத வீதிகள் காரணமாக ஏற்பட்ட போக்குவரவு வசதிகளாலும், நாடு ஒரு தனி அரசியல் முறைக்குள் வந்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலும் கற்றுத் தேறிய மக்களிடையே தேசிய உணர்ச்சி பிறந்தது. இத்தேசிய உணர்ச்சி வளர வளர, தங்கள் சொந்த நாட்டரசியலிற் றுங்களும் பங்குபற்ற வேண்டுமென்னும் விருப்பம் ஜனங்களிடையே அதிகரித்தது. மகா ஜனங்களிடையே தோற்றிய இந்த ஆசை காரணமாக சட்டநிரூபண சபை, மூன்றுதரம் ஒவ்வொரு முறையும் கூடிய உரிமைகளுடன் திருத்தி அமைக்கப்பட்டது. இறுதியாக இக்காலம் அநுசரணையி லிருக்கும் அரசாங்க சபை ஸ்தாபனமாயது.

இலங்கை பிரித்தானிய சாம்பிராச்சியத்தைச் சேர்ந்த நாடுகளில் மிகவளர்ச்சி பெற்றுவரும் ஒரு நாடாகத் திகழ்கின்றது. ஆங்கில நாட்டிற் கையாளப்படும் அரசியல் முறைகளைச் சிறிது சிறிதாகக் கையாண்டு விரைவில் பிரித்தானிய சாம்பிராச்சியத்திலுள்ள சுயாதீன நாடுகளில் ஒன்றாய் வரத்தக்கதாய் முன்னேற்றமடைந்து வருகின்றது.

### அப்பியாச வினுக்கள்.

1. இலங்கையின் ஆதிக்குடிகள் யாவர்?
2. இலங்கை பிரித்தானியருடைய ஆளுகைக்குட்பட்டது எவ்வாறு?
3. கண்டிநாட்டு உடன்படிக்கை என்பது யாது?
4. பிரித்தானிய ஆட்சியால் இலங்கை என்னென்ன நன்மைகளை அடைந்தது?

---

## 3-ம் அதிகாரம்.

## பிரித்தானிய சக்கிராதிபத்தியம்.

இலங்கை பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தைச் சேர்ந்த ஒரு நாடு. பிரித்தானிய சக்கிராதிபத்தியம் எத்தன்மையது? அது இப்போதுள்ள நிலைக்கு எவ்வாறு வந்தது?

இலங்கையில் வழங்கும் எந்த நாணகத்தைப் பார்த்தாலும் அதில் மன்னர்பிரானின் தலையின் வடிவமும், **"VI-ம் ஜோர்ஜ் மன்னனும் இந்தியாவின் பேரரசனும்"** என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம். ஆங்கில அரசனாகிய **ஆறும் ஜோர்ஜ்** மன்னர் இலங்கைக்கும் ஏனைய ஆங்கில குடியேற்ற நாடுகளுக்கும் சம உரிமை நாடுகளுக்கும் அரசன் என்பதை நாமறிகிறோம். அவரே இந்தியாவின் பேரரசருமாவர். சட்டங்களிலும் அவைபோன்ற வேறு பத்திரங்களிலும் மன்னர்பிரானின் முழுப்பெயரும் பட்டமும் கூறவேண்டிவருங்கால், பின்வருமாறு கூறப்படும்:—

> "மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் **ஆறும் ஜோர்ஜ்**; கடவுள் கிருபையால் ஆங்கில நாட்டிற்கும், அயர்லாந்து தேசத்திற்கும், கடலுக்கப்பாலுள்ள ஆங்கில சம உரிமை நாடுகளுக்கும் அரசன்; கிறிஸ்து மதப்பாது காவலன்; இந்தியாவின் பேரரசன்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆறும் ஜோர்ஜ் ஆங்கில நாட்டிற்கும் அயர் லாந்து தேசத்திற்கும் அரசன். 1800-ம் ஆண்டு தொடக்கம் 1920-ம் ஆண்டு வரையும் பிரித்தானிய தீவுகளாகிய பெரிய பிரித்தானியாவும் அர்லாந்தும் ஒரே அரசியலுக்குட்பட்ட நாடுகளாயிருந்தன. இவ்விரு நாட்டு அரசியல் உரிமையும் லண்டன்மாநகரத்துள்ள பாராளுமன்றத்துக்கே உரியதாயிருந்தது. பெரிய பிரித்தானியா என்பது இங்கிலாந்து, உவேல்ஸ், ஸ்கொத்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்ததே ஆகும். 1707-ம் ஆண்டு ஸ்கொத்லாந்து தேசமும் இங்கிலாந்து தேசமும் சேர்ந்து ஒரு ஐக்கிய இராச்சியமாயது. ஸ்கொத்லாந்தும் இங்கிலாந்தும் ஐக்கிய இராச்சியமாய காலத்தில் இருநாடுகளுக்கும் பொதுவான பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் யாவையும் இருநாடுகளும் கைக்கொள்ள வேண்டுமெனினும், ஸ்கொத்லாந்து தேசத்தார் இரண்டு முக்கிய விஷயங்களில் தங்களுக்கு விசேஷ உரிமை இருக்கவேண்டுமென்று கேட்டுப் பெற்றுக்கொண்டனர். அவ்விசேஷ உரிமைகளாவன:— ஸ்கொத்லாந்து தேசத்திற் பரம்பரையாய் ஸ்தாபிக்கப்பட்டிருந்து வந்த முதியோர் ஆட்சிக் கொள்கைத் திருச்சபை (Presbyterian church) மாற்றப்படாதிருக்க வேண்டுமென்பதும் அந்நாட்டிலே தொன்றுதொட்டிருந்துவந்த 'நீதித்துறை ஏற்பாடு' (Judicial System) மாற்றப்படாதிருக்கவேண்டும் என்பதுமாகும். இங்கிலாந்தின் நீதித்துறை ஏற்பாட்டிற்கும் ஸ்கொத்லாந்தின் நீதித்துறை ஏற்பாட்டிற்கும் சில வேறுபாடுகளுண்டு. மன்னர்பிரான் இங்கிலாந்தைவிட்டு ஸ்கொத்லாந்து எல்லைக்குட் பிரவேசித்தவுடன் அத்தேசத் திருச்சபையில் ஒரு அங்கத்தினராகி விடுவார். 1926-ம் ஆண்டு தொடக்கம் ஸ்கொத்லாந்து அரசியற் பகுதியெனப் பெயரிட்டு அத்தேச அரசிற் பொறுப்பை வகிக்கும் ஒரு பிரிவு ஏற்பட்டது. அப்பகுதிக்கு ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டார். உவேல்ஸ் நாட்டின் பரிபாலனத்தை நடாத்துவதற்கெனத் தனிப்பட்ட ஓர் அரசியற் பகுதியில்லை. நாட்டரசியல் இங்கிலாந்தின் அரசியலுடன் ஒருமைப்பட்டது. அயர்லாந்து தேசம் முன்கூறிய நாடுகள் போலல்லாமல் ஒரு தனிப்பட்ட அரசியல் நிலையை உடையதாக இருக்கின்றது. 1914-ம் ஆண்டு தொடங்கிய மகாயுத்தத்தின்பின் இந்நாடு, ஒன்றோடொன்று பகைமையுடைய இரு பாகங்களாக்கப்பட்டது.



வட அயர்லாந்து இங்கிலாந்தின் அரசியலோடு இணைக்கப் பட்டிருக்கின்றது. வட அயர்லாந்திலிருந்து பன்னிரண்டு பிரதிநிதிகள் ஆங்கிலப் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகின்றார்கள். மேலும் வட அயர்லாந்து ஆங்கில அரசினர்க்கு அரசிறையும் கொடுத்து வருகின்றது. வட அயர்லாந்து நாட்டிற்கென ஒரு பாராளுமன்றம் இருக்கின்றது. அப்பாராளு மன்றம்

மன்னர் பிரானால் நியமிக்கப்பட்ட ஒரு தேசாதிபதியையும் செனேற் எனப்படும் பெருமக்கள் சபையையும், ஒரு பொதுமக்கள் சபையையும் கொண்டது. வட அயர்லாந்து தேசத்தின் உள்நாட்டு அரசியற் பொறுப்பு இப்பாராளு மன்றத்துக்கே உரியது. வட அயர்லாந்திலுள்ள சனங்கள் ஸ்கொத்லாந்திலும் இங்கிலாந்திலும் இருந்து அங்குச் சென்று குடியேறியவர்களின் வழித்தோன்றல்களே. இவர்களுட் பெரும்பான்மையோர் புரட்டஸ்தாந்த கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அல்ஸ்ரர் மாகாணத்தாரென்றும் சொல்லப்படுவர். இந்நாட்டின் அரசியல் நிலை ஆங்கிலச் சம உரிமை நாட்டு அரசியல் நிலைக்கும் ஆங்கில அரசியலில் ஒரு பாகமாயுள்ள அரசியல் நிலைக்கும் நடுவான ஒரு நிலையெனப்படலாம்.

தென்னயர்லாந்து ஆகிய மற்றைய பாகம் ஐரிஷ் சுயாதீன நாடு அல்லது அயர் எனப்படும். தென்னயர்லாந்துக்கும் சொந்தமான ஒரு பாராளுமன்ற முண்டு. அது டெயில் (Dail) எனப்படும். நாட்டின் தலைநகராகிய டப்ளினின் பட்டணத்தில் அது கூடும். தென்னயர்லாந்து ஆங்கிலச் சம உரிமை நாடுகளி லொன்று. இக்காலப் நிகழ்ந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் மற்றைய ஆங்கிலச் சம உரிமை நாடுகளெல்லாம் ஆங்கில நாட்டுடன் சேர்ந்து ஜேர்மனியுடன் போர் தொடுத்தன. ஆனால் ஐரிஷ் சுயாதீனநாடு அவ்



யுத்தக் கப்பற் கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு செய்ய மறுத்து இப்போரிலே, தான் நொதுமல் (Neutral) நிலைமை வகிப்பதாகக் கூறியிருக்கின்றது. ஜேர்மனிய அரசாங்க தூதர் டபிளினிலும் அயர்நாட்டு அரசாங்கதூதர் ஜேர்மன் தலைநகராகிய பேர்லினிலும் இருந்து தத்தம் கடமைகளையாற்றி வருகின்றனர்.

**ஆறும் ஜோர்ஜ்** மன்னர் பிரித்தானிய நாட்டிற்கும் அயர்லாந்து தேசத்திற்கும் கடலுக்கப்பால் உள்ள ஆங்கிலச் சம உரிமை நாடுகளுக்கும் அரசன் எனக் கூறினேம். ஆங்கிலச் சம உரிமை நாடுகளாவன யாவை? அந்நாடுகளின் அரசியல் நிலைதான் என்ன? என்பவற்றை ஆராய்வாம். ஆங்கில அரசனையே தமது அரசனாக உடையதாயும் ஆங்கிலப் பொதுநலக் குடியரசு (British Commonwealth) எனப்படும் நாட்டுத் தொகுதியில் ஒன்றாகி, தமது அரசியலைச் சுதந்திரமாய் நடாத்தும் உரிமை உடையதாகவும் உள்ள நாடுகளே ஆங்கிலச் சம உரிமை நாடுகளெனப்படும். வட அமெரிக்காவின் வடபாகமாகிய கனடாதேசமும் தென்னாபிரிக்காவும் ஔஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் ஐரிஷ் சுயாதீன நாடும் அச்சம உரிமை நாடுகளாகும்.

நியூபவுண்லாந்து என்னும் நாடும் ஆங்கிலச் சம உரிமை நாடாயிருந்தது. அந்நாடே ஆங்கிலக் குடியேற்ற நாடுகளுள் முதன்முதற் சம உரிமையைப் பெற்றது. சில வருஷங்களின்முன் அந்நாட்



டில் வரவு செலவு, ஆட்சி முறைகளிற் பெருஞ் சீர்கேடும் பணக்கஷ்டமும் ஏற்பட்டமை காரணமாக அந்நாட்டினரசினரின் விருப்பத்திற் கிணங்கி ஆங்கில அரசினர் சம உரிமை அரசியற் பொறுப்பை நீக்கி, மன்னர்பிரானல் நியமிக்கப்பட்ட (Commissioners) ஆணையாளர் பொறுப்பில் விட்டார்கள். மேற்கூறிய சம உரிமை நாடுகளுக்கு ஆங்கில நாட்டுக்குரிய சகல உரிமைகளும் பொறுப்புக்களும் உண்டு.

1926-ம் ஆண்டு கூடிய ஆங்கிலப் பேரரசு மகாநாட்டில் (Imperial Conference) சம உரிமை நாடுகளின் அரசியல் நிலைமை ஆலோசிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் அங்கத்தவராயிருந்தோர் மேற்கூறிய சம உரிமை நாடுகளின் பிரதிநிதிகளும் ஆங்கில நாட்டுப் பிரதிநிதிகளுமாவர். அம்மகாநாடு சம உரிமை நாடுகளின் அந்தஸ்தைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறியது:—

> "பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தைச் சேர்ந்த சம உரிமை நாடுகள் ஒன்றோடொன்று சமத்துவம் உடையன. இந்நாடுகள் ஆங்கில அரசனையே தமது அரசனாகக் கொள்ளினும், உள்நாட்டு, பிறநாட்டு அரசியல் உரிமைகளிலோ அன்றி வேறெவ்வகையிலோ ஒன்றற்கொன்று உயர்வு தாழ்வுடையனவல்ல. இவை யொவ்வொன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தம் சொந்த விருப்பப்படியே பிரித்தானிய பொதுநலக் குடியரசு நாட்டுத் தொகுதியில் (Commonwealth of Nations) சேர்ந்து கொண்டன."

இந்தக் கொள்கையை அடிப்படையாக் கொண்டு ஆங்கிலப் பாராளுமன்றத்திலும் ஏனைய சம உரிமை நாடுகளின் பாராளுமன்றங்களிலும் **1931-ம் ஆண்டு உவெஸ்ற் மினிஸ்ரர் சட்டம்** எனப்படும் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. சம உரிமை நாடுகளின் அரசியலமைப்பு முறைகளும் ஆங்கிலப் பாராளுமன்றச் சட்டங்களாக விருந்த போதிலும் அச்சட்டங்களைத் தத்தம் விருப்பப்படி எவ்வகையிலும் மாற்றி அமைத்துக் கொள்ளு முரிமை இப்போது ஒவ்வொரு சம உரிமை நாட்டிற்குமுண்டு. இப்போது நிகழும் போரில் ஆங்கிலநாடு ஜேர்மனியுடன் போர் தொடுத்ததும் ஐரிஷ்நாடொழிந்த ஏனைய சம உரிமை நாடுகளெல்லாம் ஜெர்மனியுடன் போர் தொடுத்தன. எட்டாம் எட்வேட் அரசர் முடிதுறக்கத் தீர்மானித்த பொழுது அத்தீர்மானத்தை ஒவ்வொரு சம உரிமை நாட்டுப் பாராளுமன்றமும் தனித்தனி சட்டமாக்க நேரிட்டது. மற்றைய ஆங்கிலப் பொதுநலக் குடியரசு நாடுகளில் எட்டாம் எட்வேட் அரசரின் ஆளுகை, சட்டப்படி நிறுத்தப்படுவதற்கு ஒருதினம் முந்தியே, தென்னபிரிக்க சம உரிமை நாட்டிலும் ஒரு தினம் பிந்தி, ஐரிஷ் சம




உரிமை நாட்டில் நிறுத்தப்பட்டது. ஆங்கில அரசினர் ஜேர்மனியுடன் போர் தொடுத்தவுடன் சம உரிமை நாடுகள் போருக்காகச் செய்ய வேண்டிய உதவிகளை யெல்லாம் தங்களால் இயன்றளவு கொடுத்துவருகின்றன. ஆங்கில மன்னர் அரசியலோடு தொடர்புடைய எக்கருமத்தையும் தான் செய்யுமுன் பிரதம மந்திரியுடன் கலந்தாலோசித்தே செய்வர். எனினும் ஏனைய சம உரிமை நாடுகளுடன் சம்பந்தப்பட்ட அரசியற் கருமங்களை அவ்வந் நாட்டுப்பிரதம மந்திரியாரைக் கலந்தாலோசித்தே செய்வர்.

**VI-ம் ஜோர்ஜ்** மன்னர் இந்தியாவின் பேரரசருமாவர். எங்கள் நாட்டின் அயல்நாடாகிய இந்தியாவின் பெருநிலப் பரப்பில் ஏறக்குறைய 40 கோடிமக்கள் வாழ்கின்றனர். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிற்சில பாகங்களைச் சுதேச மன்னர்கள் ஆட்சி செய்கின்றனர். அவர்களது ஆட்சி இந்தியாவின் மூன்றிலொரு பாகத்தை அடக்கியதாக இருக்கும். எஞ்சிய பாகங்களை (Viceroy) ஆங்கில இராசப்பிரதிநிதியும் மாகாணங்களின் (Provincial Governors) தலைவர்களும் ஆட்சி செய்கின்றனர். இராசப்பிரதிநிதி ஐந்து வருடங்களுக்கே கடமையாற்ற நியமிக்கப்படுவர். ஆங்கில ஆட்சிக்குள் அமைந்திருக்கும் இந்திய நாடு, ஆளுகை வசதிக்கிணங்க மாகாணங்களெனப்படும் சிறு பாகங்களாகப் பிரிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கின்றன. அம்மாகாணங்களின் ஆட்சியில் முக்கியமானவர்கள் மாகாணத் தலைவர்களே. 1935-ம் ஆண்டிலே இந்திய நாட்டு அரசியற் சட்டப்படி மாகாணங்களுக்குச் சுயவாட்சி கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் அரசுரிமையைப் பெற்றிருப்பது, ஜனங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபைகளே. 1935-ம் ஆண்டுச் சட்டம் இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்குட்பட்ட 15 மாகாணங்களைக் கொண்ட ஒரு அகில இந்திய கூட்டுப் பேரரசை (All in India Federation) நிறுவியது. உள்நாட்டு அரசியல் சம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் நடாத்துமுரிமை அந்நாட்டு மக்களின் பிரதிநிதிகள் வசம் இப்போதிருக்கின்றது. ஆனல் நாட்டின் பாதுகாப்பு ஆங்கில தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகிய முப்படைகளிலும் தங்கியிருக்கின்றது. இங்கிலாந்தில் இந்தியாவின் கருமங்களை மேற்பார்வை செய்யவும் நடாத்தவும் ஒரு தனி மந்திரியார் உளர். அவர் இந்திய மந்திரி எனப் பெயர் பெறுவர். இனிப் பிரித்தானிய சக்கராதிபத்தியத்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளைப்பற்றி ஆராய்வாம்:—

குடியேற்ற நாடுகள் என்னும் வகுப்பைச் சேர்ந்ததே இலங்கை. ஐரிஷ் நாடொழிந்த ஏனைய சம உரிமை நாடுகளொவ்வொன்றும் தொடக்கத்தில் குடியேற்றநாட் டந்தஸ்துடனேயே இருந்தன.



ஆகாய விமானக் கூட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் படிப்படியாய் அரசியல் உரிமைகளைப் பெற்று, ஈற்றில் சம உரிமை நாடுகளாய் வந்தன. சம உரிமை நாடுகள் பொறுப்பாட்சியை (Responsible Govt) உடையன. குடியேற்றநாட்டரசியலில் அவ்வந்நாட்டு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அரசியல் உரிமைகளை மேற்பார்வை செய்து அவைகளின் அரசியற் செயல்களில் ஏற்கத் தக்கவைகளை ஏற்று நீக்கத்தக்கவைகளை நீக்கும் உரிமை ஆங்கில நாட்டில் லண்டனிலுள்ள வெள்ளை மாளிகையிலிருக்கும் குடியேற்றநாட்டு மந்திரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குடியேற்ற நாட்டு வகுப்பைச் சேர்ந்த நாடுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு நாகரீக நிலையில் விருத்தியடைந்திருக்கின்றன. தென் றொடீசிய நாட்டுக்கு 1923-ம் ஆண்டில் பொறுப்பாட்சி வழங்கப்பட்டது. ஆனால் அங்கு வாழும் வெள்ளைமக்களின் தொகை (55000) மிகக் குறைந்தமையால் அந்நாடு உடனேயே சம உரிமை நாடாக முடியவில்லை. இலங்கையின் அரசியல் நிலை ஒரு நடுத்தரமான நிலை எனப்படலாம். அசென்ஷன் தீவு 1922-ம் ஆண்டுவரை ஒரு கப்பல்போலக் கவனிக்கப்பட்டு ஆங்கில நாட்டுக் கடற்படை ஆட்சி நிலையத்தார் (Admiralty) பொறுப்பில் விடப்பட்டிருந்தது. ஆங்கில எகிப்திய சூடான் என்னும் பிரதேசம் ஆங்கிலநாடு, சூடான்நாடு என்னும் இரு நாடுகளின் கொடிகளின் கீழ் ஆட்சிப்படுவதா



யினும் அவ்வாட்சியை உண்மையில் நடத்துவோர் ஆங்கிலரேயாவர்.

வேறு சில குடியேற்ற நாடுகளில் அரசியலங்கங்களாகப் பாராளுமன்றங்கள் அல்லது ஜனப்பிரதிநிதிசபைகள் இருக்கின்றனவாயினும் அச்சபைகளுக்குச் சுயாதீனம் கிடையாது. அச்சபைகள் தம்மிஷ்டமான உரிமை பெற்றனவல்ல. அந்நாடுகளிலே தேசாதிபதியாகக் கடமையாற்றுபவரே அந்நாட்டு அரசியலிற் பொறுப்புடையவர். அவர் தமக்கு மேலதிகாரியாயுள்ள ஆங்கில நாட்டு மந்திரியாருக்கு உத்தரவாதமுள்ளவராவர். இவ்வாறு அரைகுறையான உரிமைகளையுடைய சனப்பிரதிநிதிகள் சபைகள்தானும் இல்லாத வேறு சில நாடுகளுமுண்டு. அந்நாடுகளின் அரசியற் பொறுப்பு முழுதும் அந்நாடுகளில் நியமிக்கப்பட்டிருக்கும் தேசாதிபதிகளின்பாற்பட்டதே. அஷான்ரி, பசுற்றோலான்ட் என்னும் நாடுகள் அப்படியானவை. பாதுகாப்பு நாடுகளை, பிற வல்லரசுகள் அல்லது பகைமையுள்ள அயல்நாடுகள் தாக்கப்படாதபடி ஆங்கில அரசினர் பாதுகாப்பதுடன் உண்ணாட்டரசியலும் செவ்வனே நடைபெறற்குரிய உதவிகளையும் புரிகின்றனர். அந்நாட்டு மக்கள் தங்கள் பரம்பரைத் தலைவர்களின் ஆணைகளுக் கமைந்து நடக்கின்றனர். இவ்வித பாதுகாப்பு நாடுகளொவ்வொன்றிலும் ஆங்கில வரசரின் பிரதிநிதியாக ஒவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரு (Resident) உறைதலைவர் இருப்பர். இவர் அந்நாட்டுத் தலைவராய் உள்ளவருக்கு மந்திரிபோ லவும் வழிகாட்டி போலவு முள்ளவர். உகண்டா, சொமாலிலான்ட் என்னும் ஆபிரிக்க நாட்டுப் பிர தேசங்கள் இத்தகைய பாதுகாப்பு நாடுகளாகும்.

மேலே சொல்லப்பட்டவாறு பெருநிலப் பரப் பைக் கொண்ட குடியேற்ற நாடுகளின் ஆட்சியை லண்டனி லுள்ள (Colonial Office) குடியேற்றநாட்டு உத்தியோக நிலையம் அதற்கென நியமிக்கப்பட்ட (Secretary of States) மந்திரி மூலமாக நடாத்து கின்றது. இக்குடியேற்ற நாடுகளின் அரசியலை நடாத்துவதற்கு அனுப்பப்படும் ஆங்கில தேசாதி பதிகளையும் அவர்களுக்குக் கீழ் உத்தியோகம் பார்க்கும் வேறு சில முக்கியமான உத்தியோகஸ் தர்களையும் மன்னர்பிரானே குடியேற்றநாட்டு மந் திரியாரின் ஆலோசனைப்படி நியமனஞ் செய்வர்.

நமது இலங்கையின் தேசாதிபதியும் மற்றைய முக்கியமான உத்தியோகஸ்தர்களும் குடியேற்ற நாட்டு மந்திரியார் மூலமே தத்தம் உத்தியோகங் களைப் பெறுவார்கள்.

நமது நாடு பிரித்தானிய சக்கராதிபத்தியத் தின் ஒரு பாகமாய் இருப்பதாலும் எங்கள் பிற் கால அரசியல் வாழ்க்கை மன்னர் பிரானின் மந் திரிகளுள் ஒருவர் கையிலிருப்பதாலும் பிரித்தா னிய சக்கராதிபத்திய அரசியல் முறையைப்



பற்றிச் சிறிது ஆராய்ந்தறிவது நன்று. அவ்வரசி யலின் தலைவர் மன்னர்பிரானே யானது பற்றி அடுத்த அத்தியாயத்தில் அவரைப்பற்றிச் சிறிது கற்பாம்.

### அப்பியாச வினுக்கள்.

1. மன்னர் பிரானுடைய முழுப்பட்டத்தையும் விவரித் தெழுதுக.
2. ஆங்கிலச் சம உரிமை நாடுகளாவன யாவை?
3. சம உரிமை நாடென்பதின் கருத்தென்னை?
4. இந்திய நாட்டி னரசியலைப்பற்றி உமக்குத் தெரிந்ததை விபரித் தெழுது.
5. குடியேற்ற நாடுகளைப்பற்றி விபரித்தெழுது.
6. குடியேற்ற நாடுகள் எவ்வாறு ஆளப்படுகின்றன?
7. பிரித்தானிய சக்கராதிபத்தியமெனப்படும் தொகுதியிற் சேர்ந்த நாடுகள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-ம் அதிகாரம்.

# மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான்.

உலகத்துள்ள பெரிய நாடுகளுட் சில ஜனங்
களாற் தெரிந்தெடுக்கப்பட்ட (Presidents) அர
சியற் றலைவர்களையும், வேறு சில அரசர்களையும்,
இன்னும் சில சர்வாதிகாரிகளையும் உடையவை
களாய் இருப்பதைக் காண்கின்றோம். அமெரிக்க
ஐக்கிய நாடுகளின் அரசியற் றலைவர் ஜனங்க
ளாற் தெரிவு செய்யப்பட்டவர். அவர் நான்கு
வருடங்களுக் கொருமுறை தெரிவு செய்யப்படுவர்.
பிரான்ஸ் தேச அரசியற் றலைவரும் ஜேர்மனி
யுடன் நடாத்திய இப்போருக்குமுன் ஜனங்களாற்
தெரிவு செய்யப்பட்டவரே. பிரித்தானிய நாட்
டின் தலைவன் அரசன். அவ்வண்ணமே ஜப்பான்,
சுவீடன் முதலிய நாடுகளும் அரசனை உடையன.
ஜேர்மனி, ருஷியா, ஸ்பெயின் என்பன சர்வாதி
காரிகளை உடையன. இத்தாலிய நாடு பெயரளவில்
அரசனால் ஆளப்படுவதாயினும், சர்வாதிகாரியா
கிய முசோலினி என்பவர் கையிலேயே உள்ளது.

ஆங்கிலநாட்டு மன்னர் பிரானைப்பற்றிச்
சிறிது சொல்வாம். தாய்நாடாகிய ஆங்கில நாட்
டிலும் அம்மன்னனைத் தலைவனைக் கொண்ட
ஏனைய நாடுகளிலும் அரசியலின்பாற்பட்ட எக்
கருமமும் மன்னன் பெயராலேயே நடாத்தப்படும்.
எங்கள் நாணகங்களிலும், முத்திரைகளிலும்



அரசனின் தலையின் வடிவம் பொறிக்கப்பட்டிருக்
கின்றது. நீதிபரிபாலனம் மன்னர் பெயரா
லேயே நடைபெறுகின்றது. அரசியல் உத்தியோக
நிலையங்களிற் கடமையாற்றும் உத்தியோகத்தர்
ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை மன்னர்
பிரான் பெயராலேயே செய்கின்றனர். உத்தி
யோக நிலையங்கள் உபயோகிக்கும் தபால் உறை
களிலெல்லாம் (On His Majesty's Service) மன்
னர் பிரானின் ஊழியத்தின் பாற்பட்டது எனுஞ்
சொற்றொடர் அல்லது சொற்களின் முதல் எழுத்
துக்கள் அச்சிடப் பட்டிருப்பதை நாம் காண்கின்
றோம். அவ்வுறையின் இடதுபக்கக் கீழ்ப்பாகத்
தில் அத்தபாலை அனுப்பும் உத்தியோகஸ்தரின்
பெயரும் உத்தியோகமும் அச்சிடப் பட்டிருக்கும்.
நீதிஸ்தலத்தில் பெருங் குற்றஞ் செய்த குடியான
வன் மீது வழக்குத் தொடரும்போது அவ்வழக்
கில், அரசன்வாதியும் குற்றஞ் சாட்டப்படுபவன்
பிரதிவாதியும் என வழக்குச் சீட்டில் (Charge
Sheet) எழுதப்படும். அதில் மன்னர் பிரானைக்
குறிக்கும் பதம் (Rex) என்னும் லத்தீன் பாஷை
யது. அரசியலுக்குச் சொந்தமான தபாற்பெட்டி,
தபால் கொண்டுசெல்லும் வாகனங்கள் முதலிய
வைகளிலெல்லாம் G. R. என்னும் எழுத்துக்
களும் முடியும் அமைக்கப் பட்டிருக்கும். G. R.
என்பன **Georgius Rex (ஜோர்ஜ் அரசன்)** என்னும்
லத்தீன் சொற்களின் முதலெழுத்துக்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக் காலத்தில் அரசனே சட்டம் இயற்றுவோனும் நீதிபதியும் அரசியற் பரிபாலனஞ் செய்பவனுமாயிருந்தான். பிற்காலத்திலேற்பட்ட அரசியற் றிருத்தங்கள் காரணமாக இப்போது ஆங்கில அரசன் தன்னுடைய மந்திரிகளுள் ஒருவர் மூலமாக அல்லாமல் எவ்வரசியற் கருமத்தையுஞ் செய்வதில்லை. அரசனின் மந்திரிமார்கள் பெயரளவில் அரசனுடைய ஊழியர்களெனப்பட்ட போதும், உண்மையில் அவர்கள் பிரஜைகளின் ஊழியர்களே. பிரஜைகளின் ஊழியர்கள் என்பதன் கருத்து, பிரஜைகளாற் றெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தின் ஊழியர்களென்பதே.

உலகத்திற் பலதிறப்பட்ட அரசியல் முறைகள் நடைமுறையில் இருப்பதைக் காண்கின்றோம். அவ்வரசியல் முறைகளை மூன்று பகுப்புக்கள் ஆக்கலாம். அவை ஜனநாயக ஆட்சி, முடியாட்சி, சர்வாதிகார ஆட்சி என்பன. ஜனநாயக ஆட்சி சர்வ ஜனநாயக ஆட்சி, பிரதிநிதித்துவ ஆட்சி என இருவகைப்படும். ஐரோப்பிய நடு நாடாகிய சுவிற்செர்லாந்து தேசத்தின் சில (Cantons) மாகாணங்களில் சர்வ ஜனநாயக ஆட்சி நடைபெறுகின்றது. அங்கே சர்வ ஜனங்களும் வருடமொருமுறை கூடிச் சட்டங்களை இயற்றுவர். எந்த விஷயத்தைக் குறித்தும் ஒரு தீர்மானஞ் செய்ய ஏற்படின் சர்வ ஜன விருப்பு வெறுப்புக்



கள் அறியப்பட்டே தீர்மானிக்கப்படும். இத்தகைய சர்வ ஜனநாயக ஆட்சி மேற்கூறியுள்ள சிறு நாடுகள் போன்ற நாடுகளிலல்லாமல் பெரிய நாடுகளின் அரசியலை நடாத்துவதற் கேற்றதாகாது.

முடியாட்சியாவது அரசுரிமையைப் பிறப்புரிமையாகப் பெறும் ஒரு தனிமகன் பேரால் நடைபெறு மரசியல். அம்முடியரசுத் தலைவன் சர்வ உரிமைகளையும் உடையவராகக் காணப்படின் அவனுடைய ஆட்சி (Absolute Monarchy) வரம்பிலா முடியாட்சி எனப்படும். சர்வ உரிமைகளுமில்லாத அரசனுடைய ஆட்சி (Constitutional Monarchy) வரம்புடையாட்சி எனப்படும். பிறப்புரிமையால் அரசுரிமையைப் பெறாது தம்வலியால் அரசுரிமையைப் பெற்ற ஒருவன் சர்வாதிகாரி யெனப்படுவன். அவனது ஆட்சி சர்வாதிகார ஆட்சி யெனப்படும்.


தம் நாட்டரசியல் நடைபெறுமுறை இஃதாகவே இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கும் உரிமை ஜனங்களுக்கு முடைத்தாயின், அவ்வாட்சி ஜனநாயக ஆட்சி அல்லது குடியாட்சி எனப்படும். முற்கூறியவாறு சிலநாடுகளில் சர்வ ஜனநாயக ஆட்சி நடைபெறுகின்றது. எனினும் பெரிய ஜனநாயக நாடுகளின் பிரஜைகள் அரசியல் விஷயங்களிற் றத்தம் விருப்பு வெறுப்புக்களைத் தம்மாற் றெரிந்தெடுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் மூலமாகவே தெரிவிப்பர். எனவே பிரஜைகளின் (Will) ஆணைப்படி நடக்குமரசியல் ஜனநாயகவாட்சி எனப்படும். இக்கருத்தில் ஆங்கில நாடு வரம்புடை முடியாட்சியை யுடையதாயினும் குடியாட்சியை யுடையதெனப்படலாம். இத்தாலிய நாடு அரசனை உடைத்தாயிருப்பினும் முசோலினி எனப்படும் அரசியற் றலைவன் தன்வலியாற் சகல அரசியல் உரிமைகளையும் பெற்றமையின் அந்நாட்டரசியல் சர்வாதிகார ஆட்சி எனப்படும்.

ஆங்கில நாட்டு அரசர் வரம்புடையரசர். அஃதாவது அவர் சர்வ அரசியல் உரிமைகளையும் பெற்றிலர். அரசியற் றலைவரே அல்லாது ஆட்சிப் பொறுப்புடையவரல்லர். உண்மையில் ஆங்கில நாட்டரசியல் பாராளுமன்றக் குடியாட்சியாகும்.

மன்னர் பிரான் கௌரவத்திற்காக மாத்திரம் அரசியற் றலைமையில் வைக்கப்பட்டிருப்பவருமன்று. சட்ட சம்பந்தப்பட்ட அளவில் அவரே நாட்டின் முதல்வர். அவருடைய அங்கீகாரம் பெறாது சட்டங்கள் எவையும் இயற்றுதலாகா. மந்திரிமார்கள் அரசாங்க தூதர்கள் (Ambassadors), தலைமையத்தியட்சகர் முதலிய தமது கடமைகளை ஆற்றும் உத்தியோகஸ்தர்களை அரசரே நியமிப்பர். பாராளுமன்றத்தைக் கூட்டுதலும், ஒத்திவைத்தலும், குலைத்தலும் ஆகிய உரிமைகள் அவருடையனவே. அரசியற் பேரறி



மாட்சிமைதங்கிய மன்னரும் இராணியும்

5 (மன்னர் விமான உடையில் நிற்கிறார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுப்புக்கள் (Proclamations) எல்லாம் மன்னரின் கைச்சாத்திடப்பட்டே வெளிவரும். அவர் நாமத்தினாலேயே நீதிபரிபாலனம் நடைபெறும். தேசப் பாதுகாப்புக்குரிய தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகிய முப்படைகளும் மன்னருடையனவே. அவரே அப்படைகளுக்குத் தலைவர். பிறநாடுகளுடன் செய்யப்படு முடன்படிக்கைகளெல்லாம் அவர் பெயராலேயே செய்யப்படும். ஆட்சிக் கருமங்கள் எவையும் அவரது பெயராலேயே நடைபெறும். அரசியற் கருமங்களை ஆற்றும் போதெல்லாம் அரசர் மந்திரிமார் மூலமே அவற்றைச் செய்வர். அரசர் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் மந்திரிமாருள் யாராவது ஒருவர் பொறுப்பாளராவர். எவ்வரசியற் செயலும் விவாதத்திற் குட்படுமாயின், அச்செயலிற் றூண்டிய மந்திரியாரே பாராளுமன்றத்தில் அதனை நிலைநாட்டும் பொறுப்புடையவராவர்.

முடிசூட்டு விழாவில் மன்னர்பிரான் செய்யுஞ் சத்தியத்தை ஆராய்ந்தால், அதில் ஆழ்ந்த கருத்து அமைந்திருப்பதைக் காண்போம். **"ஆங்கிலப் பாராளு மன்றத்தின் பரம்பரை வழக்கங்களுக்கும் சட்டங்களுக்கும் ஏற்ப நடந்தும், அப்பாராளு மன்றம் நிரூபிக்கும் சட்டங்களுக் கிணங்கியும் இத்தேச மக்களை ஆட்சி செய்வேனென்று நீர் உறுதியாக வாக்குச் செய்வீரா?"** என மன்னர் பிரான் கேட்கப்படுவார். **"அப்படியே நான் நடந்துகொள்வேன்."**



என்று அக்கேள்விக்குப் பதிலாகச் சத்தியஞ் செய்வார்.

மன்னன் அரசுரிமையைப் பிறப்புரிமையாகப் பெற்றவரெனினும் அப்பிறப்புரிமையும் ஆதியிற் பாராளு மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டதே. **1701-ம் ஆண்டு அரசுரிமை நிர்ணயச் சட்டம்** (Act of Settlement) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டம் ஆங்கில இராச்சிய உரிமை **சோபாயா** என்னும் பெயரையுடைய அரசிளங் குமரிக்கும் அவரின் உரிமையாளராய், (Protestant) புரட்டஸ்தாந்த கிறீஸ்துவ மதத்தைக் கைக்கொண்டொழுகுவோராய் உள்ளவருக்கே உரியதென வரம்பிட்டுக் கூறியது. மேலும் இதற்குமுன் 1689-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட உரிமைச் சட்டம் (Bill of Rights) அரசுரிமையை உடையவரெவரேனும் கத்தோலிக்க சமயத்தைக் கைக்கொள்வராயினும் அல்லது கத்தோலிக்க சமயத்தைக் கைக்கொள்வா ரொருவரை மணஞ்செய்வாராயினும் அரசுரிமையைப் பெறக்கூடாதெனத் தீர்த்தது.

**1937-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியற் பதிலமைப்புச் சட்டமும்** (Regency Act) ஆங்கிலப் பாராளுமன்றம் அரிசுரிமையை வழங்கவும் அவ்வுரிமையைச் சீர்குலையாது காப்பாற்றவும் அதிகாரமுடையதெனக் காட்டி நின்றது. அப்போதைய அரசன் வயதிற் பதினெட்டாண்டுகட்குட்பட்டவனாயினும் அல்லது மனத்திலோ சரீரத்திலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட சில குறைகள் காரணமாகத் தம்கடமைகளை
ஆற்ற இயலாத நிலைமையில் உள்ளவனாயினும் அவ்
வரசனுக்குப் பதிலாய் ஒருவரை நியமித்தற்கு மேற்
கூறிய சட்டம் ஒழுங்கு வகுத்தது. அச்சட்டப்
படி அரசனுக்குப் பதிலாய் நியமிக்கப்படுபவர் அர
சுரிமையில் அடுத்தபடியாய் உள்ளவராகவேண்
டும். மேற்கூறியபடியல்லாது, அரசன் ஆங்கில
நாட்டைவிட்டு வெளியே செல்லவேண்டி ஏற்படுங்
காலத்தும், நோயினாற் பீடிக்கப்பட்டுத் தாற்
காலிகமாகத் தன் கடமைகளைச் செய்ய இயலாதவ
னாகும்போதும், அவனுடைய கடமைகளைச் செய்வ
தற்குப் பிறராலே நியமிக்கப்படவேண்டிய தன்மை
யில்லாதவர்களும் அவ்வப்போது தாமே இயங்குந்
தத்துவம் உடையவர்களுமாயுள்ள ஐந்து அங்கத்
தினரையுடைய அரசியற் சபையொன்றையும்
மேற்படி சட்டம் வரையறுத்தது. அங்கத்தவரா
கும் உரிமையுடையோர் யாவரெனின், அப்போதை
யரசு ஆணாக இருந்தால் அவரது மனைவியாரும்,
பெண்ணாகவிருந்தால் அவரது புருஷனும், அரசுரி
மையை ஒருவர்க்குப்பின் ஒருவராய் அடையும்
உரித்துள்ள அடுத்த நால்வருமேயாம்.

அரசு பிழையாது என்னுங் கருத்தமைந்த
ஒரு வாக்கியத்தை அரசியல் நூலுடையார் பலர்
ஆங்கிலத்திற் கூறியுள்ளார். அதன் கருத்து, அர
சனாவான் தெய்வீகத் தன்மை வாய்ந்தவன் என்
னுங் கருத்துப்பற்றியோ அல்லது வேறெக் கார



ணம் பற்றியோ ஒருபோதும் தவறு செய்யமாட்
டான் என்பதல்ல. ஆங்கில நாட்டரசன் அரசியற்
சம்பந்தமான முக்கிய கருமங்கள் எவற்றைச் செய்
யும்போதும் தனது பிரதம மந்திரியின் அல்லது
அவ்வக் கருமத்திற்கேற்ற மந்திரியின் ஆலோசனை
யைக் கேட்டே அச்செயலைச் செய்வராயினும் அச்
செயலால் விளையும் பயனது பொறுப்பு அரசனைச்
சாராது மந்திரியையே சாரும் என்பதே. ஆங்கில
நாட்டில் அரசில்லா நிலை (Inter Regime) ஒரு
போது மேற்படுவதில்லை. என்னை? அரசுரிமை நிர்
ணயச் சட்டப்படி, அரசிறக்க, அரசுரிமையை
உடையோன் உடனேயே அரசாவான். ஆகையி
னால் அரசிறவாது என்னுங் கருத்தையுடைய ஆங்
கில வாக்கியத்தின் தாத்பரியம் மிகவும் பொருந்தும்.
அமெரிக்கா போன்ற குடியரசு நாடுகளின் தலை
வர்கள் காலத்திற்குக் காலம் ஜனங்களாற் றெரிவு
செய்யப்படுவார்கள். இக்குடியரசு நாடுகளில் உள்ள
அரசியற் கட்சிகளின் தலைவர்களே இறுதியில்
அரசியற் றலைவர்களாயும் வருவார்கள். எந்தக்
கட்சிக்குச் சனங்களிடையே அதிக் செல்வாக்குண்
டோ அக்கட்சியின் தலைவரே அரசியற் றலைவரா
கத் தெரிந்தெடுக்கப்படுவர். ஆயின் ஆங்கில நாட்
டில் அரசியற் கட்சிகளுக்கும் அரசனுக்கும் எவ்
வித சம்பந்தமுமில்லை. அரசன் அரசியல் விவா
தங்களில் ஈடுபடுவதில்லை. சர்வ ஜனங்களும் அர
சன்மீது நம்பிக்கையுடையவர்களாயும் மரியாதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையவர்களாயும் காணப்படுவர். அரசியற் கட்சியினர் எவரும் அரசனுக்கு அமைவுடையோரே. அரசியற் கட்சிகளுக்கிடையே ஏற்படும் வலிமை காரணமாக, தனிப்பட்ட மந்திரிமாரையோ அல்லது முதன் மந்திரியையோ அன்றி முழு மந்திரி சபையையுமோ மாற்றி யமைக்கலாம். ஆனால் அரசன் மாற்றப்படுவதில்லை.

அரசன் தன் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் உரிமையுடையவனேயென (Earl of Balfour) வால்போர் பிரபு ஒருகாலத்திற் கூறியது மிகவும் பொருத்தமானதே. "அவர் தம் பிறப்புரிமையாலும் வகிக்கும் உன்னத பதவியினாலும் நம் நாட்டுச் சரித்திரமே ஓருருவெடுத்தாற்போன்றவரெனலாம். எமது அரசியலில் அரசன் முதன்மைபெற்றிருப்பதன் காரணமாக அவ்வரசியல் உறுப்புக்களிலமைந்திருக்கும் பிரசாதிபத்திய உரிமைகளில் எவ்வித குறையுமேற்படாது விடுவது மாத்திரமன்றி, அவற்றிற்கு முதன்மை கொடுக்கப்படுகின்றதெனலாம். அவர் எவ்வரசியற் கட்சித் தலைவருமாகார். ஒரு தனிப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதியுமாகார். அவரே எமது தேசத்தின் தலைவர். அவர் தனது பிரஜைகள் ஒவ்வொருவருக்கு மரசராவார்".

சமூகத்தின் தலைவர் அவரே யாகையால், பல்வேறு கடமைகளை அவர் செய்ய நேரிடுகின்றது. ஆங்கில நாட்டிலுள்ள பல சங்கங்கள், கல்வி நிலை



யங்கள் முதலியவற்றிற் கெல்லாம் அரசரே போஷகராவர். புதிதாகக் கட்டப்பெறும் முக்கியமான கட்டிடங்களின் திறப்பு விழாக்களுக்கெல்லாம் தலைமை வகித்தற்கு அவரே அழைக்கப்படுவார். வேறு ஜனசமூக இயக்கங்களிலும் தலைமை வகிப்பார். ஆங்கில நாட்டிலுள்ள சர்வ கலாசாலைகள், வைத்தியசாலைகள் முதலிய ஸ்தாபனங்களையெல்லாம் கண்ணுற்று, அவை சீர்பெற நடக்கின்றனவோ எனக் கவனிக்குமுரிமையும் அவர்க்குண்டு. மன்னர்பிரான் பாராளுமன்றத்தைத் திறந்துவைக்கும்போது அல்லது அதுபோன்ற பிரபல கருமங்களாற்றப் பவனி செல்லும்போது, பிரஜைகள் திரள் திரளாகக் குதூகலத்துடன் அவர் செல்லும் பாதையிற் குழுமி நின்று ஆர்ப்பரிப்பதைக் கண்ணுறின், அவர்மாட்டுப் பிரஜைகள் கொண்டுள்ள அமைவு எத்துணைத்தென நன்கு விளங்கும்.

அரசாங்கத்தாற் கொடுக்கப்படும் பட்டங்கள், விருதுகள் முதலியன அரசனாலேயே வழங்கப்படும். அப்பட்டங்களுக்கும் விருதுகளுக்கும் ஏற்றோர் இவரிவரெனத் தீர்மானிப்பது பிரதம மந்திரியேயாயினும் அவற்றை வழங்குவது அரசனைச் சார்ந்ததே. அரசியற் சட்டங்களுக்கு முரணாக நடந்தமையினாற் பிரஜைகளில் எவராவது தண்டிக்கப்பெறின், அதனை விலக்க அல்லது குறைக்க அரசனுக்கே உரிமையுண்டு. ஆயினும் அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையை அவர் உள் நாட்டு மந்திரியின் ஆலோசனையுடனேயே உபயோகிப்பார்.

அரசியலின் வெளிக்கருமங்களாய மேற்கூறியவைகளில் ஈடுபடுவது மாத்திரமன்றி ஆட்சிக் கருமங்களிலும் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பங்கள் உள. அரசியல் அவர் பேரிலேயே நடக்கும். மந்திரசபையில் நிறைவேற்றப்படும் (Orders-in Council) சட்டங்களும் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படைகளின் உத்தியோகங்களை வகுப்போரின் நியமனப் பத்திரங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களும் அரசனின் கைச்சாத்தைப் பெற வேண்டும். பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு விடுக்கப்படும் அழைப்புப் பத்திரம் மன்னன் பெயரினாலேயே வெளிப்படுத்தப்படும். இவ்வித ஆட்சிக் கருமங்களைக் கவனிப்பதில் அரசன் பகற்போது முழுவதையுஞ் செலவழிக்க நேரிடும். ஆங்கில அரசனது வாழ்க்கை அரசபோகங்களை நாடிச் சீவிக்கும் தரத்ததன்று. சிறு பராயந்தொட்டே அரசியற் கருமங்களைச் செய்வதில் அவர் பழக்கப்படுவார். நாடோறும் நடைபெறும் ஆட்சியில் மன்னன் ஈடுபடுதல் மறைமுகமாயேயெனினும் அவரது செல்வாக்கு மிகப் பெரிதே ஆகும். தனது தேசத்தின் நலனைக்கருதி முயற்சித்தற்கு அரசனுக்குப் போதிய சந்தர்ப்பங்கள் உள. அரசன்மாட்டுள்ள அமைவென்னும் இராச பக்தியே பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தின் அத்திவாரமாகும். ஆங்கில



நாட்டில் ஏற்பட்ட சமயாநுஷ்டானத் திருப்தியீனங்கள் காரணமாகத் தம் நாட்டை விட்டு அமெரிக்காவிற்குச் சென்று குடியேறிய (Pilgrim Fathers) சமய குருமாராய மூதாதையர் எனப்படுவோரும் தங்களைப் பிரித்தானிய மன்னரின் பிரஜைகளெனவே மதித்து நடந்தனர். இக்காலத்திலும் பிரித்தானிய சக்கராதிபத்தியத்திலடங்கிய எந்நாட்டவனும் பிரித்தானிய பாராளுமன்றத்து அங்கத்தவனாகும் உரிமை யுடையவனாவான். அவன் நம் நாட்டு மக்கள் போன்ற கருநிறத்தவனாயினும் அன்றி, வெண்ணிறத்தவனாயினும் அங்கத்தவனாதற்கு ஆங்கில நாட்டிற் குறித்த சிலகாலம் வசிக்க வேண்டும். பிரித்தானிய சக்கராதிபத்தியத்தின் சம உரிமை நாடுகளின் அந்தஸ்தில், சமீபகாலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, அந்நாடுகள் தமக்கிடையே எவ்விதத் தொடர்புமின்றி ஏனைய சுய அரசு நாடுகள் போன்று தனித்தனியாயின. அத்தொடர்பின்மையொழித்து அந்நாடுகள் ஒன்றோடொன்று தொடர்புறற் கேதுவாயிருப்பவன் அரசனே.

இக்கால அரசனாகிய **VI-ம் ஜோர்ஜ்** ஆங்கில நாட்டுக்கு மாத்திரமன்றி ஏனைய சம உரிமைநாடுகளுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் அரசனாவான் முந்திய அதிகாரத்தில் அரசனது பட்டங்களை விபரித்துக் கூறியதை நினைவு கூருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புக்கள்:

1. அரசர்க்கென விடுபொருள். (The Privy Purse)

1688-ம் ஆண்டு வரையும் ஆங்கில நாட்டின் சகல அரசிறை வருவாயும் அரசனுக்கே உடையதாக இருந்தது. அவ்வருடத்தில் அரசிறை வருவாயைச் செலவுசெய்யும் உரிமையைப் பாராளுமன்றம் தனதாக்கிக்கொண்டு, அரசனின் சொந்தச் செலவிற்காக ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கி வைத்தது. அன்றுதொட்டின்று வரையும் ஒவ்வோரரசனது ஆட்சித்தொடக்கத்திலும் (Civil List) 'சிவில் லிஸ்ற்' எனப்படும் பொருளொதுக்குத் திட்டமொன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். அதில் அரசர்க்கென விடுபொருளும் நீதிபதிகளின் வேதனங்களும் சேர்க்கப்பட்டிருக்கும். அரசனின் சொந்தச் செலவிற்காக விடப்படும் பொருளை அரசர்க்கென விடுபொருளெனப்படும். அப்பொருளைப் பரிபாலிக்கும் உத்தியோகஸ்தன் ஒருவனுளன். அவன் (Keeper of the Privy Purse) அரசர்க்கென விடுபொருட் பரிபாலகன் எனப்படுவன். அச்செலவுப் பணத்தின் பொறுப்பு அவ்வுத்தியோகஸ்தனைச் சார்ந்ததே.

2. புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அரசனால் விடுக்கப்படு மாணை, ஆங்கிலத்திற் பின்வரும் கருத்துப்படவுள்ளது:—

19........ ஆண்டு ................மாதம்........தேதியில் ........அரண்மனையில் மாக்ஷிமை தங்கிய மன்னன் முன்னிலையிற் கூடிய (Privy Council) பிறிவிக் கவுன்சிலில், தற்போது கடமை பார்த்துவரும் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பாராளுமன்றமொன்றைக் கூட்டுவதற்கு மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் எண்ணியமையினாலும், அந்நோக்கத்தைத் தமது (Proclamations) பேரறிவிப்பால் வெளியிட்டமையினாலும், தமது பிறிவிக்கவுன்சிலின் ஆலோசனையின்படியும் தீர்மானப்படியும் உவெஸ்ற்மினிஸ்ரர் பட்டணத்திற் புதிய பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குச் சட்டப்படி அறிவிப்புக்களை விடுத்து அப்பாராளுமன்றத்தைக் கூட்டும்படியாக, மன்னர்பிரான், பிரபுக்கள் மன்ற உயர்தலைவர் (Lord High Chancellor) ஆகிய ........................................................என்பவருக்குக் கட்டளையிடுகின்றார். அவ்வறிவிப்புக்கள்............ஆந ..... ......................மீ ........தேதியில் முடிவுபெறல் வேண்டும்.

3. புதிய பாராளுமன்றத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது பலருக்கு அங்கத்துவ உரிமை கொடுக்கும்படி, தேர்தலதிகார உத்தியோகஸ்தருக்குக் கொடுக்கப்படும் உத்தரவு ஆங்கிலத்திற் பின்வரும் கருத்தமைய விருக்கும்:—

"கடவுள் கிருபையால் VI-ம் ஜோர்ஜ் மன்னர் ..................................க்குத் தெரிவிப்பதாவது:— உவெஸ்ற்மினிஸ்ரரில் புதிய பாராளுமன்றமொன்றை ............தேதியில் கூட்டப்படவேண்டுமென்று நாம் கட்டளையிட்டமையாலும், அப்பாராளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தில் அங்கத்துவம் பெற விரும்புவோர் இன்ன நேரத்தில் இன்னவிடத்திலே தாம் தெரிவு பெற வேண்டிய முயற்சிகளி லீடுபட வேண்டுமென்று அறிவிக்கப் பட்டமையாலும் அவ்வவ் விடங்களிற் குறித்த நேரங்களிற் றேர்தல்களை நடாத்தி அவற்றிற் சித்தியெய்துவோரது பெயர்களை (சித்தியெய்துவோர் சமுகமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும்) நீர் எமது காரியாலயத்திற் பதிவு செய்யவேண்டுமென்று இதனாற் கட்டளையிடுகின்றோம்''.

### அப்பியாச வினுக்கள்.

1. மன்னர் பிரான் அரசுரிமையை எவ்வாறு பெறுகின்றார்?
2. 'அரசிறவாது' என்பதன் கருத்தென்னை?
3. ஆங்கில அரசனின் முழு உரிமைப் (Title) பட்டத்தையும் கூறு?
4. ஆங்கில அரசன் அரசியற்றுவதே யன்றி, அரசியலி லீடுபடுவதில்லை என்னுங் கூற்றை விளக்கி யெழுது?
5. 'அரசு பிழையாது' என்பதன் கருத்து யாது?
6. அரசன் தமது சக்கராதிபத்திய நாடுகளை ஒன்றேடொன்று தொடர்புறுத்துவ தெங்ஙனம்?
7. அரசன் ஈடுபடும் அரசியல் வெளிக் கருமங்களிற் சிலவற்றைக் கூறு?
8. 'சிவில் லிஸ்ற்' என்பது யாது?

---

5-ம் அதிகாரம்.

## பிரித்தானிய பாராளு மன்றம்.

பாராளுமன்றமே இராச்சியத்திற் சர்வ உரிமைகளையும் உடையது. அதுவே அரசியலின் முக்கிய அங்கமாகும். மன்னரும், பொதுமக்கள் மன்றமும் பிரபுக்கள் மன்றமுமாகிய இரு பாராளுமன்ற அங்கங்களும் சேர்ந்ததே பாராளு மன்றமெனப் பொதுவாகச் சொல்லப்படும்.

எவ்வித சட்டத்தையும் பாராளு மன்றம் இயற்றலாம். அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் பிரஜைகளின் கடமை.

பாராளுமன்றம் இயற்றும் ஒவ்வொரு சட்டத்திற்கும் தோற்றுவாய் பின்வருமாறு இருக்கும்:

"அதி உன்னத மேன்மை தங்கிய அரசரினதும் சமய பரிபாலனப் பிரபுக்கள், தேச பரிபாலனப் பிரபுக்கள், பொதுமக்கள் ஆதியோர் கூடிய பாராளு மன்றத்தினதும் சம்மதத்தையும், நிறைவேற்றத் தகுந்தது என அவர்கள் கூறிய அபிப்பிராயங்களையுங் கொண்டு மன்னர் பிரானல் கீழ் வருமாறு வகுக்கப்படுகின்றது.''

எவ்வித சட்டமும் பரிபாலனத்திற்கு வருமுன் அது சிலருடைய ஆதரவையும் அநுமதியையும் பெறவேண்டும். எச்சட்டத்திற்கும் மன்னர் அநுமதி வேண்டும். மன்னரைத் தவிர இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பகுதியாருடைய உத்தரவின்றி எச்சட்டமும் நிறைவேற்றப்பட மாட்டாது. அப்பகுதிகள் சமய பரிபாலனப் பிரபுக்கள், தேசபரிபாலனப் பிரபுக்கள், பொது ஜனங்கள் என்பனவாகும். இவைகள்தான் இராச்சியத்தின் (Three Estates of the Realm) மூன்று அங்கங்களாகும்.

தலைமை அத்தியட்சரும் அத்தியட்சர்களுமாகிய குருமார்களே சமயபரிபாலனப் பிரபுக்களெனப்படுவர்.

உயர்குடிப்பிறந்தோராயும் பெருநிலப்பரப்புடையோராயும் பரம்பரையாய் அரசியற் சம்பந்தமுள்ளவர்களே தேசபரிபாலனப் பிரபுக்களெனப்படுவர். மூன்றுவது அங்கமாயுள்ளவர் சாதாரண பிரஜைகளே.

சமயபரிபாலனப் பிரபுக்களையும் தேசபரிபாலனப் பிரபுக்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டசபையே பிரபுக்கள் மன்றமெனப்படும் சாதாரண பிரஜைகளின் பிரதிநிதிகள் சேர்ந்த சபையே பொதுமக்கள் மன்றமெனப்படும். இவைகளே பாராளுமன்றத்தின் இரு அங்கங்களாம்.

இராச்சியத்தின் மூன்று அங்கங்களான சமய பரிபாலனப் பிரபுக்கள் தேசபரிபாலனப் பிரபுக்கள் பொதுமக்கள் ஆகியோரும், இவற்றிற் கெல்லாம் கர்த்தாவாயுள்ள மன்னரும் ஒருங்கு சேர்ந்ததே **பாராளுமன்ற உயர் நீதிஸ்தல** மெனப்படும்.



பாராளுமன்றம் மிகப் பழமையானது. ஆங்கில நாட்டை ஆங்கிலோ சாக்ஸன் சாதியார் அரசாண்ட காலத்தில், நாடு சிறு பிரிவுகளாக்கப்பட்டு சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இச்சிற்றரசர்களை அல்லது அவர்களின் பிரதிநிதிகளை மன்னர் சமயோசிதமாய் அழைத்து அரசியல் விஷயங்களைப்பற்றி ஆலோசிப்பார். குறித்த ஆலோசனைச் சங்கத்திற்கு 'உவிற்ருனிசிமோட்' (Witanegemot) என்று பெயர். அச்சொல்லின் கருத்து அறிவுடையோர் சங்கமென்பதாம். சமய பரிபாலனத்தோடு சம்பந்தமான பிரதிநிதிகளும் மன்னரும் அரசியற் பிரதிநிதிகளும் ஆகிய நூறு அங்கத்தவர்களைக் கொண்டதே மேற்சொல்லிய சங்கமாகும். இச்சங்கம் மன்னருக்கு ஆலோசனை கூறும் உரிமையை மாத்திரம் உடையதாக இருந்தது. அக்காலங்களில் மன்னரே சட்டங்களை இயற்றும் கர்த்தாவும் அரசியல் முதல்வனும் ஜனங்களின் தலைவனுமாக விளங்கினர். எனினும் அவர் தனது இராச்சியத்தில் புத்தியிலும் அநுபவத்திலும் மேம்பட்டவர்களைக் கூட்டி அரசியல் விஷயங்களைக் குறித்தாலோசித்தார்.

பிரான்சைச் சேர்ந்த நோர்மன் சாதியார் ஆங்கில நாட்டைக் கைப்பற்றிய காலத்தில், நோர்மன் அரசர்கள் முந்திய 'உவிற்ருன்' எனப்பட்ட சங்கத்தை நீக்கி (The Great Council) மகாசபை என்னும் சங்கத்தை ஆக்கினர். அதனை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியபோது கூட்டுவர். அக்காலத்தில் கல்வியில் அதிக தேர்ச்சி பெற்றிருந்த (Bishops) அத்தியட்சர்களும் (Barons) பெருநிலப்பரப்பை உடையவர்களுமே அச்சங்கத்திற்கு அங்கத்தவர்களாயிருந்தனர். இந்த மகா சபையே சட்ட விரோதமாய் நடப்போரை விளங்கித் தீர்க்கும் உரிமையு முடையதாக இருந்தது. அன்றியும் இச்சபையே பிரபுக்கள் சபைக்கு ஆரம்பமாகும்.

இந்தச் சபையிற் சமயபரிபாலனப் பிரபுக்களும் தேசபரிபாலனப் பிரபுக்களும் மாத்திரமன்றிப் பொதுமக்களின் பிரதிநிதிகள் அங்கத்தவர்களாயிருக்கவில்லை.

1265-ம் ஆண்டு **சைமன் டி மோன்ற்போட்** என்ற லீசெஸ்ரர் நாட்டுத் துரைமகனின் (Noble) கேள்விக்கிணங்கி, மன்னர் பெருநிலப்பரப்பாளர்களையும் பொது ஜனங்களையுங் கூட்டி, இராச்சிய பரிபாலனத்திற்கு இவ்வளவு தொகைப் பணம் வேண்டுமென்றும் அவை எவ்வெவ் வகையிற் செலவழிக்கப்படுமென்றும் அறிவித்தார். இந்தச் சபையைக் கூட்டியபோதுதான் முதன்முதலாகச் சமயபரிபாலனப் பிரபுக்களும் தேசபரிபாலனப் பிரபுக்களுந் தவிர்ந்த மற்றைய பொது மக்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டனர். இதுவே ஆங்கிலப் பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவ ஆரம்ப காலமெனக் கொள்ளப்படலாம். **முதலாம்**



**எட்வேட் மன்னர்,** தான் தொடங்கிய யுத்தங்களை நிறைவேற்றப் பணஞ்சேகரிக்கும்பொருட்டு 1295-ம் ஆண்டு பாராளுமன்ற மொன்றைக் கூட்டினர். சமயபரிபாலனப் பிரபுக்கள், தேச பரிபாலனப் பிரபுக்கள், பொது ஜனங்கள் ஆகிய மூன்று பிரிவினருடைய பிரதிநிதிகளும் இப்பாராளு மன்றத்தில் அங்கத்தவராய் இருந்தனர். பிரபுக்களும் பொதுமக்களின் பிரதிநிதிகளும் இக்காலத்தில் வெவ்வேறு சபைகளின் அங்கத்தவர்களாயிருப்பது போலன்றி, முதலாம் எட்வேட் மன்னர் கூட்டிய (Model Parliament) ஆரம்ப பாராளு மன்றத்தில் ஒரே சபையில் அங்கத்தவர்களாய் இருந்தனர்.

மன்னருக்கு வேண்டிய பணங்களைப் பெறுவதற்கு வரிகளை விதிப்பதே ஆதியிற் பாராளு மன்றத்தின் கடமையாயிருந்தது. இக்காலத்திற் சட்டங்களை இயற்றுதலே பாராளுமன்றத்தின் முக்கியமான வேலையாக இருக்கின்றது. 'பாலிமென்ற்' என்ற பதம் பிரான்சிய பாஷையிலிருந்து பெறப்பட்டது. முற்காலத்தில் மன்னருக்கு ஆலோசனை கூறுவதே பாராளு மன்றத்தின் உரிமையாக இருந்ததே அன்றிச் சட்டம் இயற்றும் உரிமை இருக்கவில்லை. அக்காலத்தில் அரசியல் விஷயங்களை ஆலோசிக்க மன்னர் தலைமையிற் பாராளு மன்றம் கூடும். அக்காரணம் பற்றியே மன்றம் (The High Court of Parliament) பாராளுமன்ற உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிஸ்தலமெனப்பட்டது. இக்காலத்தில் பாராளு மன்றத்துக்கு மூன்று கடமைகள் உள்ளன. அவை யாவன:—


(1) தேவையான புதிய சட்டங்களை இயற்றுதலும், அநுசரணையில் இருக்கும் சட்டங்களிற் றிருத்தம்வேண்டின் அவற்றைச் செய்தலும்.

(2) மேற்கூறியபடி நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் செவ்வனே கையாளப்படுகின்றனவோ வெனப் பார்த்தல்.

(3) அரசியல் நிர்வாகத்துக்குத் தேவையான பணத்தைச் செலவழிக்க உரிமை கொடுத்தல்.

மேற்சபை அல்லது பிரபுக்கள் மன்றம், கீழ்ச் சபை அல்லது பொதுமக்கள் மன்றம் என இரு சபைகளை இப்போதுள்ள பாராளு மன்றம் கொண்டுள்ளது. மன்னரால் ஆரம்பிக்கப்படும்பொழுது அல்லது கலைக்கப்படும்பொழுது பாராளுமன்றத்தின் மேற்கூறிய இரு சபைகளும் ஒரே சமயத்தில் ஒரே இடத்திற் கூடும் வழக்கம் உண்டு. ஆனால், சாதாரணமாய்த் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்குப் பிரபுக்கள் சபை ஒரு மண்டபத்திலும் பொதுமக்கள் சபை வேறொரு மண்டபத்திலும் கூடும். லண்டனில் ஒரு பகுதியாகிய உவெஸ்ற்மினிஸ்றரில் தெம்ஸ்நதி தீரத்திற் பாராளுமன்றக் கட்டடங்கள் உள்ளன. ஒரு வருடத் தொடக்க முதல் இறுதிவரையும் பாராளுமன்றம் கடமையாற்றுதலை ஒரு (Session) 'செஷன்' எனச் சொல்வர். ஒவ்வொரு செஷன் முடிவிலும் மற்ற வருடம் ஆரம்





பிரித்தானிய பாராளுமன்றக் கட்டடம்.

பிக்குமுன், பாராளுமன்றம் மன்னரால் ஒத்திவைக்கப்படுவது வழக்கம். மற்ற எச்சபையைப் போலவும் பாராளுமன்றத்திற்கும் விடுமுறைக் காலங்கள் உண்டு. பாராளுமன்றத்தின் விடுமுறைக் காலத்தை (Recess) ஓய்வுகாலமென்பர். நாடோறும் கடமை முடிந்தவுடனும் விடுமுறைக் காலங்களிலும் பாராளுமன்றம் தனது கடமைகளை நிறுத்துகின்றது.

பாராளுமன்றம் ஐந்து வருடங்கள் கடமை பார்த்தபின் கலைக்கப்படும். அதன்பின் பொது மக்கள் மன்ற அங்கத்தவர் தேர்தல் நாடு முழு

வதும் நிறைவேறியபின் புதிய பாராளு மன்றம் கூட்டப்படும். பொது மக்கள் மன்றத்திற் பெரும் பாலான அங்கத்தவர்களது ஆதரிப்பினால் அரசியலை நடாத்தும் (Cabinet) 'கபினற்' எனப்படும் குழுவினர் தங்கள் பதவிகளைத் தாங்களாகவே விட்டுநீங்கினும் அன்றி, அவர்கள் பிரேரித்துள்ள முக்கிய பிரேரணை யொன்று அச்சபையிற் றோல்வி அடைந்தாலும் மேற்கூறிய ஐந்துவருட எல்லைக்கு முன் எந்தச் சமயத்திலும் பாராளுமன்றம் கலைக்கப்படும்.

பொதுமக்கள் மன்றம் தேர்தல் உரித்துள்ள மகா ஜனங்களாற் றெரிந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது. பிரபுக்கள் மன்ற அங்கத்தவர்களோ பெரும்பாலும் பரம்பரை உரிமை காரணமாக அங்கத்தவராவர்.

### அப்பியாச வினாக்கள்.

1. 'பாராளுமன்றம்' என்றால் என்ன?
2. சமய பரிபாலனப் பிரபுக்கள் ஆவார் யாவர்?
3. பிரபுக்கள் மன்றம் எவ்வாறு தோடங்கியது?
4. முதலாம் எட்வேட் மன்னர் அமைத்த பாராளுமன்றத்தை விவரித்துரைக்க?
5. பாராளுமன்றம் எப்போது தற்காலீகமாகக் கலைக்கப்படும்?
6. பாராளுமன்றம் எப்போது கலைக்கப்படும்?

---

6-ம் அதிகாரம்.

## பிரபுக்கள் மன்றம்.

பாராளு மன்றம் இருசபைகள் கொண்ட ஒரு ஸ்தாபனமென்பதை முன்பாடத்தின் மூலம் அறிந்தோம். அவ்விரு மன்றங்களுட் பொதுமக்கள் மன்றமே முக்கியமானது.

சமயபரிபாலனப் பிரபுக்கள் தேசபரிபாலனப் பிரபுக்கள் என்பவர்களே பிரபுக்கள் மன்றத்தின் அங்கத்தவர்களாவர். சமயபரிபாலனப் பிரபுக்கள் தொகை 26 ஆகும். அவர்கள் (Archbishops) இருதலைமை அத்தியட்சர்களும், (Bishops) ஏனைய அத்தியட்சர்களுமாவர்.

கன்றர்பெரி தலைமை யத்தியட்சரும், யோர்க் தலைமை யத்தியட்சரும், லண்டன், வின்செஸ்ரர் டேர்ஹம் ஆகிய மூன்று பட்டணங்களின் அத்தியட்சர்களும் எப்போதும் அங்கத்தவர்களாக இடம்பெறுவர். எஞ்சிய 21 பேருடைய இடங்களும் பிரித்தானிய நாட்டின் மற்றைப் பாகங்களில் அத்தியட்சர்களாகக் கூடிய காலம் கடமையாற்றியவர்களுக்கே உரியன. முற்காலத்திற் பிரித்தானிய நாட்டில் 26 அத்தியட்சர்கள் மாத்திரம் இருந்தமையால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இச்சபையில் அங்கத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால், ஜனத்தொகை அதிகரிக்க அத்தியட்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தொகையு மதிகரித்தது. எனினும் 26 அத்தியட்சர்களுக்கு மாத்திரமே பிரபுக்கள் மன்றத்தில் அங்கத்துவம் உண்டு.

சமயபரிபாலனப் பிரபுக்களுக்கு அங்கத்துவ உரிமை அவரவர் சீவியகால மட்டுமேயன்றி, அவரவரது பிற்சந்ததியாருக்குரியதன்று. அவர்கள் தங்கள் சமயபரிபாலனத் தொழில்களிலிருந்து நீங்கும்போது இச்சபை அங்கத்துவனின்றும் நீங்குவர். தேசபரிபாலனப் பிரபுக்கள் ஐக்கியராச்சியத்திலுள்ள பரம்பரைப் பிரபுக்களேயாவர். இப்பரம்பரைப் பிரபுக்களில் ஐந்து வகுப்பினருண்டு. மன்னருக்கு அடுத்தபடியாய் உள்ளபிரபுக்கள் கோமக்கள் (Dukes) ஆவர். அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஆண்களே பெரும்பாலும் கோமக்கள் ஆவர். உதாரணம்:— வின்ஸர் கோமகன், குளோசெஸ்ரர் கோமகன், கென்ற் கோமகன் ஆகிய மூவரும் மன்னரது சகோதரராவர். கொனேற் கோமகன் மன்னரது தந்தையாரின் சிறியதகப்பன். **டியூக்ஸ்** எனப்படும் கோமக்களுக்கு அடுத்தபடியாய் உள்ளவர்கள் **மார்க்குவெஸஸ்** எனப்படுவர். அவர்களுக்கு அடுத்தபடியாய் உள்ளவர்கள் (Earls) **'ஏர்ல்ஸ்'**, (Viscounts) **வைக்கவுன்ற்ஸ்**, (Barons) **வாரன்ஸ்** எனப்படுவர். பிரித்தானியப் பிரபுக்களோடு ஸ்கொத்திலாந்துப் பிரபுக்களாற் றமக்குள்ளே தெரிந்தெடுக்கப்பட்ட 16 பிரபுக்கள் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாவர்.



ஸ்கொத்திலாந்து நாட்டுப்பிரபுக்கள் பாராளுமன்றம் தொடங்குமுன் **ஹொலிறூட்** அரண்மனையிற் கூடித் தங்களுள் 16 பேரைப் பிரபுக்கள் மன்றத்துக்கு அங்கத்தவராகத் தெரிவர். ஐரிஷ் சுயாதீனநாடு தாபனமானபோது அந்நாட்டுப் பிரபுக்களாகச் சிலர், அவர்களது சீவியகாலம்வரையுமே பிரபுக்கள் மன்றத்தின் அங்கத்தவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். 1929-ம் ஆண்டின் பின் ஐரிஷ் நாட்டுப் பிரபுக்களின் தொகையிற் குறை வேற்பட்டால் அவர்களின் இடத்திற்கு வேறு பிரபுக்களைத் தெரிவு செய்வதில்லை. ஆனல் அல்ஸ்ரர் மாகாணப் பிரபுக்கள் பிரித்தானிய பிரபுக்கள் சபையில் அங்கத்துவம் பெறுவர்.

பிரபுக்கள் சபை **சிவில், கிறிமினல்** வழக்குக்களைத் தீர்க்கும் கடைசி அப்பீல் கோடாகவும் கடமை யாற்றும். இந்தத் தொழிலைச் செய்வதற்காக **ஏழு நீதிபதிகளைப்** பிரபுக்கள் சபைக்கு அங்கத்தவர்களாகத் தெரிந்தெடுத்துச் சீவியகாலம்வரையும் கடமையாற்ற விடுவர். அவர்கள் சட்டப் பிரபுக்கள் எனப்படுவர். பிரபுக்கள் சபை அப்பீல் கோடாகக் கடமை செய்யும்போது **'லோட் சான்சலர்'** என்பவர் அதற்கு அக்கிராசனராவார். அவரேயன்றி, முன் கூறிய சட்டப் பிரபுக்களும் உயர்தர நீதிபதிகளாக விருந்தநுபவம் பெற்ற வேறு பேரிருந்தாலவர்களும் இக்கோட்டின் அங்கத்தவராவர். சட்டப் பிரபுக்கள் வேதனம் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னராற் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டாலன்றி எவரும் பிரபுக்கள் சபையில் அங்கத்தவராயிருந்து கடமை செய்ய வியலாது. உதாரணம்:- சிலகாலத்தின்முன் வங்காள நாட்டினராகிய **சேர் S. P. சின்கா** (Sir. S. P. Sinha) என்பவரை ஒரு பிரபு ஆக்கினார்கள். அவர் தன் சீவிய காலத்திற் பிரபுக்கள் சபையில் அங்கத்தவராயிருந்து இறந்ததும், அவரது மகன் சின்கா பிரபு என்பவர் தந்தையாரின் இடத்தில் பிரபுக்கள் மன்றத்தின் அங்கத்தவராக முடியாமற் பல வருடங்கள் தாமதித்து, சமீபகாலத்திலேதான் அவ்வித இடம் பெறக் கூடியதாயிற்று. காரணமென்னவெனின், தந்தையாருடைய உரிமையைப்பெற அருகதையுடையவரென்பதை மன்னருக்கு நிரூபிக்கப் பலவித சான்றுகளும் தெரியப்படுத்த வேண்டியிருந்ததே.

பிரபுக்கள் மன்றத் தலைவர் **லோட் சான்சலர்**. அவரே சபைக் கூட்டங்களுக்கு அக்கிராசனர். பொதுமக்கள் மன்ற அக்கிராசனர் (Speaker) அச்சபை அங்கத்தவர்களாலே தெரிவுசெய்யப்படுவர். ஆனால், பிரபுக்கள் சபையின் அக்கிராசரான **லோட் சான்சலர்** பிரதம மந்திரியால் நியமிக்கப்படுவர். முற்காலங்களில் இராசமா விகிதர்களில் முதன்மையானவரே **லோட் சான்சலர்** ஆவர். அவரே பிரதம குரு (Chief Chaplain) ஆயும் மன்னரின் முத்திரைப் பாதுகாவலனாயுமிருந்தார். இக்காலத்தில் லோட் சான்சலர் உத்தியோகம் சட்டநிபுணரான ஒருவருக்கே கொடுக்கப்படுகின்றது.



பிரதம நீதிபதி யொழிந்த ஏனைய நீதிபதிகளொவ்வொருவரும் லோட் சான்சலராலேயே நியமிக்கப்படுவர். பிரதம நீதிபதியைப் பிரதம மந்திரியே நியமிப்பர்.


பிரபுக்கள் சபையின் சாதாரண கூட்டங்களுக்கும் அது அப்பீல் கோடாகக் கடமை யாற்றும்போதும் லோட் சான்சலரே அக்கிராசனராவர். அவர் பொறுப்பிலேயே இராச்சியத்தின் (Great Seal) மகா முத்திரை யிருக்கும்.

லோட் சான்சலர் பிரபுக்கள் மன்றத்தில் அக்கிராசனராயிருக்கும் இடத்திற்கு (Wool Sacks) **கம்பளிப்பை** யெனப் பெயர். அது கம்பளியடையப்பட்டுச் சிவப்புநிறச் சீலையால் மூடப்பட்ட ஒரு மெத்தையாகும். முற்காலத்தில் ஆங்கிலநாட்டு வருமானம் பெரும்பாலும் கம்பளியை யேற்றுமதி செய்ததனாற் கிடைத்த தென்பதை அடையாளமாகக் காட்டவே இவ்வண்ணம் இவ்வாசனம் அமைக்கப்பட்டது.

ஆங்கிலநாட்டுப் பத்திரிகைகளிற் சிலகாலத்தில் "லோட் சான்சலர் பிற்பகல் 3 மணி 45 நிமிஷத்தில் (Wool Sack) கம்பளிப் பையில் உட்கார்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின் இரேப்ரஸ்ட— மக்களசபை.



தார்'' என்று அச்சிடப்பட்டிருப்பதைக் காணலாம். பிரபுக்கள் சபை அந்த நேரத்தில் ஆரம்பமான தென்பது அதன் கருத்தாகும்.

லோட் சான்சலருடைய கம்பளி ஆசனத்தின் பின்புறமாக உயர்ந்த மேடையில் மன்னர்பிரான் அமர்ந்திருக்க அமைத்த சிம்மாசனமிருக்கும். அத னருகில் இராணிக்கும் ஆசனமுண்டு. மன்னர் பிரான் பாராளுமன்றத்தைத் திறக்கும்போதெல் லாம் இதிலிருந்தே திறப்பு விழாவைச் செய்வர்.

பாராளுமன்றம் இப்போது (Feburary— December) மாசிமாதம் தொடக்கம் மார்கழிமாதம் வரையும் கூடும். ஆனல், ஆவணி மாதத்துக்கும் கார்த்திகை மாதத்துக்குமிடையில் ஒரு நீண்ட ஓய் வும் ஈஸ்ரர் காலத்திலும் 'உவிற்சன்' (Whitsun) காலத்திலும் ஒரு சுருக்கமான ஓய்வும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலின் பின் கூடும் புதிய பாராளுமன்றத்தையும் அப்பாராளுமன்றத் தின் ஒவ்வொரு வருட ஆரம்பக் கூட்டத்தையும் மன்னர்பிரான் திறந்து வைப்பார். அத்திறப்பு விழாவிற்கு மன்னரும் இராணியும் தங்கள் தங் கள் இராஜரீக உடைகளையும் முடிகளையு மணிந்து கொண்டு அரண்மனையிலிருந்து பகிரங்கமாய்ப் பவ னிசென்று பாராளுமன்றக் கட்டடத்தை அடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர். பிரபுக்கள், அத்தியட்சர்கள், நீதிபதிகள், பிரபுக்களின் தம்பதிகள் ஆகிய சகலரும் தத்தமக்குரிய இராஜரீக உடைகளை அணிந்திருப்பர். திறப்புவிழாவின் போதெல்லாம் பிரபுக்கள் சபை மண்டபம் மிகவுங் குதூகலத்துடனும் வேடிக்கையுடனும் காணப்படும். மன்னரும் இராணியும் பிரபுக்கள்சபை மண்டபத்தைச் சேர்ந்ததும் தங்கள் சிங்காசனங்களிலிருந்தபின், பொதுமக்கள் மன்ற அங்கத்தவர்களை அங்கு வருமாறு மன்னர் ஆஞ்ஞாபிப்பர். கறுப்புக் கோல் (Black Rod) தாங்குபவரென்னும் பழமையான பேருடைய ஒரு உத்தியோகத்தர் உடனே பொதுமக்கள் மன்றத்துக்குச் சென்று மன்னர் ஆஞ்ஞைப்படி அவர்களை வருமாறு அழைப்பர். பொதுமக்கள்மன்ற அங்கத்தவர்கள் தங்கள் தலைவர் முன் செல்ல வந்து, பிரபுக்கள் சபையின் (Bar) 'வார்', எனப்படுமிடத்தில் நிற்பர். அதன்பின் மன்னர் தனது உபந்நியாசத்தை வாசித்துவிட்டு உடனே சபையைவிட்டேகுவர். மன்னரது உபந்நியாசத்தைப் பிரதம மந்திரியே எழுதிக் கொடுப்பது வழக்கம். அதில், அவ்வச் சமயம் கடமையாற்றும் (Cabinet) அரசாங்கத்தார், பாராளு மன்றத்தின் அடுத்த திறப்புவிழா வரையும் எவ்வித கருமங்களை நிறைவேற்ற முயலுவார்களெனக் கூறுவதுமன்றி, அந்நிய நாடுகளுடன் பிரித்தானிய நாட்டுக்குள்ள நட்புப் பேதங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கும்.



இராஜ உபந்நியாசம் முடிந்ததும் பொதுமக்கள் மன்றத்தவர் தங்கள் மண்டபத்தை அடைவர். பின்னர் இரு மன்றங்களின் அங்கத்தவர்களும் தனித்தனியே இராஜ உபந்நியாசத்துக்கு மறுமொழியாகச் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையை ஆயத்தஞ்செய்வதைப் பற்றி விவாதிப்பர். இந்த விவாதத்தின்போது இரு சபைகளின் அங்கத்தவர்களும் இராச உபந்நியாசமூலம் அரசாங்கத்தார் கூறியுள்ள தம் நோக்கம் குறித்து அபிப்பிராயங் கூறுவர். 1911-ம் ஆண்டுக்கு முன் பிரபுக்கள்மன்றத்துக்கும் பொதுமக்கள் மன்றத்துக்கும் சமமான உரிமைகளிருந்தன. அதாவது, பொதுசன சபை எவ்வெக் கருமகளைச் செய்யலாமோ, பிரபுக்கள் சபையும் அவ்வாறு செய்யலாம். ஆனல், **1911-ம் ஆண்டின் பாராளுமன்றச்சட்டம்** (Parliament Act) என்ற ஒரு சட்ட மேற்படுத்தப்பட்டது. இப்போது பண சம்பந்தமான எந்தப் பிரேரணையையும் பிரபுக்கள் சபை திருத்தம் செய்யவியலாது. கீழ்ச் சபை யெனப்படும் பொதுமக்கள் மன்றத்தவர் தீர்மானித் தனுப்பும் பண சம்பந்தமான தீர்மானங்களை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அன்றேல், ஒரு மாதத்துக்குள் ஒப்புக் கொள்ள முடியாதெனத் தீர்மானிக்க வேண்டும். அவ்வண்ணம் பிரபுக்கள் மன்றம் பணச்சம்பந்தமான பிரேரணையை ஒப்புக்கொள்ளத் தவறின், அப்பிரேரணை பிரபுக்கள் மன்ற ஆதரவின்றியே மன்னரது அநுமதி பெற்றுச் சட்டமாகும். அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் அமைப்பு முறையோடு சம்பந்தப்பட்ட விஷயங்களைக் குறித்தும் பொதுமக்கள் மன்றத்திற்கு அங்கத்தவர் தெரியும் முறையைக் குறித்தும் பண பரிபாலன விஷயங்களைக் குறித்தும் பிரபுக்கள் மன்றம் சட்டமியற்ற முயற்சிக்க லாகாது.

மேற்குறித்த விஷயங்களோடு தொடர்பில்லாத வேறு சட்டங்கள் பொதுமக்கள் மன்றத்திலிருந்து பிரபுக்கள் மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்பொழுது பிரபுக்கள் மன்றத்தவர் அவற்றை இருமுறை நிராகரிக்கலாம். அவ்வாறு இருமுறை நிராகரிக்கப்பட்ட சட்டப் பிரேரணையை, மூன்றாம் முறையும் அப்படியே பொதுமக்கள் மன்றம் பிரபுக்கள் மன்றத்திற்கு அனுப்பினால், பிரபுக்கள் மன்றம் அதனை ஒப்புக்கொள்ள வேண்டும். அதனை நிராகரித்தால் அச்சட்டம் பிரபுக்கள் மன்றத்தின் எதிர்ப்பைக் கவனிக்காது மன்னரால் அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமாகும்.

பாராளுமன்றச் சட்டமொன்று பிரபுக்கள் சபையினால் அங்கீகரிக்கப்படாமல் நிறைவேறின், அதன் தோற்றுவாய் பின் வருமாறிருக்கும்:—

> "இந்தப் பாராளுமன்றத்திற் கூடியிருக்கும் பொதுசன சபையாரின் ஆலோசனையின்படியும் அங்கீகாரத்தின்படியும், 1911-ம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்தின்படியும் அதியுன்னத மேன்மை தங்கிய மன்னர்பிரானால் பின்வருமாறு ஆஞ்ஞாபிக்கப்படும்."



பொது மக்கள் மன்றம் இயற்றும் சட்டங்களிற் றிருத்தங்கள் செய்யவேண்டின் அவற்றைச் செய்வதும், அவை தகுந்த ஆலோசனையின்றி நிறைவேற்றப்பட்டால் அவற்றிற்குத் தடையாய் இருப்பதுமே பிரபுக்கள் சபையின் முக்கிய கடமை. பிரபுக்கள் மன்ற அங்கத்தவர்கள் பொது மக்கள் மன்றத்து அங்கத்தவர்களைப்போல் அடிக்கடி மாறும் தன்மை யுடையவ ரல்லர். அதனால் இச்சபையாரின் அபிப்பிராயங்கள் ஸ்திரமானவையும் ஆராய்வானவையுமாய் இருக்கக்கூடும். பொதுமக்கள் மன்றத்தில் நெடுங்கால அனுபவம் பெற்ற பிரமுகர்கள் முதிர்ந்த வயதானதும் பிரபுத்துவம் கொடுக்கப்பட்டுப் பிரபுக்கள் மன்றத்துக்கு அங்கத்தவராய் நியமிக்கப்படுவதால், அவர்களது நீண்டகால அநுபவமும் ஆராய்வான புத்தியும் அரசியலிற் பயன்படக் கூடியதாகும்.

பொதுமக்கள் மன்றத்திற் பெண்கள் அங்கத்துவம் பெற்றிருந்தபோதும் பிரபுக்கள் மன்றத்தில் அங்கத்துவம் பெறார். பிரபுக்கள் மன்றத்தில் விவாதம் நடக்கும்போது பேச்சாளர்கள் பழையகால முறைகளைப் பின்பற்றியும் உயர்குலத்தோருடைய சம்பிரதாயங்களைக் கைவிடாதபடியும் பேசுவார்கள். கீழ்ச்சபையைக் குறிப்பிட வரும்போதெல்லாம் அச்சபையின் பெயர்சொல்லாமல் "மற்றையவிடம்" என்று பேசுவார்கள். பிரபுக்கள் சபையை அரசாங்க அங்கங்களில் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமற் கலைத்துவிடவேண்டுமென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். இன்னுஞ் சிலர் அதற்கு மாறாய் இருக்கிறார்கள். உலகத்திற் சீர் திருந்திய அரசியல் நடக்கும் ஒவ்வொரு தேசத்திலும் சட்ட சபைகள் இவ்வண்ணம் இருதிறப்பட்டிருத்தலைக் காணக்கூடும். அவ்வாறாய நாடுகளில் இரண்டாவது சபை முக்கியமான கருமங்களைச் செய்வதாகவே தெரிகிறது. சில நாடுகளில் இரு சட்டசபைகளும் வாக்குரிமை பெற்ற ஜனங்களாற் றெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை அங்கத்தவர்களாய்க்கொண்டன. ஆயினும் மேற்சபையின் அங்கத்தவர்கள் கீழ்ச்சபையின் அங்கத்தவர்களினும் கூடிய காலம் அங்கத்துவம் பெற்றிருப்பர். அதாவது மேற்சபையின் அங்கத்துவத் தேர்தல் கீழ்ச் சபையின் அங்கத்துவத் தேர்தல் நடப்பதுபோல் அடிக்கடி நடப்பதில்லை.

சமீப காலங்களில் பிரித்தானியாவில் பிரபுக்கள் வகுப்பைச் சேராதவர்களாயிருந்தும், வாழ்க்கையின் பல துறைகளில் மேம்பாடடைந்துள்ள பல பெரியார்கள் பிரபுக்களாக்கப்பட்டதினால் இப்போதுள்ள பிரபுக்கள் சபையிற் புதிய இரத்தம் கலந்திருக்கிறதெனலாம்.

கீழ்ச்சபையிற் சட்டம் இயற்றும் முறைப்படியே மேற்சபையிலும் சட்டம் இயற்றப்படும். எவ்வாறெனில், பிரேரணையில் இருக்கும் சட்டம் மூன்று



முறை பிரேரிக்கப்பட்டு அநுமதிக்கப்படுவதும் "கொமிற்றி" யால் ஆராயப்படுவதும் அக்கொமிற்றியால் முழுச்சபைக்கும் அறிக்கை செய்யப்படுவதுமாகிய ஐந்து படிகளில் ஒரு சட்டம் நிறைவேறும். இந்தச் சட்டநிரூபண முறையைப்பற்றிப் பின்வரும் ஒரு அத்தியாயத்தில் ஆராயப்படும். கீழ்ச் சபையிலுள்ள அங்கத்தவர்கள் எவ்விதம் வெவ்வேறு அரசியற் கட்சிகளைச் சார்ந்தவர்களாய் இருக்கிறார்களோ அவ்விதமே பிரபுக்கள் சபை அங்கத்தவர்களும் வெவ்வேறு அரசியற் கட்சிகளைச் சேர்ந்திருப்பர்.

### அப்பியாச வினாக்கள்.

1. பிரபுக்கள்சபை யங்கத்தவர்க ளாவார் யாவர்?
2. அவர்கள் செய்யும் முக்கிய கருமங்க ளேவை?
3. சான்சலர் பிரபுவின் கடமைகளை விபரித் தெழுது?
4. பிரபுக்களின் வெவ்வேறு பிரிவுக ளேவை?
5. கம்பளிப்பை என்று லென்ன?
6. இராச உபந்நியாச மென்பது யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7-ம் அதிகாரம்.

# பொதுமக்கள் மன்றம்.

உயர்குடிப் பிறந்தாராகிய பிரபுக்கள் (Nobles or Peers) ஒழிந்த ஏனைய ஜனங்களினது பிரதிநிதிகளை உடைமையினல் பாராளுமன்றத்துக் கீழ்ச்சபை என்னு மிச்சபைக்குப் பொதுமக்கள் மன்றம் எனப் பெயரிட்டார்கள். பொதுமக்கள் மன்றத்தின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் ஜனங்களாற் றெரிந்தெடுக்கப்படுபவரே. சாதாரண வழக்கிற் பாராளு மன்றம் எனப்படுவது இச்சபையைக் கருதியேயாம்.

இப்பொதுமக்கள் மன்ற அங்கத்தினர் தொகை 615 ஆகும். அவர்களில் 492 பேர் இங்கிலாந்திற்கும் 36 பேர் உவேல்ஸ் நாட்டிற்கும் 74 பேர் ஸ்கொத்லாந்து நாட்டிற்கும் 13 பேர் வட அயர்லாந்து நாட்டிற்கும் அங்கத்தினராவர். அவ்வப்பகுதிகளிலுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் என்னும் இரு பாலாரும் இவ்வங்கத்தினரைத் தெரிவுசெய்யும் உரித்துடையர். மேற்குறித்த நாடுகள் ஒவ்வொன்றும் பாராளுமன்ற அங்கத்தினரைத் தெரிவுசெய்வதற்காகச் சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முற்காலத்திலே செல்வந்தரும் செல்வாக்குள்ளவருமானவரே தெரிவுரித்தைப் பெற்றிருந்தனர். இப்போது இளமை நீங்கிய மக்



கள் (Adults) யாவரும் அவ்வுரித்தைப் பெற்றிருக்கின்றனர்.

சாதாரணமாக, பாராளுமன்றம் ஐந்து வருடங்களுக்கே கடமையாற்றும். இவ்வைந்து வருடங்களுக்கிடையிலும் அம்மன்றம் கலைக்கப்படலாம். அவ்வாறு கலைக்கப்பட்டபின்னும், அன்றி ஐந்து வருடங்களின் பின் கலைக்கப்பட்டபோதும் புதிய பாராளுமன்ற அங்கத்தவர் தேர்தல் நிகழும்.

இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து, உவேல்ஸ், வட அயர்லாந்து என்னும் நாடுகளிற் குடிக்கப்பட்ட ஒருகால வெல்லைக்குள் வசித்தோர், பிரித்தானிய சசக்கராதிபத்தியத்து ளடங்கிய எந்நாட்டவராயினும் இப்பாராளுமன்ற அங்கத்துவம் பெறலாம். புத்தி சுவாதீனமற்றவர்களும் கடனிறுக்க வழியற்றவர்களும் ஆங்கில திருச்சபையிலாவது கத்தோலிக்க திருச்சபையிலாவது குருத்துவம் உடையோரும் அவ்வுரிமையைப் பெறூர். பாராளுமன்ற அங்கத்தவர்களொவ்வொருவரும் 600 பவுண் (மாதம் 750 ரூபா வரையில்) வேதனமாகப் பெறுவர். பாராளுமன்ற அங்கத்தினர் ஒருவர் அவ்வங்கத்துவத்திலிருந்து தம்மிஷ்டப்படி விலகிக்கொள்ள முடியாது. எனினும், விலகவேண்டிய அவசியம் ஏற்படின், (Chiltern Hundreds) 'சில்ரேண் கன்றஸ்' எனப்படும் கிராமத்தினது அல்லது பண்ணைக்காரனது வீட்டின் மேற்பார்வை யுத்தியோகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தனக்குக் கொடுக்கும்படி விண்ணப்பஞ் செய்யவேண்டும். அத்தகைய விண்ணப்பம் ஒருபோதும் மறுக்கப்படுவதில்லை. ஒரேசமயத்தில் ஒருவர், வேதனமுடைய அரசியல் உத்தியோகத்தையும் பாராளுமன்ற அங்கத்துவத்தையும் பெற்றிருக்கமுடியாதாகையாற் பாராளுமன்ற அங்கத்துவத்தினின்றும் நீங்குவர்.

பாராளுமன்ற அங்கத்தினர் நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளிலொன்றிற் சேர்ந்திருப்பர். இப்போதுள்ள அரசியல் கட்சிகளாவன:— பிற்போக்குக் கட்சி யெனப்படும் கொன்சவேற்றிவ் (Conservative) கட்சியும், தேசீயத் தொழிலாளர் (National Labour) கட்சியும், தேசீய மிதவாத (National Liberal) கட்சியும், தொழிலாளர் கட்சியும், மிதவாதக் கட்சியும் ஆகும். சிலகாலத்தின்முன் கொன்சவேற்றிவ் எனப்படும் பிற்போக்குக் கட்சி, மிதவாதக்கட்சி, தொழிலாளர் கட்சியென மூன்று அரசியற் கட்சிகளே யிருந்தன. ஆயினும் தொழிலாளர் கட்சித் தலைவராய் இருந்த **ராம்சே மக்டோனல்ட்** என்பவர் அக்கட்சியின் தனியாட்சியை மாற்றி (National Govt.) தேசீய ஆட்சியை நிறுவ முயன்றபோது, அவரது கட்சியாய தொழிற்கட்சியும், மிதவாதக்கட்சியும் பிளவுற்றுத் தேசீயத்தொழிற்கட்சி, தொழிலாளர்கட்சி, தேசீய மிதவாதக் கட்சி, மிதவாதக் கட்சியென நான்கு பகுப்புக்களாயின. இந்நான்கு கட்சிகளுள், தேசீயத் தொழிலாளர் கட்சியினரும் தேசிய மிதவாதக் கட்சியினரும் **மக்டோனல்ட்** என்பவர் நிறுவிய தேசீய ஆட்சியை யாதரித்தனர். மேற்கூறிய அரசியற் கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினரொழிந்த சில சுயாதீன அங்கத்தினருமுளர்.



மேற்கூறிய கட்சிகளெல்லாம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுத் தேசம் முழுவதும் கிளை ஸ்தாபனங்களை யுடையனவாயிருக்கின்றன. ஒவ்வொரு கட்சியும் தமக்கெனப் புதினத்தாள்களை வெளியிடும். பாராளுமன்றப் பொதுத்தேர்தல் சமீபித்ததும் மேற்கூறிய கட்சிகளின் அங்கங்களெல்லாம் அதற்காக மிகவும் துரிதமாக முயற்சிக்கும். ஒவ்வொரு கட்சியினதும் குழுவினர் ஆலோசனைக் கூட்டங்களைக்கூடித் தத்தம் கட்சிகள் அடுத்து வரும் பாராளுமன்றத்தில் எவ்வித அரசியல் நிருமாணங்களை நிறைவேற்றுவதாகச் சனங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமெனத் தீர்மானிப்பர் அவ்வாறு தீர்மானித்ததும் அவைகளைத் தேர்தற் பிரசுரங்களின் மூலம் மகா ஜனங்களுக்குத் தெரிவிப்பர்.

ஏறக்குறைய ஒவ்வொரு தேர்தற் றொகுதியிலும் நாட்டிலுள்ள பல அரசியற் கட்சிகளினதும் சார்பாக அபேட்சகர்கள் முன்வருவர். அபேட்சகர் நிர்ணயத்தினத்திற்கும் தேர்தற்றினத்திற்கும் இடையேயுள்ளகாலத்தில் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியினரும் தத்தம் அபேட்சகர் சித்தியெய்தும் பொருட்டுப் பிரசுரங்கள் மூலமாயும் வேறுவழிகள் மூலமாயும் தத்தம் அரசியற் கொள்கைகளை வாக்காளர் அங்கீகரிக்கும்படி செய்வதுமன்றி, எதிர்க் கட்சியினரின் கொள்கைகளை நிராகரிக்கவும் முயலுவார்கள்.

அபேட்சகருள் எவர் பிரதிநிதியாகப் பாராளு மன்றத்தில் அங்கத்தவராக வேண்டுமென தீர்மானிக்கு முரித்து வாக்குரிமை பெற்ருேர் மாட்டேயுள்ளது. எந்த அபேட்சகர் தொகையாற் கூடிய வாக்குக்களைப் பெறுகின்ருரோ அவரே பிரதிநிதியாவர். அபேட்சகராக விரும்புவோர் ஒவ்வொருவரும் (150 பவுண்) ஒருதொகைப் பணத்தை அரசாங்கத்தாரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தேர்தலன்று வாக்குக்கொடுத்த வாக்காளரின் தொகையில் எட்டிலொரு பகுதியினரின் அங்கீகாரத்தைப் பெருத அபேட்சகர் மேற்குறித்த கட்டணப்பணத்தை யிழந்துவிடுவர்.

தேர்தலுக்கு வேண்டற்பாலனவாய கருவி கருத்தாக்களைக் குறித்துச் சிறிதாராய்வாம். வாக்காளர் வருடமிருமுறை அட்டவணையிற் பதிவு செய்யப்படுவார்கள். ஒவ்வொரு தேர்தற் ருெகுதியிலும் வாக்காளர் பதிவதிகாரியும், தேர்தல் அதிகாரியுமென இரு அதிகாரிகளுளர். தேர்தல் அதிகாரியாய் உள்ளவர் தம் பகுதியிற் றேர்தலை நடத்



தும்படி கட்டளையிடப்பட்டதும், பிரசித்த விளம்பரங்கள் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும் தேர்தல் அபேட்சகர்களுக்குரிய பத்திரங்களைப் பெறுவதற்கு நாளும் நேரமும் குறித்து விளம்பரப் படுத்துவார். ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள எந்த வாக்காளனும் அத்தொகுதிப் பிரதிநிதியாக வருதற்குரிமை யுள்ளோரெவரையும் அபேட்சகராக நியமிக்கும் உரிமையை உடையன். நியமனத்தினத்தன்று ஒரு அபேட்சகர் மாத்திரம் நியமிக்கப் படுவராயின், அவரே அத்தொகுதியின் பிரதிநிதியாவா ரெனத் தேர்தலதிகாரி தீர்மானிப்பர். அன்றிப் பல அபேட்சகர் நியமிக்கப் பெறின், தேர்தலதிகாரி தேர்தலுக்காகவேண்டிய ஒழுங்குகளைச் செய்வார். தேர்தற்றினத்தைக் குறித்து, அன்று அத்தொகுதியில் எவ்வெவ்விடங்களில் வாக்காளர்கள் சென்று தங்கள் வாக்குக்களைக் கொடுக்கலாமெனவும் அவர் தெரிவிப்பார் வழக்கமாகத் தேர்தல் ஒரேநாளில் நாடு முழுவதிலும் நடக்கும். தேர்தற் சீட்டில் அபேட்சகர்களின் பெயர்களும் அவர்களைக் குறித்த சிலவிபரங்களும் அச்சிடப்பட்டிருக்கும். இத்தேர்தல் சீட்டுக்களெல்லாம் அயற் பிரதிகளுடன் நூறு நூருகப் புத்தக ரூபமாகக் கட்டப்பட்டிருக்கும். அவைகளில், சீட்டு ஒவ்வொன்றிற்குமுரிய அயற் பிரதியும் (Counter-foil) அதன் தொகையும் குறிக்கப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே அச்சீட்டைப்போன்ற ஒன்று அச்சிட்டிருப்பதைக் காண்க.

| | |
|---|---|
| அயற்பிரதி இல. 3723 | (1) விளாக் (ஆர்தர் விளாக், றென்புறாவீதி, 21 வர்த்தகர்.) |
| | (2) கிறீன் (அலிஸ் கிறீன், ஆர்தேர்ஸ் ரெறஸ், 16 இல்லாள்.) |
| | (3) ரெயிலர் (மார்டின் ரெயிலர், றாயிற்ஸ் சிறு வீதி, 8 பெருமகன்.) |

தேர்தலின் நோக்கமும் எப்போது நடைபெறுமென்பதும் சீட்டின் மறுபக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும். ஒவ்வொரு தேர்தல் நிலையத்திலும் கருமங்கள் செவ்வனே நடைபெறுவதைக் கண்காணிப்பதற்கு ஓரதிகாரி நியமிக்கப்படுவர். அவரைத் தேர்தல் நிலைய அதிகாரி (Presiding Officer) எனலாம். ஒவ்வொரு வாக்காளரும் தத்தம் வாக்குக்களைத் தாம் விரும்பியவாறும் பிறர் அறியாதவாறும் கொடுப்பதற்காகவேண்டிய வசதிகள் யாவும் தேர்தல் நிலைய அதிகாரியாற் செய்யப்பட்டிருக்கும். தேர்தல் நிலையங்கள் காலை எட்டுமணிக்குத் திறக்கப்பட்டு இரவு எட்டுமணிக்கு மூடப்படும்.



தேர்தல் நிலைய அதிகாரியின்கீழ்க் கடமையாற்றும் லிகிதர்கள், தம் வாக்குகளைக் கொடுக்க அங்குவரும் ஒவ்வொரு வாக்காளரையும் அவரது பெயர் இடம் தொழில் முதலியவற்றை விசாரிப்பர். இவ்விதம் ஒவ்வொரு வாக்காளரிடமும் கேட்டுப் பெற்ற விபரங்களும் வாக்காளர் அட்டவணையில் உள்ள விபரங்களும் ஒத்திருந்தால் அவ்வாக்காளருக்குச் (Ballot Paper) சீட்டுக்கொடுக்கப்படும். சீட்டைப்பெற்றவர் தேர்தல் நிலையத்திலமைக்கப்பட்டிருக்கும் மறைவிடத்திற் சென்று, அச்சீட்டிற் குறிக்கப்பட்டுள்ள அபேட்சகருள் எவரைத்தாம் தெரிவுசெய்ய விரும்புகிறாரோ அவர் பெயருக்கு முன்பாக X இவ்வித அடையாளமிட்டு, இரண்டாக மடித்துச் சீட்டுப்பெட்டியு ளிடுவர்.

தேர்தல் முடிந்ததும் ஒவ்வொரு தேர்தல் நிலைய அதிகாரியும் சீட்டுப் பெட்டிகளை முத்திரையிட்டு அடைத்துத் தேர்தல் அதிகாரியிருக்கும் மத்திய நிலையத்திற்குக் கொண்டுசெல்வர். அங்கு தேர்தலதிகாரியினதும் அபேட்சகர்களின் அல்லது அவர்கள் செயலாளர்களினதும் முன்னிலையிற் பெட்டிகள் திறக்கப்பட்டுச் சீட்டுக்கள் எண்ணப்படும். எவ்வபேட்சகர் தொகையாற்கூடிய வாக்குக்களைப் பெறுகின்றாரோ, அவரே குறித்த தொகுதிக்குப் பாராளுமன்ற அங்கத்தினராகச் சட்டப்படி தெரிவுசெய்யப்பட்டாரெனத் தேர்தலதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரி தெரிவிப்பார். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு அங்கத்தினரும் பாராளுமன்றத்திற் றமது இடத்தைப் பெறுமுன், மன்னர் பிரானுக் கமைந்து நடப்பதாகச் சத்தியஞ் செய்து பாராளு மன்ற அங்கத்தினர் அட்டவணையிற் றமது கைச் சாத்தையுமிடவேண்டும்.

பொதுத் தேர்தல் நிறைவேறியதும் பொது மக்கள் மன்றம் தமது தலைவரைத் தெரிவதையே முதன் முதலாகச் செய்யும். இதன் தலைவர் அக்கிராசனத் தமர்ந்து, கடமை யாற்றும் போது அங்கத்தவர்களைக் கலகமின்றியும் அமை தியுடனும் நடந்து கொள்ளச் செய்கின்றார். அரசனுக்கும் பொதுமக்கள்மன்றத்துக்குமிடையே எக்காரணம் பற்றியும் கடிதப் போக்குவரவு ஏற் படவேண்டி நேரிடின், அஃதெல்லாம் இத்தலைவர் மூலமாகவே நடைபெற வேண்டும்.

எவ்வரசியற் கட்சியைச் சார்ந்த அங்கத் தினர்கள் தொகையாற் கூடியவர்களாய்ப் பொது மக்கள்மன்றத்துளரோ, அக்கட்சியினரே அதி கார வர்க்கத்தினர் எனப்படுவர். அக்கட்சியே அரசியற் பொறுப்பையும் ஏற்று நடாத்தும். பொதுமக்கள் சபை கூடும்போது இவ்வரசியற் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் தலைவரின் வலப்புறத்திலும், ஏனையோர் இடப்புறத்திலும் மண்டபத்தில் இடம்பெறுவர். அரசியலை நடாத்



துங் கட்சியோ டுடன்படாத ஏனைய அங்கத்தினரை யெல்லா மொருங்கு சேர்த்து எதிர்க்கட்சி யென்பர்.

ஆங்கில நாட்டில் இரு அரசியற் கட்சிகள் மாத்திரமேயிருந்த காலத்தில், பாராளு மன்றத்தின் பெருந்தொகை அங்கத்தினரின் கட்சி அரசியற் கட்சியாயும் மற்றையது எதிர்க் கட்சியாயுமிருந் தன. அரசியற் கட்சிகள் இரண்டோடமையாது வேறுகட்சிகளும் தோன்றியபின், பெருந் தொகையங்கத்தினரின் ஆதரவைப் பெற்றமையா லரசியலை நடாத்தும் கட்சி அரசியற் கட்சி யெனவும், அடுத்த படியாகத் தொகையாற்கூடிய அங்கத்தினரின் ஆதரவைப்பெறுங்கட்சி எதிர்க் கட்சியெனவும்படும். இவ்வெதிர்க் கட்சியானது எச்சமயத்திலும் பாராளுமன்றத்திலுள்ள அரசி யற்கட்சி தோல்வியுறின், அரசியலைக் கையேற்று நடாத்தும் பொறுப்பும் உரிமையும் உடையதாகும்.

மன்னனிடம் சென்று தமது மன்றத்துக் குரிய பரம்பரை உரிமைகளை யெல்லாம் கொடுத் தருளும்படி கேட்பதே பொதுமக்கள் மன்றத் தலைவர் தெரிவு பெற்றதும் முதற் செய்யுங் கட மையாகும். மன்னரெப்போதும் இக்கேள்விக் கிணங்கியே நடப்பர்.

பாராளுமன்ற அங்கத்தினரின் பரம்பரை உரிமைகள் என்பன யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) **பந்திக்கப் படாமை.** அல்லது கைதுசெய்யப் படாமை. இவ்வுரிமை பாதகம் (Griminal offence) செய்த அங்கத்தினருக் குரியதன்று. ஆகவே இவ்வுரிமையைப் பாதகத்துக்கன்றி பந்திக்கப் பெறுமை யெனலாம்.

(2) **விரும்பியன விளம்பல்.** பாராளுமன்றத்திற் பேசிய எப்பேச்சுக் காரணமாகவும் எவ்வங் கத்தவரும் நீதிமன்றங்களிற் குற்றஞ்சாட்டப் படார்.

(3) **அரசன் அங்கத்தினர்க்குக் காட்சிக்கெளியனுதல்.** இவ்வுரிமையை அங்கத்தினர் இக்காலத்திற் றமது மன்றத்தலைவர் மூலமாகவே உபயோகிப்பர்.

(4) **பிறரறியாது தமது விவாதங்களை நடாத்தல்.** இப்போது நிகழும் போர் தொடங்கியபின் பல முறைகளிற் பாராளுமன்றம் இவ்வித மிரகசிய விவாதங்களை நடாத்தி யிருக்கின்றது.

(5) **போதுமக்கள் மன்றத்தைப் போதுவாக எவரும் அவதூறுகக் கண்டிப்பாராயின் அவரைத் தண்டிக்குமுரிமை.**

பொதுத் தேர்தல் நிகழும்போது அரசியற் பொறுப்பை உடையதாயிருந்த கட்சி, அத்தேர்தலின்பின் தன்கட்சிச் சார்பாகத் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தினரின்தொகை குறைந்தமையாற் றம்மதிகாரம் குறைவுபட்டதெனத் தீர்மானிக்க



நேரிடின், அக்கட்சிச் சார்பாக அரசியல் மந்திரி பதவிகளை உடையோர் தத்தம் பதவிகளினின்றும் நீங்குவதற்கு விண்ணப்பத்தை அரசனிடம் சமர்ப்பிப்பார்கள். அப்பதவி நீக்க விண்ணப்பங்களை ஏனையவர்கள் சார்பாகவும் தனது சார்பாகவும் பிரதம மந்திரியாரே சமர்ப்பிப்பார். அவ்வாறு பிரதம மந்திரியார் பதவி நீக்க விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது, அரசியற் பொறுப்பைக் கையேற்று நடாத்துவதற்குத் தகுந்த பலமுடைய கட்சியின் தலைவரா யுள்ளா ரெவரென அரசன் வினவுவது வழக்கம். அத்தலைவன் யாரென அரசனுக்குப் பிரதம மந்திரியார் கூறுவர். அரசனும் அத்தலைவனை வரவழைத்து அரசியற் பொறுப்பைக் கையேற்றுப் புதிய மந்திரிசபை யொன்றை நிறுவும்படி ஆஞ்ஞாபிப்பார்.

அக்கட்சித்தலைவர் மன்னர்பிரானுடைய கட்டளையை ஏற்று மந்திரியாரை நியமிப்பர். தன் கட்சியைச் சேர்ந்தவர்களும் தனக்கு நம்பிக்கை உள்ளவர்களுமான பிரபல அரசியல்வாதிகளை அவர் அவ்வப் பதவிகட்கு நியமிப்பர். இவ்வாறு மந்திரிமார்களை நியமனஞ்செய்தவுடன் அவர்களின் பெயர்களை, இத்தலைவர் மன்னருக்குச் சமர்ப்பிப்பார். மன்னர் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர் உத்தியோகத்துக்குரிய முத்திரைகளைக் கொடுத்து அவர்களை மந்திரிகளாக்குவர். அன்றுமுதல் அவர்கள் மன்னரின் மந்திரிமார்களாவர். அவர்களைத் தெரிந்தெடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரே பிரதமமந்திரியாவர். இவர்கள் எல்லாருஞ் சேர்ந்த தொகுதியே அரசாங்கம் எனப்படும். இம்மந்திரிமார்களுள் முக்கியமான சிலரைக் கொண்டசபையே மந்திரிசபை (Cabinet) அல்லது அமைச்சர்குழு எனப்படும். அரசாங்கமெனப்படும் இம்மந்திரிமார்களின் தொகை ஏறக்குறைய 60 ஆகும். இவர்கள் ஒவ்வொருவரும் இராச்சியத்தின் ஒவ்வொரு முக்கிய (Department) பிரிவுகளின் பொறுப்பை ஏற்று நிர்வாகஞ் செய்வர். இவர்கள் ஒவ்வொருவரும் பாராளுமன்றத்துக்கே பொறுப்புடையராவர். இம்மந்திரிமார் பொதுமக்கள் மன்ற அங்கத்தவராயினும் பிரபுக்கள் மன்ற அங்கத்தவராயினும், தத்தம் உத்தியோக நிர்வாகங் குறித்து அவ்வச்சபைகளில் எழும் வினாக்களுக்கு உத்தரங் கூறும் கடமைப்பாடுடையராவர்.

எதிர்க்கட்சியினரென முற்கூறிய கட்சியைச் சேர்ந்தவர்கள், அரசாங்கக் கட்சியினர் கையாளும் ஒவ்வொரு முக்கிய அரசியற் பிரேரணையையும் நன்கு ஆராய்ந்து அப்பிரேரணைகட் கடிப்படையாயுள்ள கொள்கைகளையும், அக்கொள்கைகளை நிறைவேற்ற, தகுந்தன என அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள வழிகளையுஞ் சீர்தூக்கி, கண்டிக்கவேண்டியவற்றைக் கண்டிப்பர். இவ்வெதிர்க்கட்சி, அரசாங்கக் கட்சியினர் தம்கடமைகளைக் கவனக் குறைவாகவோ அன்றி நேர்மைக்குறை



வாகவோ செய்யாதபடி பாதுகாக்கும் பெரும் பொறுப்பை உடையது. அரசியற் கட்சியினர் பாராளு மன்றத்திற் பிரேரிக்கும் முக்கிய பிரேரணையொன்று தோல்வியுறின், மந்திரிமார்கள் தம்பதவிகளினின்றும் விலகவேண்டு மென்பது ஆங்கில அரசியல் வழக்கு. அவ்வாறு அரசாங்கத்தார் விலகநேரிடினும் அரசன் எதிர்க்கட்சியின் தலைவனை அழைத்துப் புதிய அரசியலை அமைக்குமாறு ஆஞ்ஞாபிப்பர். எக்காரணம் பற்றியாவது அரசனாணைப்படி அத்தலைவனாற் புதிய அரசியலை நிறுவமுடியாதாயின், பாராளுமன்றம் கலைக்கப்பெற்றுப் புதியதொரு பொதுத் தேர்தல் நடாத்தப்படும். அத்தேர்தலில் இவ்விரு கட்சியினரும் தத்தம் கொள்கைகளுக்கு வாக்காளரின் ஆதரவைப் பெறற் பொருட்டுப் பெரிதும் முயல்வர்.

சாதாரண காலங்களில் மேற்கூறிய ஏககட்சி முறைப்படியே அரசியல் நடைபெறுமெனினும், பிறநாட்டோடு பொருதுவது போன்ற பெருநிகழ்ச்சிகள் உண்டாகும்போது பல கட்சிகளுஞ் சேர்ந்த சர்வகட்சி அரசியலே நடைபெறும். இப்போது நடக்கும் போரின்நிமித்தம் நாட்டிலுள்ள மூன்று முக்கிய அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய அரசியலே ஆங்கில நாட்டில் நடைபெறுகின்றது. இதுபோன்ற சமயங்களில் எதிர்க்கட்சி முற்றாக மறைந்து போகாதெனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்சியினர் அரசியற் கட்சியில் எப்போது குற்றங்காண்போம், எப்போது அவர்களை அரசியற்றுது நீக்குவோம் என்னும் ஆவல்களாற் றூண்டப்பெறுது எல்லார்க்கும் பொதுவாய் உள்ள நோக்கத்தை இடையூறின்றி நிறைவேற்றுவதிலேயே கருத்துடையராயிருப்பர்.

பாராளுமன்றத்தினிரு சபைகளுட் கீழ்ச்சபையெனப்படும் பொதுமக்கள் மன்றமே அதி முக்கியம் வாய்ந்தது. இக்காரணம்பற்றியே சாதாரண வழக்கிற் பொதுமக்கள் மன்றத்தையே பாராளுமன்றமென்பர்.

பாராளுமன்றம் செய்யுங் கடமைகள் எவை?

(1) அரசியலை நடாத்துவதற்கு வேண்டியபணத்தை அப்பொறுப்புடையோருக்குக் கொடுத்தல். எவ்வெவ் வரசிறைகளை விதிக்க வேண்டுமெனவும் அவைகளை எவ்வெவ் வழிகளாற் பெறலாமெனவும் தீர்மானிக்குமுரிமை பொதுமக்கள் மன்றத்திற்கே உரியது. அரசியல் வரவு செலவுத் திட்டம் (Budget) இச்சபையின் அங்கீகாரம் பெற்ருலன்றி அங்கீகாரம் பெருது. பாராளு மன்றத்திற் பிரேரிக்கப்படும் வேறு பிரேரணைகளைப்போற் பண சம்பந்தமான சட்டங்களுக்குப் பிரபுக்கள் மன்றத்தின் அங்கீகாரம் அவசியமன்று.

(2) பாராளு மன்றம் சட்டங்களை ஆக்கும். அவ்வப்போதுள்ள தேசநிலைமைக் கேற்பப் பழைய சட்டங்களைத் திருத்தி யமைத்தலும், புதிய சட்டங்களை ஆக்குதலும் அதன் கடமையாம்.



(3) ஆக்கப்பட்ட சட்டங்கள் யாவும் சரிவர அநுசரிக்கப்பட்டு வருகின்றனவோ என்பதைப் பார்க்குங் கடமையும் பாராளுமன்றத்திற்குரியதே. இக்கடமைகளைச் செய்யுங்கால் அரசியலை நடாத்தும் நிர்வாகஸ்தர்களைக் கட்டுப்படுத்தலும் அவர்களது திருப்தியற்ற செயலைக் கண்டித்தலும் நடைபெறும். இவைகளே பாராளுமன்றம் செய்யுங் கடமைகளாகும்.

இவையன்றிப் பிரித்தானிய சக்கராதிபத்தியத்தின்பாற்பட்ட எவ்விஷயத்தைக் குறித்தும் விவாதிக்குமுரிமையும் பாராளுமன்றத்துக்குரியது. உ-ம்:- பலஸ்தீன நாட்டில் அல்லது இந்தியாவில் ஏதாவதொரு முக்கிய நிகழ்ச்சி யேற்படின்; அதனைக் குறித்தாலோசிப்பதற்குப் பாராளு மன்றத்திற்கு ஒரு குறித்த நாள் அல்லது நாட்கள் குறிக்கப்படலாம்.

பொதுமக்கள் மன்றம் சாதாரணமாக, பிற்பகல் 2 ம. 45 நிமிஷத்திற் கூடும். ஒவ்வொரு கூட்டத் தொடக்கத்திலும் அச்சபையின் உதவிக்குரு (Chaplain) எனப்படுபவர் பிரார்த்தனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பார். அது முடிவுற்றவுடன் முதலொருமணி நேரம் அங்கத்தினரால் வினவப்படும் வினாக்களுக்கு மந்திரிமார் விடையிறுப்பதற்கென விடப்படும். எந்த மந்திரியினதும் ஆதிக்கத்துக்குட்பட்ட அரசியல் விஷயத்தைக் குறித்தும் பாராளுமன்ற அங்கத்தினரெவரும் கேள்விகள் கேட்கலாம். எனினும், அவற்றைக் கேட்போர் அச்சபையின் சட்டங்களுக்கிணங்க அவற்றை முன்னரே மந்திரியாருக் கறிவித்திருக்க வேண்டும். **'கேள்வி அமையம்'** எனப்படும் நேரம் மிக முக்கியமானது. என்னை? அங்கத்தினர் கேள்விகள் மூலம் மந்திரிமாரிடமிருந்து தாமறிய வேண்டிய விஷயங்களை அறிவதுமன்றி அரசாங்கத்தார் மாட்டுத் தாம் கொண்ட குறைகளை எடுத்துரைக்கச் சமையம் மேற்படுமாகலின். கேள்விகளுக்குப் பதிலிறுத் தொழிந்ததும் சபை பிரேரிக்கப்பட்ட சட்டங்களையோ அன்றி வேறெவ்வித விஷயத்தையோ தேவைப்படி ஆலோசிக்கத் தொடங்கும். ஏனைய நாடுகள் பல, தத்தம் சட்டசபைகளைப் பிரித்தானிய பாராளுமன்றத்தை முன்மாதிரியாகக்கொண்டே அமைத்திருக்குங் காரணம்பற்றி, பிரித்தானிய பாராளுமன்றத்தைப் **பாராளு மன்றங்களின் அன்னை** யெனக் கூறுவர். நமது இலங்கையின் அரசாங்க சபையிலும் அப்பாராளு மன்ற நிகழ்ச்சி முறையே பெரும்பாலுங் கைக்கொள்ளப்படும்.



## அப்பியாச வினாக்கள்.

1. போது மக்கள் மன்றத்துக்கு அப்பெயரை ஏன் கொடுத்தார்கள்?
2. பாராளு மன்றத்தின் இரு சபைகளுக் கிடையிலுமுள்ள முக்கிய வேறுபாடுகளேவை?
3. போதுமக்கள் மன்றத் தலைவர் யாவர்? அவரது கடமைகளேவை?
4. பாராளு மன்ற அங்கத்தினர்கள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்படுவர்?
5. ஆங்கில நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் யாவை?
6. கட்சி யரசியல் என்பதன் கருத்தென்ன?
7. பாராளுமன்ற அங்கத்தவராயுள்ள ஒருவர் அங்கத்துவத்தினின்றும் நீங்க வேண்டின் எவ்வாறு நீங்குவர்?
8. போதுமக்கள் மன்றத்தினது சரித்திரத்தைச் சுருக்கியெழுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8-ம் அதிகாரம்.

# பிரதமமந்திரியும் மந்திரிசபையும்.

பொதுமக்கள் மன்றப் பொதுத் தேர்தல் முடிந்தவுடன், எவ்வரசியற் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தொகையாற் கூடியவர்களோ அக்கட்சியே அரசியலை நடாத்தும் உரிமையைப் பெறுமென்பது முந்திய பாடத்தினாற் றெளிவாயிற்று. தேர்தல் முடிந்ததும் கூடியதொகை யங்கத்தவரது கட்சித் தலைவரை மன்னரழைத்து அரசியலை நடாத்தும் பொறுப்பை யேற்கும்படி ஆஞ்ஞாபிப்பர். அத்தலைவர் அரசியற் பொறுப்பை யேற்று, தாம் பிரதம மந்திரியாயிருக்கத் தன்னோடு கூட அரசியலை நடாத்தற்கு 60 மந்திரிமார்களை நியமிப்பார். இவ்வறுபதின்மருள் முக்கியமான மந்திரிப் பதவிகளை ஏற்ற சில மந்திரிகளைக் கொண்ட குழுவே (Cabinet) மந்திரிசபை யெனப்படும். ஏனைய மந்திரிமாரை நியமிப்பது போலவே இம்மந்திரிசபையில் எவரெவரிருக்க வேண்டுமென நியமிக்குமுரிமையும் பிரதம மந்திரியாருடையதே. ஆங்கிலநாட்டரசியல் இதுகாறும் கூறிய முறைப்படி ஜனப்பிரதிநிதிகளின் பொறுப்பில் வருமுன், அரசர்கள் ஏதேச்சாதிகாரிகளாய் ஆட்சியை நடாத்தினர். அக்காலத்திலே தமது பிரஜைகளுள் நுண்மதியினராயும் நாட்டிற் பிரதானமாயுள்ளவராயுமுள்ள சிலரைத்தான் அரசியற் கருமங்



களில் உசாவி நடப்பதற்காகத் துணைவர்களாய் வைத்திருந்தார்கள். அவ்வுசாத் துணைவர்கள் அரசனது ஓது நிலையத்தில் (Private study room) வழக்கமாகக் கூடுவர். அரசனுடைய அவ்வோது நிலையம் அக்காலத்தில் 'கபினெற்' எனப்பட்டது. [ஆகவே, அவர்கள் கூடுமிடத்தின் பெயர் அக்கூட்டத்தாருக்காகி ஆகு பெயரானது.] அரசனது உசாத்துணைவர்களாகத் தோன்றிய இக்குழுவினர் இப்போது அரசியலை நடாத்துங் குழுவினராயினர். ஆதியில் இக்குழுவினரின் கூட்டங்களெல்லாம் மன்னரே அக்கிராசனராவர். இக்காலத்திற் பிரதம மந்திரியே அக்கிராசனராயிருப்பர். என்னை? 1714-ம் ஆண்டு தொடக்கம் மந்திரிசபை யெனப்படு மிக்குழுவினர் சாதாரண காலங்களில் ஒரு தனி அரசியற் கட்சியினராயும், பாராளுமன்றச் சபையிரண்டனுள் ஒன்றில் அங்கத்தவராயுமிருப்ப ராகையால். மன்னர் அரசியலிலாவது பாராளுமன்றத்தின் முயற்சிகளிலாவது நேர்முகமாக ஈடுபடமாட்டார் என்பதை முந்திய பாடங்களில் அறிந்தோம். இம்மந்திரிசபையில் பன்னிரண்டு தொடக்கம் இருபது அங்கத்தவர்கள்வரையிலுமிருப்பர். ஆனால், இப்போது (1941) போரை நடாத்தும் மந்திரிசபை ஆறு அங்கத்தினரையே கொண்டது. மந்திரி சபையின் அங்கத்தவர்கள் அரசரது அமைச்சர்கள் மாத்திரமன்று; அரசியலின் ஒவ்வொரு பகுதியினது நிர்வாகத் தலைவர்களுமாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1938-ம் ஆண்டு நவம்பர் மாதம் மந்திரிசபை யங்கத்தவர்களாயிருந்தோர் பின் கூறப்படுபவர் களே:—

1. பிரதம மந்திரி
(The Prime Minister)
2. சபையின் அக்கிராசனத் திருமகன்
(Lord President of the Council)
3. கருவூலத் தலைவர்
(Chancellor of the Exchequer)
4. பிரபுக்கள் மன்ற உயர் தலைவர்
(Lord High Chancellor)
5. உள்நாட்டு மந்திரி
6. யுத்த மந்திரி
7. அந்நியநாட்டு மந்திரி
8. இந்தியநாட்டு மந்திரி
9. சமவுரிமைநாடுகளின் மந்திரி, குடியேற்றநாட்டு மந்திரி } இரு உத்தியோகங்களையும் ஒருவரே ஏற்றுர்.
10. ஆகாயப்படை மந்திரி
11. ஸ்கொத்திலாந்துநாட்டு மந்திரி
12. முத்திரைத் திருமகன்
(Lord privy Seal)
13. சுகாதார மந்திரி
14. வியாபாரக் கழகத் தலைவர்
15. கடற்படையாட்சி நிலையத் தலைவர்



16. கல்விக்கழகத் தலைவர்.
17. தொழில் மந்திரி
18. போக்குவரவுப்பகுதி மந்திரி
19. நாட்டின் பாதுகாப்பு மந்திரி
20. விவசாயப் பகுதி மந்திரி
21. லன்காஸ்ரர் எனப்படும் கோமகனின் காணியைப் பரிபாலனஞ் செய்பவர்.

ஆகிய 21 பேராவர். ஏனைய மந்திரிமார் 36 பேராவர்.

இப்பொழுது நடக்கும் போரை நடாத்தும் மந்திரிசபை 1940-ம்ஆண்டு ஆகஸ்ற்மாதம் தொடக்கம் 6 பேரைக் கொண்டிருக்கின்றது.

1. பிரதம மந்திரியும் பாதுகாப்பு மந்திரியும்
(The Prime Minister and Minister of Deffence)
2. சபையின் அக்கிராசனத் திருமகன்
(Lord President of the Council)
3. முத்திரைத் திருமகன்
(Lord Privy Seal)
4. அந்நியநாட்டு மந்திரி
(Secretary of State for Foreign Affairs)
5. ஆகாயவிமான ஆக்க மேற்பார்வை மந்திரி
(Minister for Aircraft Production)
6. குறித்த முயற்சியில்லா மந்திரி.
(Minister without Portfolio)

ஆகியவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியுள்ள அட்டவணைகளைக் கவனிக்குமிடத்து அநேக மந்திரிகள் கபினெற் எனப்படும் மந்திரிசபையில் அங்கத்துவம் பெறுதிருப்பதும் அம்மந்திரிசபையில் அங்கத்தவராய் உள்ள சிலர் (உ-ம்:- சபையின் அக்கிராசனத் திருமகனும் முத்திரைத் திருமகனும்) அரசியல் நிர்வாகப் பொறுப்பு அதிகம் உள்ள மந்திரிகள் போலல்லாதிருப்பதுங் காணப்படும். மந்திரி சபையிற் பிரதம மந்திரி யொழிந்த ஏனையவர்களுள், கருவூலத்தலைவரும் அந்நிய நாட்டு மந்திரியுமே மிக முக்கியம் வாய்ந்தவர்கள். லண்டன் மாநகரத்திலுள்ள டவுணிங் வீதியில் 10-ம் இலக்க வீட்டில் அல்லது பொதுமக்கள் மன்றத்திற் பிரதம மந்திரியின் அறையிற் கபினெற் எனப்படும் மந்திரி சபை கூடும்.

இம் மந்திரிசபை யாற்றும் கடமைகளை மூன்று பகுப்புக்களாக்கலாம். அவையாவன:—

(1) அரசனுக்கு ஆலோசனை கூறுதல்.

(2) சகல அரசியற் கருமங்களையும் ஆலோசித்து எவ்வித நடபடிக்கைகள் எடுப்பதெனத் தீர்மானித்தல்.

(3) பாராளு மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சட்டங்களை யாக்குதல் என்பன.

கபினெற் எனப்படும் இம்மந்திரிசபையின் கூட்டங்களெல்லாம் அந்தரங்கமாகவே நடை



பெறும். அதன் நடபடிக்கைகளை இரகசியமாய் வைத்திருக்கும் கடப்பாடு அங்கத்தினர்க் குடையதே. முக்கியமான ஒரு விஷயத்தில் அரசியற்கட்சி பாராளுமன்றத்திற் றோல்வி யடைய நேரிடினும், பிறகட்சியினர் அவர்மீது சுமத்தும் கண்டனம் பாராளுமன்றத்தினது அங்கீகாரம் பெறினும், அரசியற்கட்சியினர் தம் பதவிகளினின்றும் நீங்குவர். பாராளுமன்றம் ஓய்வுபெறுங் காலமல்லாத ஏனைய காலங்களில் மந்திரிசபை வாரந்தோறும் ஒழுங்காக நடைபெறும். அவசியமேற்படின் இதற் கிடையிலும் மந்திரிசபை கூட்டப்படலாம்.

ஒவ்வொரு மந்திரியும் தாம் பொறுப்பேற்றிருக்கும் அரசியற்பகுதியின் நிர்வாகத்தின் முழுப் பொறுப்பையும் உடையரெனினும், அரசாங்கத்தின் ஒவ்வொரு செயலினதும் பொறுப்பு மந்திரிசபையைச் சார்ந்ததே. அதாவது, மந்திரிசபையிலுள்ள ஒரு மந்திரி நிர்வாகம் நடத்துங்கால், பாராளுமன்றத்திற்கு அதிருப்தியை ஏற்படுத்தக் கூடியவகையில் நடந்துகொள்வராயின் அவரது செயல்களுக்கு அவரே பொறுப்புடையவரென்று கூறி, மந்திரி சபையின் ஏனைய அங்கத்தவர் அவர்செயலின் பொறுப்புத் தமதல்லவெனக் கூறவியலாது. ஒவ்வொரு மந்திரிசபை யங்கத்தினரதும் செயலின் பொறுப்பை அம்மந்திரி தனிப்பட ஏற்பது மாத்திரமன்றி, முழு மந்திரிசபையும் ஏகோபித்தேற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வின்ஸ்ரன் சேர்ச்சில்.
(பிரதம மந்திரி)



கொள்வது ஆங்கில அரசியல்முறையின் அடிப்படையான கொள்கையாகும். பாராளுமன்றத்திற் றீர்மானிக்கப்படுவதற்காகக் கொண்டுவரப்படும் எந்த முக்கிய விஷயத்தைக் குறித்தும் அரசியற்கட்சி எவ்வபிப்பிராயத்தைக் கூறவேண்டுமென்றும் எவ்வித நடபடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் பாராளுமன்றத்தில் விவாதமேற்படுமுன்னரே மந்திரிசபையிற் றீர்மானிக்கப்படும்.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து ஆங்கில அரசியலமைப்பில் மந்திரிசபை எத்தகைய முக்கியம் வாய்ந்ததென்பது தெளிவாயிற்று. எனினும், இம்முக்கிய அரசியலமைப்புக் குறிக்கப்பட்ட ஒருகாலத்திற் சட்டரீதியால் ஸ்தாபிக்கப்பட்டதன்று. அது எவ்விதம் தோன்றிற்றெனின், அவ்வக்காலத்துக்கேற்றபடி அரசியல் மாற்றங்களை நடைமுறையிலேயே செய்துகொண்டுவந்த முறையிற் ரூமாகவே ஏற்பட்டவோர் அரசியலமைப்பேயாம். அவ்வண்ணமே பிரதமமந்திரிபதவியும் தானாகவே தோன்றி, நாளடைவில் வளர்ந்து, இப்போதைய நிலைமைக்கு வந்தது. பிரதமமந்திரிக்கெனத் தனியாக வேதனம் முன்னர்க்கொடுபட்டதில்லை. ஆனால், 1937-ம் ஆண்டில் பிரதமமந்திரிக்கு வருடமொன்றிற்கு 10,000-ம் தங்கப்பவுண் வேதனமும், பதவியின் நீங்கியபின்னர் வருடம் 2000 தங்கப்பவுண் இளைப்பாறும் வேதனமும் கொடுக்கவேண்டுமெனப் பாராளுமன்றம் தீர்மானித்தது. பிரதமமந்திரி லண்டன்மாநகரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற் குடியிருப்பதற்காக டவுணிங் வீதியில் 10-ம் இலக்க வீடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. 'செக்கர்ஸ்' எனப்படும் நாட்டுப்புறமாளிகையும் பிரதமமந்திரியி னுபயோகத்திற்காகவே விடப்பட்டிருக்கின்றது.

பிரதமமந்திரி அரசனாலேயே நியமிக்கப்படுவாராயினும், உண்மையில் அவர் பிரசைகளாலேயே நியமிக்கப்படுபவர். என்னை? பாராளுமன்றத்திற் றொகையாற் கூடிய அங்கத்தினரைக் கொண்ட அரசியற்கட்சித் தலைவரையே அரசன் பிரதமமந்திரியாக்கலா மாகலின். வாக்குரிமையுடைய பிரசைகள், பொதுத் தேர்தலின்போது தங்கள் வாக்குக்களைத் தங்களது நம்பிக்கையை அதிகமாகக் கவர்ந்த அரசியற் றலைவனைக் கொண்ட கட்சிக்கே கொடுப்பதினால், அக்கட்சி பாராளுமன்றத்திற் கூடிய தொகையான அங்கத்தினரையுடையதாகச் செய்வதுமன்றி, அத்தலைவனைப் பிரதமமந்திரியாகவும் நியமிக்கப்படச் செய்வார்கள்.

பிரதமமந்திரி மிக்க அதிகாரங்களை யுடையவர். அவரதிகாரங்கள் எத்துணை வலுவுள்ளனவோ அத்துணைப் பொறுப்பையும் உடையவராவர். தன்னுடன் ஒத்துழைத்து நாளுக்குநாள் அரசியல் நிர்வாகத்தைச் செய்யும் பொறுப்பையுடைய மந்திரிசபை யங்கத்தினரையும் ஏனைய மந்திரிமார்களையும் அவரே நியமிப்பார். தலைமை யத்தியட்சராய குருமாரையும், ஏனைய அத்தியட்சரான குரு



மாரையும் அவரே தெரிந்தெடுத்து அரசனது நியமனத்தைப் பெறச்செய்வார். தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகிய முப்படைகளின் முக்கிய உத்தியோகஸ்தர்களையும் தேசப்பொது ஆட்சியின் முக்கியமான உத்தியோகஸ்தரையும் அவரே நியமிப்பார். காலத்துக்குக் காலம் தன் ஆளுகைக்குட்பட்ட நாடுகளில், பல்வேறு துறைளிலும் சிரேஷ்டம் பெற்றிருக்கும் தன் பிரசைகளுக்கு அரசன் பலவித பட்டங்களையும் கொடுக்கிறார். இவரிவருக்கு இவ்விப் பட்டங்களைக் கொடுக்கலாமெனத் தீர்மானிப்பதும் பிரதமமந்திரியே. இவரே பாராளுமன்றத்துப் பொதுமக்கள் சபையின் (Leader of the house) முதல்வன். பிறநாடுகளுடன் போர்நடாத்துதல்போன்ற நெருக்கடியான சமயங்களிற் பிரதமமந்திரியின் அதிகாரம் சாதாரணகாலங்களிலும் பார்க்கக் கூட்டப்பெறுவதினால் அவர் ஒரு சர்வாதிகாரியைப் போலாகின்றார். அக்காலங்களில் நிர்வாகம் நடாத்துவதற்கு விரும்பியபோது சிலரை மாத்திரமே உசாவிக் கருமமாற்றுவார்.

அரசியற்கட்சி யொழிந்த ஏனைய கட்சிகளுள், பாராளுமன்றத்திற் றொகையாற்கூடிய அங்கத்தினரையுடைய கட்சி எதிர்க்கட்சியென முன் கூறினோம். அதன் தலைவர் எதிர்க்கட்சித் தலைவனெனப்படுவர். சில வருடங்களின்முன், எதிர்க்கட்சித்தலைவருக்கும் வேதனம் கொடுக்கப்பட்டது. எதிர்க்கட்சியினரும் அவர்கள் தலைவரும் ஆங்கில அரசியலமைப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாதவர்கள் என்பதும் பாராளுமன்றத்தில் அத்தலைவராற்றும் கருமம் பொதுநன்மைக்கு முக்கியமானதென்பதும் இதனாற் றெளிவாயிற்று. உண்மையில் எதிர்க்கட்சியைப் பதிலரசாங்கமெனலாம். என்னை? எச்சமயத்திலும் அரசியற்கட்சி பாராளுமன்றத்திலே தோல்வியுற்றதும் எதிர்க்கட்சியே அரசியலை நடாத்தும் பொறுப்பை யேற்குமாகலின். இக்காலம் ஆங்கில அரசியற்கட்சியின் அரசியலாயில்லாமல், தேசீய அரசியலாய் (சர்வகட்சிகளும் ஒத்துழைக்கு மரசியலாய்) நடைபெற்று வருகின்றது.

### அப்பியாச வினுக்கள்.

1. பிரதம மந்திரி யாவார் அந்நிலைக்கு வருவதெப்படி? அவரது அதிகாரங்களும் பொறுப்புக்களு மேவை? ஏன் பிரதமமந்திரி யெனப்படுகின்ருர்?
2. மந்திரிசபை யெனப்படுவது (Cabinet) யாது?
3. மந்திரிசபை செய்யுங்கருமங்களை விபரித்தெழுது?
4. அவசிய மேற்படும்போது புதிய மந்திரிகளை நியமிக்கவும் அரசாங்கத்தை நிறுவவும் பொறுப்பை அரசன் யாரிடம் கொடுப்பது வழக்கம்?
5. எதிர்க்கட்சியாவது யாது?

---

### 9-ம் அதிகாரம்.

## பிறிவிக் கவுன்சில் (Privy Council)

இலங்கையின் உயர் நீதிமன்றமாகிய 'சுப்பிறீம் கோட்'டினது தீர்ப்புக்களிற் றிருப்தியடையாத வழக்காளிகள் தமது வழக்குக்களைப் புனர் விசாரணைக்காகப் பிறிவிக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிப்பதை நாம் கேள்வியுற்றிருக்கின்ரேம்.

ஐயாயிரம் ரூபாவுக்குமேற் பெறுமதியுள்ள பொருள்கள் சம்பந்தமான வழக்கில், கீழ் நீதிஸ்தலத்தின் தீர்ப்பில் அதிருப்தியடைந்த வாதி அல்லது பிரதிவாதி, அவ்வியாச்சியத்தைப் புனர் விசாரணைப் பொருட்டு உயர் நீதிமன்றமாகிய சுப்பிறீம் கோட்டிற்குச் சமர்ப்பித்து, அந்நீதிமன்றத்தின் தீர்ப்பிற் றிருப்திப்படாவிடின், பிரித்தானியப் பேரரசு நாடுகளுக்கெல்லாம் உயர் நீதி மன்றமாயுள்ள பிறிவிக் கவுன்சிலுக்குச் சமர்ப்பிக்கலாம்.

இவ்வியாச்சியங்களொழிந்த வேறு எவ்விஷயத்தைக் குறித்தும் பிறிக்கவுன்சி லெனப்படும் தமது மந்தணத்தோடு ஆலோசிக்க வேண்டுமென மன்னர்பிரானுக்கு விண்ணப்பஞ் செய்யுமுரிமை, பிரித்தானியப் பேரரசின்பாற்பட்ட ஒவ்வொரு பிரசையினதும் பிறப்புரிமையாகும். அன்றியும் குற்றங்கடியும் ( riminal Courts) நீதிமன்றங்களிற் றண்டிக்கப்படுவோரும் பிறிவிக் கவுன்சிலுக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தண்டனையை விலக்கும்பொருட்டு விண்ணப்பிக்க உத்தரவு வேண்டுமென்று அப்பிறிவிக் கவுன்சிலையே கேட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு விண்ணப்பத்தைச் செய்யலாம்.

இச்சந்தர்ப்பத்தில் பிறிவிக்கவுன்சிலென்று கூறுவது அம்மன்றத்தினது நீதி விசாரணைக் குழுவினரையே குறிக்கும். 330 அங்கத்தினரைக் கொண்டுள்ள இவ்வரசமந்தணத்தில் மிகச் சிலரே நீதிவிசாரணைக் குழுவினராவர். அக்குழுவினரொவ்வொருவரும் சட்டவறிவில் மேம்பட்டவராய்க்காணப்படுவர். சாதாரணமாய் லோட் சான்சலர் (Lord Chancellor) எனப்படும் பிரபுக்கள்மன்ற நீதித்தலைவரும், 'லோட்ஸ் ஒவ் அப்பீல்' (The Lords of Appeal) எனப்படும் மேற்றீர்ப்புப் பிரபுக்களும் ஆங்கிலநாட்டில் அல்லது அவ்வரசியலைச் சேர்ந்தவேறு நாடுகளில் உயர்ந்த நீதிபதிகளாயிருந்தனுபவம் பெற்ற வேறுசிலரும் மேற்குறித்த நீதிவிசாரணைக் குழுவினங்கத்தினராவர். பிறிவிக்கவுன்சில் எனப்படும் அரசமந்தணம் மேற்கூறிய நீதிவிசாரணைக் குழுவினரைப் போன்ற வேறுபல குழுவினரையும் கொண்டுள்ளது. இக்குழுவினர்களுளெல்லாம் நீதிவிசாரணைக் குழுவினரே மிகமுக்கியமானவர்கள்.

கபினெற் எனப்படும் மந்திரிசபையும் பிறிவிக்கவுன்சிலினது ஒரு அம்சமெனக் கூறலாம். என்னை? மந்திரிகளாயுள்ளோர் ஒவ்வொருவரும்



பிறிவிக் கவுன்சிலில் அங்கத்தவராவ ராதலின். பிறிவிக் கவுன்சிலில் அங்கத்துவம் பெறு மொவ்வொருவரும் பிறர்மாட்டுக் கொண்டவிருப்பம் அன்பு முதலியவை காரணமாக, அல்லது தனக்கென ஏற்படுந் தேவைகள் காரணமாக, அல்லது தன் மனத்திலெழும் சந்தேகம் அச்சம் முதலியவை காரணமாகப் பட்சபாத மேற்படாதபடி தனது புத்திக்கும் பகுத்தறிவிற்கும் எட்டியவாறு அரசனுக்கு ஆலோசனை கூறுவதாகவும், அயோக்கியத்தைத் தவிர்ப்பதற்காகவும் அம்மந்தணத்தாற் றீர்மானிக்கப்படும் முடிவுகளெல்லாம் இனிது நடைபெறற் பொருட்டுச் செய்யவேண்டுவனவற்றையெல்லாம் செய்வதாகவும், அத்தீர்மானங்களுக்கு முரண்படுவோரையெல்லாம் தடுப்பதாகவும், பொதுவாக ஓரமைச்சன் தனது மன்னனதும் நாட்டினதும் நலனைக் கருதி எவ்வெக் கருமங்களைச் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாஞ் செய்வதாகவும் சத்தியஞ் செய்யவேண்டும். ஆங்கில நாட்டிலுள்ள கல்வி பரிபாலனக்குழு, வாணிபக்குழு, வரியாட்சிக்குழு முதலிய ஆட்சிக் குழுவினரெல்லாம், (அரசியற் சாஸ்திர பரிபாஷையிற் சொல்லில்) இப் பிறிவிக் கவுன்சிலின் அங்கங்களாயுள்ள சிறு குழுவினராவர். மன்னருக்கு முடிசூட்டுங்காலத்து வேண்டிய கருமங்களைச் செய்வதற்கு முடிசூட்டுக் குழுவென ஒரு குழுவைப் பிறிவிக் கவுன்சில் நியமிப்பது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிறிவிக் கவுன்சில் எக்காலத்திற்றொடங்கி எவ்விதம் வளர்ந்து எவ்வித மாற்றங்களை யடைந்து இவ்வித நிலைக்கு வந்ததென்பதை ஆராய்வாம்.

நோர்மன் அரசர்கள் ஆங்கில நாட்டை யாண்ட காலத்தில் அவர்கள் (King's Council or Curea Regis) அரசனது மந்தணம் எனப்பட்ட ஒரு சபையை ஸ்தாபித்தனர். அச்சபை அரசியல்களை நடாத்தும் முறைகளைப் பற்றியும் அரசியலின் நோக்கங்களைப்பற்றியும் மன்னருக்கு ஆலோசனை கூறியது. உயர்குடிப் பிறந்தோரே (பிரபுக்கள்) இச்சபையில் அக்காலத்திலங்கத்தினராயினர். நோர்மன் அரசர்களாற் றூபிக்கப்பட்ட இச்சபையே பிறிவிக் கவுன்சிலின் தொடக்கயாகும். அதன்பின் 14-ம் நூற்றூண்டில் பிறிவிக்கவுன்சிலைப் பாராளு மன்றத்திற்குக் கீழ்ப்பட்ட ஒரு சபையாகச் செய்வதற்குச் சிலர் முயன்றும் அது கைகூடவில்லை. பின்னர் 'டியூடர்' மன்னர்கள் அரசாண்ட காலத்திலே பிறிவிக் கவுன்சில் அதி முக்கியத்துவம் பெற்றது.

காலஞ் செல்லச் செல்ல இச்சபையில் அங்கத்துவம் பெற்றோர் தொகை அதிகரித்ததினல் சபை, கருமமாற்றுவதற்கு தகுதியற்றதானது. அக்காரணம்பற்றி அரசன் இச்சபையின் அங்கத்தவராயிருந்த சிலரையே தனது சொந்தப் படிப்பறைக்கு அழைத்து அரசியல் விஷயங்களைக் குறித்து ஆலோசிக்க நேர்ந்தது. இவ்வண்ணம் அரசனல் அழைக்கப்பட்ட ஒரு சிலரைக் கொண்ட கூட்டமே இப்போதுள்ள கபினெற் எனப்படும் மந்திரிசபையின் தொடக்கமாகும் (அரசனது படிப்பறை கபினெற் என அக்காலத்திலழைக்கப் பட்டது. அவ்வறையிற் கூடியமையால் கபினெற் என்னும் பெயர் மந்திரி சபைக் கேற்பட்டது.)



1679-ம் ஆண்டில் இரண்டாம் சாள்ஸ் அரசர் தமது பிறிவிக் கவுன்சிலுக்குப் பிரியாவிடை கூறும்பொழுது பின்வருமாறு கூறியுள்ளார்:— "தாங்கள் எனக்களித்த நல்லாலோசனைகளுக்காக நான் நன்றி கூறுகின்றேன். தங்கள் தொகை இவ்வளவதிகமா யில்லாவிடின், தங்களாலோசனையை இன்னும் பன்முறை நாடியிருப்பேன். அங்கத்தவர் தொகை யதிகரித்திருந்ததினல் அரசியல் விஷயங்களைக் காலதாமதமின்றியும் இரகசியமாயும் ஆலோசித்துககொள்வது முடியாதாயிற்று. இக்காரணம்பற்றி உங்களுட் சிலரையே அழைத்து அரசியற் கருமங்கள் சம்பந்தமாக ஆலோசிக்கவேண்டி யேற்பட்டது." இரண்டாம் சாள்ஸ் மன்னனது காலந் தொடக்கம் பிறிவிக் கவுன்சில் மன்னனுக் காலோசனை கூறுவதை விட்டு, வரையறுக்கப்பட்ட சில கருமங்களைச் செய்வதிலேயே ஈடுபட்டது.

பிறிவிக் கவுன்சிலின் பெருந்தொகையான அங்கத்தவரிற் சிலர் தெரிந்தெடுக்கப்பட்டு அந்நிய நாட்டுக் குழுவினர் (A Foreign Committee) என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பெயருடன் ஆங்கில நாட்டிற்கும் ஏனைய அந்நிய நாடுகளுக்கு மிடையேயுள்ள அரசியற் சம்பந்தங்களை ஆராயும் பொறுப்பைக் கையேற்றனர். இவ்வந்நிய நாட்டுக் குழுவினரிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சிலரைக் கொண்ட சபை, அரசனின் மந்திரசபை யெனப்பட்டது. இதுவே இக்கால மந்திரி சபை யெனப்படும் கபினெற்றின் ஆரம்பமெனப்படலாம்.


19-ம் நூற்றாண்டில் (Right Honourable) றைற் ஒனெறபிள் என்னும் சொற்களைத் தமது பெயருக்கு முன்னால் வைத்துக்கொள்ளு முரிமையைக் கொடுக்கும் பிறிவிக்கவுன்சி லங்கத்துவம், ஒரு கௌரவப் பட்டமாகக் கருதப்பட்டது. ஆங்கிலநாட்டிலும் அதனரசியலைச் சார்ந்த பிறநாடுகளிலும் வாழ்க்கையின் வெவ்வேறு துறைகளில் மேம்பாடடைந்த 330 பிரமுகர்களை இப்போதுள்ள பிறிவிக் கவுன்சில் அங்கத்தவர்களாய்க் கொண்டுள்ளது. பிறிவிக் கவுன்சிலில் அங்கத்துவம் பெறுவோர் ஒரு குறிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சார்ந்தவரல்லர். அவர்கள் கட்டாயமாகப் பாராளுமன்ற அங்கத்தவர்களாயிருக்க வேண்டியதுமில்லை. பொதுமக்கள் மன்றத் தலைவர் மந்திரிசபை யங்கத்தவர்கள், இரு தலைமை யத்தியட்சர்கள், லண்டன் நகரின் அத்தியட்சர், அரச தூதர்கள் (Amba-assadors) முதலியயோர் பிறிவிக் கவுன்சிலின் அங்கத்தவ ராக்கப்படுவர்.



அரசன் அரச மந்தண மெனப்படும் பிறிவிக் கவுன்சிலோடு ஆலோசித்துச் செய்யுங் கருமங்கள் சிலவும், பாராளு மன்றத்தின் ஆலோசனையும் உத்தரவும் பெற்றுச் செய்யுங் கருமங்கள் வேறு சிலவுமாகும். "King-in-Council" அரசும் மந்தணமு மென்பதன் கருத்து, அரசனும் பிறிவிக் கவுன்சிலும் கூடிய தென்பதே. இச்சபை செய்யவேண்டிய சில முக்கியமான அரசியற் கடமைகளுள. அவை பெரும்பாலும் உபசாரமாகச் செய்யப்படுவனவேயாம். ஆங்கில நாட்டினதும் அதன் பேரரசைச் சார்ந்த வேறு நாடுகளினதும் ஆட்சி சம்பந்தமாகப் பாராளுமன்றத்தின் சம்மதம் பெற்றுச் சட்டங்களை நிறைவேற்றாது சில சந்தர்ப்பங்களில் அவ்வச் சமயத்துக் கேற்றபடி அரசியற் றலைவர்களாயுள்ளோர் மந்தண ஆணைகள் (Order-in-Council) எனப்படும் சட்டங்களின்மூலம் ஆட்சி செய்வர். இலங்கையின் அரசியற் றிட்டம் அவ்விதம் மந்தண ஆணை மூலமாக நிர்வாகத்திற் கொண்டுவந்த திட்டமே. அத்திட்டம் பாராளுமன்றத்திற் சட்டமாக நிறைவேறியதன்று. இலங்கையரசியற் பொறுப்பையுடைய ஆங்கிலக் குடியேற்ற நாட்டு மந்திரியினது ஆலோசனைப்படி பிரித்தானிய அரசாங்கத்தாரால் உண்டாக்கப்பட்ட திட்டமே. இத்தகைய மந்தண ஆணைகள் (Order-in-Council) குறித்த மந்திரியினதும் அவரது மந்திரி சபைச் சகாக்களினதும் விருப்பப்படி மாத்திரமே யியற்றப்படுமாயினும், உபசாரமாகப் பிறிவிக்கவுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலின் முன் அரச முன்னிலையிற் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். இப்பிறிவிக் கவுன்சிலின் கூட்டங்களில் மிகச் சில அங்கத்தினரே சமுகமாயிருப்பது வழக்கம். புதிய பாராளு மன்றத்தைக் கூட்டுவதற்காக விடுக்கப்படும் பேரறிவிப்பும், அரசனும் மந்தணமுமாகக் கூடி விடுத்ததெனக் கூறப்படும். மந்திரிகள் தத்தம் பதவிகளையேற்கும்போது இம்மந்தண சமுகத்திலே அரசனது கையை முத்தமிட்டு உத்தியோக மேற்குஞ் சத்தியத்தைச் செய்வது வழக்கம். அவ்வண்ணமே புதிதாக நியமிக்கப்பட்ட அத்தியட்சர்களும் அரசனுக்குச் செய்யவேண்டிய வணக்கத்தை மந்தண சமுகத்திற் செய்வர். இப்போதும் அநேக ஆட்சிக் கருமங்கள் இம்மந்தண சமுகத்திலேயே நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. அப்படி நிறைவேற்றப்படுங் கருமங்களெல்லாம் அம்மந்தண லிகிதர் கைச்சாத்திட்டு வெளிப்படுத்தும் அறிக்கைகள் மூலமே அத்தாட்சிப்படுத்தப்படும். இம்மந்தணம் அரசனின்றிக் கூட முடியாதாகலின், அநேகமாக மன்னன் வசிக்கு மரண்மனைகளுளொன்றிலேயே கூடுவது வழக்கம். ஒரேயொரு சமயத்தில் மாத்திரம் மந்தண அங்கத்தினரனைவரும் கூடும்படி யழைக்கப்படுவர். அஃதெப்போதெனின் அரசன் இறக்கும்போதாகும். ஆட்சிசெய்த மன்னன் இறந்துபோக அவரிடத்திற் புதிதாக வரவேண்டிய மன்னன் இம்மந்தணத்தார் முன்பாகவே, தாமரசேற்கும் சத்தியத்தைச் செய்து பிரஜைகளுக்கு



மேன்மைதங்கிய மன்னர் இந்தியப்போர்வீரருடன் கைகுலுக்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுக்கவேண்டி பேரறிவிப்பையும் வெளிப்படுத்துவர். அதன்பின் மந்தண அங்கத்தினர் புதிய அரசன்பேரில் இராச விசுவாச சத்தியத்தைச் செய்வர்.

இலங்கையில் இப்போது அநுசரணையில் இருக்குமரசியற் றிட்டம் மந்தண ஆணை மூலமாகவே கொடுக்கப்பட்டது. அம்மந்தண ஆணை பின்வரும் தலைப்பை யுடையது:—

**இலங்கை யரசாங்கசபை 1931-ம் ஆண்டு மந்தண ஆணை.** (இம்மந்தண ஆணை 1934-ம், 1935-ம் 1937-ம் 1939-ம் ஆண்டுகளிற் றிருத்த மந்தண ஆணைகளாற் பின்னரும் திருத்தப்பட்டது.) 1931-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ந் திகதி பக்கிங்காம் அரண்மனையில் நிறைவேற்றப்பட்டது.

அதி யுன்னத மேன்மை தங்கிய மன்னனும் மந்தணமும் சமுகமாயிருந்தனர்.

மன்னர் பிரான் 1923-ம் ஆண்டில் இலங்கைத் தீவிற்கும் அதனைச் சேர்ந்த ஏனைய நாடுகளுக்கும் ஒரு சட்டசபையை ஸ்தாபிக்கத் திருவுளங்கொண்டு தமது மந்தணத்தின் ஆலோசனைப் படியும் ஆலோசனையுடனும் இலங்கைச் சட்டசபை 1923-ம் ஆண்டு மந்தண ஆணையைப் பிறப்பித்தாராகையாலும்;

அம்மந்தண ஆணை 1924-ம் ஆண்டு இலங்கைச் சட்டசபைத் திருத்த மந்தண ஆணையினு



லும், 1928-ம் ஆண்டு இலங்கைச் சட்டசபைத் திருத்த மந்தண ஆணையினாலும், 1929-ம் ஆண்டு இலங்கைச் சட்டசபைத் திருத்த மந்தண ஆணையினாலும், 1930-ம் ஆண்டு இலங்கைச் சட்டசபைத் திருத்த மந்தண ஆணையினாலும் மேற்படி ஆணை திருத்தப்பட்டமையினாலும்;

இம்மந்தண ஆணைகள் யாவும் இதன்கீழ் 1923-ம் ஆண்டு தொடக்கம் 1930-ம் ஆண்டு வரையுமுள்ள மந்தண ஆணைகளென விபரிக்கப்படும்.

மேற்படி மந்தண ஆணைகளொவ்வொன்றிலும் அவ்வாணைக ளெல்லாவற்றையுமோ அல்லது சிலவற்றை மாத்திரமோ தமது மந்தணத்தின் ஆலோசனையைப் பெற்று நிராகரிக்கவோ அல்லது மாற்றவோ அல்லது திருத்தவோ உரிமை தனக்கும் தனதுரித்தாளர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றமையினாலும்;

1923-ம் ஆண்டு தொடக்கம் 1930-ம் ஆண்டு வரையுமுள்ள மந்தண ஆணைகட்கிணங்க ஒரு சட்டசபை நிறுவப் பெற்றிருக்கின்றமையினாலும்;

அச்சட்டசபைக்கு பதிலாக அரசாங்கசபையொன்றை ஸ்தாபித்து அவ்வரசாங்க சபை அங்கத்தினர்க்கு அரசியல் நிர்வாகத்திற் பங்குபற்றுமுரிமை கொடுக்கவேண்டிய அவசியங்காரணமாக மேற்படி மந்தண ஆணைகளை நிராகரிக்க வேண்டுமாகையாலும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவிலும் அத்தீவின் பெயரினால் எச்சட்டத்தையும் தமது மந்தணத்தின் ஆலோசனையோடு நிறைவேற்ற அரசனுக்குரிமையிருப்பதினாலும் இப்போது மன்னர்பிரான் தனது மந்தண ஆலோசனையுடன் பின்வருமாறு ஆஞ்ஞாபிக்கின்றனர்:—

இம்மந்தண ஆணையின் முடிவில் பின்வரும் வாக்கியம் காணப்படுகின்றது.

86. தமது மந்தணத்தின் ஆலோசனையுடன் இம்மந்தண ஆணையை நிராகரிப்பதற்கும் மாற்றுவதற்கும் திருத்துவதற்கு முரிமையைத் தனக்கும் தனதுரிமையாளருக்கும் மன்னர்பிரான் உரிமைப்படுத்துகின்றார்.

M. P. A. Hankey.

இப்பிறிவிக் கவுன்சிலினது நீதிவிசாரணைக் குழுவினர் மேற்றீர்ப்பு வேண்டித் தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை யாலோசனை செய்து தீர்ப்பளிக்கும்போது பின்வருமாறு கூறுவார்கள்: "இதற்குமுன் நாம் கூறியுள்ள நியாயங்களின்படி இம்மனு அங்கீகரிக்கப்படவேண்டியதே. ஆகையால் இக்குழுவின் அங்கத்தினரான பிரபுக்களாய நாங்கள் அவ்வண்ணம் மன்னர்பிரானுக்காலோசனை கூறுவோம்.

இலங்கையிலுள்ள உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்குமாறாய்ச் செய்யப்படும் மனுக்களை இப்பிறிவிக்கவுன்சிலின் நீதிவிசாரணைக் குழுவினர் விசாரித்துத் தீர்ப்பர்.



அரசன் தனது சுதந்திர வுரிமைகளை இப்பிறிவிக்கவுன்சிலின் மூலமாகவே பரிபாலிக்கின்றார்.

### அப்பியாச வினாக்கள்.

1. பிறிவிக் கவுன்சில் என்பது யாது?
2. மந்தண ஆணையென்பது என்ன?
3. பிறிவிக் கவுன்சிலின் நீதிவிசாரணைக் குழுவினர் செய்யுங் கருமங்க ளெவை?
4. இலங்கை யரசியற் றிட்டம் எவ்விதம் பெறப்பட்டது?
5. பிறிவிக் கவுன்சில் அங்கத்தின ரெல்லோரும் எவ்வெச் சமயங்களில் அழைக்கப்படுவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10-ம் அதிகாரம்

## பாராளு மன்றத்தின் கடமைகள்.

அரசியற் கருவிகளாயுள்ள சட்டங்களை யியற்று முரிமை பாராளு மன்றத்திற்கே யுரியதென முந்திய வதிகாரங்களில் நாமறிந்தோம். அச்சட்டங்களை யெவ்விதம் பாராளுமன்றம் நிரூபிக்கின்றதென ஆராய்வாம். ஒரு விஷயத்தைக் குறித்துச் சட்டமியற்றவேண்டிய அவசிய மேற்படின், வேண்டியவாறு அதற்குரிய சட்டத்தை யமைத்துப் பாராளு மன்றத்து இரு சபைகளில் எதிலாவதொன்றிற் பிரேரிப்பர். பிரேரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பின் அரச சம்மதம் பெற்ற பின்னரே குறித்த சட்டம் அரசியற் கருவியா யனுசரிக்கப்படும். பாராளு மன்றத்திற் பிரேரிக்கப்பட்டவோர் சட்டம், அதனங்கீகாரத்தையும் அரச சம்மதத்தையும் பெறுமுன்னுள்ள நிலையிற் **பிரேரணைச்சட்டம்** (Bill) எனப்படும். பிரேரணைச் சட்டம் மூவகைப்படும். அவை:—

(i) பணசம்பந்தமான பிரேரணைச் சட்டங்கள்.

(ii) சர்வ ஜன சம்பந்தமான சட்டங்கள்.

(iii) குறித்தவொரு இடம் அல்லது தொகுதியினர் சம்பந்தமான சட்டங்கள் என்பன.

சட்டங்கள் பெரும்பாலும் அரசாங்கத்தாராலேயே பாராளுமன்றத்திற் பிரேரிப்பது வழக்கம். எனினும், பாராளு மன்றத்தின் ஏனைய அங்கத்



தவர்களுக்கு மவ்வுரிமை யுண்டு. அவ்விதம் உத்தியோகமில்லாத அங்கத்தினராற் பிரேரிக்கப்படுஞ் சட்டம் உத்தியோகமற்ற அங்கத்தினர் சட்டமெனப்படும். ஒரு குறித்த தொகுதியினரை அல்லது இடத்தைப்பற்றிய சட்டத்திற்கும் உத்தியோகமற்ற அங்கத்தினராற் பிரேரிக்கப்படும் சட்டத்திற்கும் வித்தியாசமிருப்பது கவனிக்கத் தக்கது. சாதாரண அங்கத்தினராற் பிரேரிக்கப்படும் சட்டமும் ஏனைய சட்டங்கள்போற் சர்வசன சம்பந்தமானதாய் அல்லது குறித்த ஒரு தொகுதியினரையோ அல்லது இடத்தையோ சம்பந்தப்பட்டதாயிருக்கலாம்.

பாராளு மன்றச் சட்டமாய் (Act of Parliament) நிறுவுவதைக் கருதி ஆலோசனைக்குக் கொண்டுவரும் விஷயத்தையே (Bill) சட்டப் பிரேரணை யென்பர். பண சம்பந்தமில்லாத எச்சட்டப் பிரேரணையும் இரு சபைகளுள் ஏதாவதொன்றிற் றொடக்கப்படலாம். பணசம்பந்தமான பிரேரணைகள்யாவும் பொதுமக்கள் மன்றத்திலேயே பிரேரிக்கப்படவேண்டும். இவ்வாறு தொடக்கப்பட்ட சட்டப் பிரேரணையொன்று இருசபைகளினதும் அங்கீகாரம் பெற்று, அரசனாலும் அங்கிகரிக்கப்பட்டவுடன் பாராளுமன்றச் சட்டமாகி அனுசரணையில்வரும். ஒரு சபையினங்கீகாரம் பெற்ற சட்டப்பிரேரணை மற்றைய சபைக்கு அனுப்பப்பட்டு அங்குமங்கீகரிக்கப்பட்டபின் மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவரது கைச்சாத்தைப்பெற்றபின் சட்டமாகும். 1911-ம் ஆண்டில் நிறைவேற்றிய பாராளுமன்றச்சட்டம் அனுசரணையில் வந்தபின் பணசம்பந்தமான பிரேரணைகளைத் தீர்மானிக்கு முரிமை பெரும்பாலும் பொதுமக்கள் மன்றத்திற்கே சொந்தமாக்கப்பட்டது.

ஒரு சட்டப் பிரேரணை எவ்விதம் தொடங்கிப் பாராளுமன்றத்திற் படிப்படியாக அங்கீகரிக்கப்பட்டு ஈற்றில் அரசியற் கருவியாயுள்ள சட்டமாகின்றதெனக் கவனிப்பாம். பாராளுமன்றத்தின் சாதாரண அங்கத்தவரொருவர் அல்லது அரசாங்கத்தைச் சேர்ந்த மந்திரியாரொருவர் ஒரு சட்டப் பிரேரணையைப் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கவேண்டின், அதனைச் சட்டமுறைப்படியெழுதுமெழுத்தாளர் மூலம் எழுதுவிப்பர். பின் சபையிற் சமர்ப்பிக்க உத்தரவு கேட்டுப் பெற்று அப்பிரேரணையை முதன் முறை வாசிக்கப்படவேண்டுமெனப் பிரேரிப்பர். உத்தரவு கொடுக்கப்பட்டு, சட்டப் பிரேரணை முதன்முறை வாசிக்கப்படுமேயாயின், அதனை யச்சிட்டு அங்கத்தினரொவ்வொருவருக்கும் கொடுக்கும்படி சபை ஆஞ்ஞாபிக்கும். இதன் பிரதியை அங்கத்தினரல்லாத பொதுமக்கள் பெறவேண்டின் பணங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். சபையின் அங்கத்தினர் அச்சட்டப் பிரேரணையை நன்காராய்ந்து படிப்பதற்குப் போதிய காலங் கொடுக்கப்பட்டபின் பிரேரணை இரண்டாம்முறை சபையில் வாசிக்கப்படுவதற்குரிய தினங் குறிக்கப்படும். இரண்டாம்முறை வாசிக்கப்படுவதே சட்டப் பிரேரணை சம்பந்தமான கருமங்களில் முக்கியமானது. இந்தநேரம் பிரேரணையைக் கொண்டுவந்தவர், அதன் அவசியம் குறித்தும் எவ்வெக்காரணங்களினால் பாராளுமன்ற மதனை யங்கீகரிக்க வேண்டுமெனவுமொரு நீண்ட சொற்பொழிவை நிகழ்த்துவார். அவர் இரண்டாம் முறை வாசிக்கப்படவேண்டுமெனப் பிரேரித்த பிரேரணையை இன்னோர் அங்கத்தவர் அநுவதிப்பர். இவ்வாறுனதும் பிரேரணை சபையின் விவாதத்துக்கு விடப்படும். இந்த நேரத்திலே சிலர் மாறுகவும் சிலர் சார்பாகவும் பேசுவார்கள். இரண்டாவது வாசிப்பின் போது நிகழும் பேச்சுக்களில் அங்கத்தினர் பெரும்பாலும் இப்பிரேரணைக் கடிப்படையாயுள்ள கருத்துக்களையே கவனித்துப் பேசுவார்கள். இப்பிரேரணை சட்டமானுல், பிரசைகளா லநுசரிக்கப்படுவதிற் பல கஷ்டங்க ளேற்படுமென்று சிலர் பேசுவர். இன்னுஞ் சிலர் எடுத்த விஷயத்தைச் சரிவரக் கையாண்டு, நோக்கத்தைப் பெறுவதற்கு வேண்டியளவு வழிவகைகளை இப்பிரேரணை வகுக்கவில்லையெனப் பேசுவார். பின்னெரு சாரார் இப்பிரேரணை பெரும் பொருட்செலவை யுண்டாக்குவதாயிருப்பதால் அங்கீகரிக்கக் கூடாதெனக் கூறுவார். பிரேரணை முக்கியமானவோர் விஷயத்தைக் கையாளுவதாயின், அது பலநாட்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பல வாரங்களுக்குச் சபையில் விவாதிக்கப்படும். இவ்வாறாயதும் பிரேரணைக்கு மாறாயுள்ளவோரங்கத்தினர் அதனைத்தோற்கடிக்கும் பொருட்டு, "இப்பிரேரணை ஆறுமாதங்களின்பின் இதே தேதியிற் கொண்டுவரப்படவேண்டும்" என நான் பிரேரிக்கின்றேன் என்பார். அவர் கூற்று அங்கீகரிக்கப்படுமாயின், சட்டப் பிரேரணை தோல்வியுற்றதெனக் கவனிக்கப்படும். என்னை? பாராளுமன்றம் அவர் கூறியபடி ஆறுமாதங்களின்பின் அதே தேதியிற் கூடுமென்பதற்கு ஒருவித நிச்சயமுமில்லை யாதலின். எதிர்ப்பை வென்று சட்டப்பிரேரணை இரண்டாம்முறை வாசிக்கப்பட்டுச் சபையினங்கீகாரம் பெறுமாயின், அப்பிரேரணையின் ஒவ்வொரு அம்சத்தையும் பரிசீலனைசெய்து பாராளுமன்றத்திற்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு ஆலோசனைச்சபை (Committee) நியமிக்கப்படும். பிரேரணைச் சட்டம் முக்கியமான வொன்றாயின் சபையினங்கத்தினர் யாவரும் ஆலோசனைச்சபையாகக் கூடிப் பிரேரணையைப் பரிசீலனை செய்வர். பிரேரணை சாதாரணமானதாயின் சிலஅங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைச்சபை நியமிக்கப்பட்டு அவர்களாற் பரிசீலனை செய்யப்படும்.

சகல அங்கத்தினர்களையும் கொண்ட ஆலோசனைச்சபை பிரேரணைச் சட்டத்தைப் பரிசீலனை செய்யும்போது பொதுமக்கள் மன்றத்தலைவர் அக்கிராசனராயிராது ஆலோசனைச்சபைத்தலைவர் அக்கிராசனராயிருப்பர். இவ்வாறு சபை ஆலோசனைச் சபையாயிருந்து கடமையாற்றும்போது பாராளுமன்றத்தி னாதிக்கத்திற் கறிகுறியாயுள்ள (The Mace) முத்திரைக்கோல் சபைத் தலைவரின் மேசையின்கீழ் வைக்கப்படும்.



ஆலோசனைச் சபை யங்கத்தினர் பிரேரணைச் சட்டத்தி னொவ்வொரு வாக்கியத்தையும் பதம் பதமாயெடுத்து மிகவும் கவனித்துப் பரிசீலனை செய்வர். இதன் பயனாகக் குறித்த சட்டத்திலநேக மாற்றங்கள் செய்யப்படலாம். ஆலோசனைச்சபை பரிசீலனையை முடித்ததும் சபை, சபைத் தலைவரின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெறும். அப்போது ஆலோசனைச் சபைத் தலைவர் பிரேரணைச் சட்டத்தில் ஆலோசனைச்சபை செய்த திருத்தங்களைச் சபை யேற்காவிடின், தாமே வேறு திருத்தங்களைச் செய்யவுங் கூடும்; அன்றி யின்னொரு முறை பரிசீலனை செய்யும்பொருட்டு அவ்வாலோசனைச் சபைக்கே பிரேரணையைத் திருப்பியனுப்பலாம். இவ்விதம் ஆலோசனைச் சபையின் பரிசீலனையிலிருக்கும் நிலையை அறிக்கைநிலை (Report Stage) என்பர். ஆலோசனைச் சபையார் செய்யும் திருத்தங்களைச் சபை யேற்றுக்கொண்டால் அப்பிரேரணைச் சட்டத்தை மூன்றாம் முறை வாசிப்பதற்கு ஒருதினம் குறிக்கப்படும். அன்று பிரேரணைச் சட்டம் மூன்றாம் முறை வாசிக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுவதிக்கப்படின், அது அச்சபையி னங்கிகாரம் பெற்றதாகும். இத்தகைய நடபடிக்கைகள் பொதுமக்கள் மன்றத்திலேயே நிகழ்ந்ததாயின் பிரேரணைச் சட்டம் பிரபுக்கள் மன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அம் மன்றத்திலும் மேற்கூறிய படிமுறைகளாகப் பிரேரிக்கப்பட்டு ஆலோசனைச் சபையாற் பரிசீலனை செய்யப்படும். பிரபுக்கள் மன்றம் குறித்த பிரேரணைச் சட்டத்தில் ஒருவித மாற்றமும் செய்யாவிடின், அம்மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டவுடன் மன்னர் பிரானுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கிகாரம் பெற்றதும் சட்டமாகும். எனினும் பிரபுக்கள் மன்றம் மேற்படி பிரேரணைச் சட்டத்தில் மாற்றம் அல்லது திருத்தம் செய்யுமாயின், அவைகளை யமைத்து மூன்றாம்முறை சட்டத்தை வாசித் தங்கீகரிக்குமுன் தாம் செய்துள்ள திருத்தங்கள் பொதுமக்கள் மன்றத்தார்க்கு முடன்பாடாகுமோவென்று அறியும்பொருட்டு அத்திருத்தங்களைப் பொதுமக்கள் மன்றத்திற்குச் சமர்ப்பிப்பார்கள். இவைகளைப் பொதுமக்கள் மன்றம் தெரிந்தெடுத்த அங்கத்தினர் சிலரும் பிரபுக்கள் மன்றம் தெரிந்தெடுத்த அங்கத்தினர் சிலரும் சேர்ந்து பரிசீலனை செய்வர். இவ்வாறாய பின் இருதிறத்தாரும் ஒருவித முடிவுக்கு வருவார்கள். இவ்வண்ணம் இரு சபைகட்கு மிடையே அபிப்பிராய பேதமின்றி ஒற்றுமையேற்பட்டதும் பிரபுக்கள் மன்றம் திருத்தப்பட்ட பிரேரணைச் சட்டத்தை மூன்றாம்முறை வாசித்தனுமதிக்கும்.



இந்நிலையில் பிரேரணைச் சட்டம் மன்னர் பிரானுக்குச் சமர்ப்பிக்க ஆயத்தமாகின்றது. தமக்குச் சமர்ப்பிக்கப்படும் சட்டங்களை யங்கீகரிக்க மன்னர் ஒருபோதும் மறுப்பதில்லை. ஆங்கில அரசியற் சம்பிரதாயத்தில் அவ்விதம் மறுக்கு முரிமை அரசனுக்கு வழங்கப்பட்டதில்லை. தனது அங்கீகாரத்தைத் தெரிவித்தற்பொருட்டு மன்னர் பிரான்சிய பாஷையில் "Le Roy Le Veult" என எழுதித் தனது கைச்சாத்தை யிடுவர். ஷை சொற்றொடரின் கருத்து, அரசன் ஆஞ்ஞாபிக்கின்றானென்பதே. இச்சொற்றொடர் மூன்றாம் எட்வேட். மன்னர் (1327—1377) காலந் தொடக்கம் பரம்பரையாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. மன்னரது கைச்சாத்தைப் பெற்றதும் பிரேரணைச் சட்டம் பிரேரணை நிலையி னீங்கித் தேசச் சட்டமாகிச் சட்டப் புத்தகத்திற் பதிவு செய்யப்படும்.

நடைமுறையிலிருக்கும் சட்டமொன்றைக் கவனித்துச் சட்டமாக்கப்படும் முறையை யாராய்வாம்.

**1933-ம் ஆண்டு நிரூபிக்கப்பட்ட குழந்தைகள் பாலியர்கள் சட்டம்** என்பதைக் கவனிப்பாம்.

1. **நோக்கக் குறிப்பு:**—அதாவது எடுத்துக்கொண்ட சட்டம் எந்நோக்கத்தை யுடையதெனச் சுருக்கமாகக் கூறுவது. ஷை சட்டம் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பாலியர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பரிபாலனஞ் செய்வதற்கு இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் ஆக்கப்பட்ட சட்டங்களின் கொள்கைகளை யெல்லா மொருங்கு சேர்த்து ஒரு சட்டமாக்குவது.

**2. தோற்றுவாய்:**—பாராளு மன்றத்தின் ஒவ்வொரு சட்டமும் பின்வரும் தொடக்கத்தையுடையதாகும். இக்காலத்தில் அரசியற் பொறுப்பைக் கொண்டிருக்கும் பாராளு மன்றத்திற் கூடியுள்ள சமய பரிபாலனப் பிரபுக்களினதும் தேசபரிபாலனப் பிரபுக்களினதும் பொதுமக்களினதும் ஆலோசனைப்படியும் அங்கீகாரப்படியும் அதியுன்னத மேன்மை தங்கிய மன்னர் பிரான் பின்வருமாறு சட்டம் வகுக்கின்றார்.

**3. சட்டத்தி னங்கங்கள்:**—ஒவ்வொரு சட்டமும் பல பகுதிகளை யுடையது. ஷை சட்டம் ஆறு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதியும் தனித்தனி ஒவ்வொரு விஷயங்களை எடுத்தாளும் அங்கங்களையும் உப அங்கங்களையும் கொண்டது.

**4. சுருக்கப் பெயர்:**—பொது வழக்கிற் பிரயோகித்தற்பொருட்டு ஒவ்வொரு சட்டத்திற்கும் ஒரு சுருக்கப் பெயர் கொடுக்கப்படுவது வழக்கம். ஷை 1933-ம் ஆண்டுச் சட்டத்தின் சுருக்கப் பெயரே முதலிற் கூறப்பட்டது.

**5. அட்டவணைகள்:**—ஒவ்வொரு சட்டத்தோடும் சில விளக்க அட்டவணைகள் சேர்க்கப்பட்டிருக்கும். ஒரு அட்டவணையில், குறித்த சட்டமியற்றப்படுவதினால் வேறெச் சட்டங்கள் நிராகரிக்கப்பட்ட



தென விபரிக்கப்பட்டிருக்கும். மேற்படி சட்டம் 109 அங்கங்களையும் ஆறு அட்டவணைகளையும் கொண்டிருக்கின்றது. இச்சட்டம் சாதாரண வழக்கில் 1933-ம் ஆண்டு குழந்தைகள் பாலியர்கள் சட்டமெனப் பெயர் பெறினும் சட்ட நூல்களில் அது வேறு விதமாகப் பெயர் பெறும்.

அப்பெயர்:— (23 Geo. V. Ch. 12.) 23. V. ஜோர்ஜ் அதிகாரம் 12 என்பதாகும். ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் அரசாண்ட 23-ம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டங்களில் 12-ம் அதிகாரமென்பதே இதன் கருத்து.

முந்திய அதிகாரமொன்றிற் கூறியதுபோல் 1911-ம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டப்படி, பண சம்பந்தமான எச்சட்டத்தையும் திருத்த அல்லது நிராகரிக்கப் பிரபுக்கள் மன்றத்துக் குரிமையில்லை. பண சம்பந்தமான ஒரு சட்டத்தைப் பிரபுக்கள் மன்றம் அங்கீகரிக்க மறுத்தால், பொதுமக்கள் மன்றம் அதனை நிரூபிக்கும்போது "1911-ம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டப்படி இது நிரூபிக்கப்பட்டது." என்ற சொற்றொடர்களைச் சேர்த்து அதனை நிரூபிப்பர்.

ஒவ்வொரு சட்டமும் பாராளு மன்றத்தினிரு சபைகளிலும் மும்முறை வாசிக்கப்பட்டே ஈற்றில் அங்கீகரிக்கப்படுமென முன் கூறினோம். அவ்வண்ணம் ஒவ்வொரு முறையும் வாசிக்கப்படும்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தினரின் வாக்குக்களெடுக்கப்படுவது வழக்கம். வாக்கெடுக்கும் முறை யெவ்வாறெனின், சட்டத்திற்குச் சார்பாயுள்ளார் **'ஆம்'** எனச் சொல்ல வேண்டுமென்றும் மாறாயுள்ளோர் **'இல்லை'** எனச் சொல்ல வேண்டுமென்றும் சபைத்தலைவர் கூற, சார்பாயுள்ளோர் முதலிலும் மாறாயுள்ளோர் அதன் பின்னும் **ஆம், இல்லை** எனக் கூறுவர். இவ்வாறிரு சாராரும் ஆம், இல்லையெனச் சொல்லும் போது ஏற்படும் சத்தத்தின் ஏற்றத்தாழ்ச்சியைக் கொண்டே எக்கட்சியினர் கூடிய தொகையான வாக்குக்களை யுடையரெனச் சபைத் தலைவர் தீர்மானிப்பர். தலைவரின் அத்தீர்ப்பிற் றிருப்திப் படாத எவ்வங்கத்தினரும் இருசாராரின் வாக்குக்களும் எண்ணிக்கை செய்யப்பட வேண்டுமெனச் சபைத் தலைவரைக் கேட்க வுரிமை யுண்டு. அப்படிச் சந்தர்ப்பமேற்படின், சபைத் தலைவரின் கேள்விப்படி சபாமண்டபத்தின் வலப்பாகத்துள்ள அறைக்குள் சார்பான கட்சியினரும், இடப்பாக அறைக்குள் மாறான கட்சியினரும் செல்வர். இவ் வறைகளுள் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களின் தொகையு மெண்ணிக்கை செய்யப்பட்டுத் தலைவருக் கறிவிக்கப்படும். தலைவர் அவற்றைச் சபைக்குத் தெரிவிப்பார்.



## அப்பியாச வினாக்கள்.

1. பிரேரணைச் சட்டத்திற்கும் சட்டத்திற்குமுள்ள வித்தியாசமென்ன ?
2. சர்வஜன சம்பந்தமான சட்டங்களென்றாலென்னை ?
3. குறித்த தொகுதியினர் சம்பந்தமான சட்டங்களென்றாலென்ன ?
4. அரசாங்கத்தைச் சேராத சாதாரண அங்கத்தவரது பிரேரணைச்சட்டமாவது யாது ?
5. ஒருசட்டம் சட்டப்புத்தகத்திற் பதிவுசெய்யப்படுமுன் எப்படித் தொடக்கப்பட்டு முடிவுபெறுமென விபரிக்க ?
6. மன்னர்பிரான் ஒருசட்டத்தை அங்கீகரிக்குமுன் என்ன செய்வர் ?
7. பாராளுமன்றச் சட்டங்கள் எவ்விதம் விபரிக்கப்படும் ?
8. ஒருசட்டத்தின் பகுதிகளாவன யாவை ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11-ம் அதிகாரம்.

# வரவு செலவுத் திட்டம்.

அரசியலை நடாத்துவதற்குத் தேவையாகும் பொருளை அரசன் பெறும்பொருட்டு வரிகளை விதிப்பதே முற்காலத்திற் பாராளுமன்றத்தின் முக்கிய கடமையாயிருந்தது. இப்போதும் நாட்டின் பரிபாலனத்திற்குத் தேவையான பொருளைச் சேகரிப்பதும் அப்பொருள் தகுந்த வழியிற் செலவழிக்கப்படுகின்றதோ வெனப் பார்ப்பதும் பொதுமக்கள் மன்றத்தின் முக்கிய கடமைகளாம். அரசிறை விதித்தலும் அதன் செலவை ஒழுங்குபடுத்தலுமாகிய உரிமைகள் பொதுமக்கள் மன்றத்தைச் சார்ந்ததே.

அரசிறை வரவு செலவு ஒரு மந்திரியின் பொறுப்பிலுள்ளது. அவர் (Chancellor of the Exchequer) கருவூலத் தலைவ ரெனப்படுவர். இம் மந்திரிப் பதவி மிக முக்கியத்துவம் வாயந்தது. பிரதம மந்திரியாரைப் போலவே இவரும் அரசினராற் கொடுக்கப்படும் மாளிகையொன்றில் வசிப்பர். இவரது மாளிகை லண்டன்மாநகரில் டவுணிங் வீதியிலுள்ள 11-ம் இலக்க வீடாகும்.

தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை முதலிய படைகளை நன்னிலையில் வைத்திருப்பதற்கும் கல்வித்துறையிற் செய்யவேண்டியவற்றைச் செய்வதற்கும் ஏனைய அரசியற் கருமங்களை யாற்றுவதற்கும் பணம் வேண்டப்படும். இப்பணம் பிரஜைகளிடமிருந்தே வரி மூலமாக அறவிடப்படும்.

கருவூலம் = பொக்கிஷம்.



ஒவ்வொரு வருட முடிவிலும் பலதிறப்பட்ட அரசியற் பகுதியினரும் தத்தம் பொறுப்பில் விடப்பட்ட அரசியற் றொழிலை, அடுத்த வருடத்தில் நடாத்துவதற்கு எவ்வளவு தொகைப் பணம் வேண்டுமென்று கணக்குத் திட்டத்தை ஆயத்தஞ் செய்வர். இவ்வாறாயத்தஞ் செய்யப்பட்ட திட்டம் கருவூலப் பகுதியினர்க் கனுப்பப்பட்டு, அப்பகுதி உத்தியோகத்தர்களால் மிகவும் கவனித்து ஆராயப்படும். பின்னர் இவற்றையெல்லாம் கருவூலத் தலைவர், பிரதம மந்திரிக்கும் ஏனைய மந்திரி சபையங்கத்தினர்க்கும் தெரிவுறுத்துவார்.

இத்திட்டங்கள் ஈற்றிற் பொதுமக்கள் மன்றத்திற் சமர்ப்பிக்கப்படும். இத்திட்டங்களை ஆராய்வதற்குப் பொதுமக்கள் மன்றம் ஒரு ஆலோசனைச் சபையாகக் கூடும். அச்சபை செலவு ஆராய்வுச் சபை (The Committee of Supply) எனப்படும். இச்சபை திட்டத்தை ஒவ்வொரு பகுதியாக எடுத்துப் பரிசீலனை செய்யும். பரிசீலனை செய்யப்பட்ட திட்டம் அங்கீகரிக்கப்பட்டவுடன் அடுத்த வருட அரசியலை நடாத்துவதற்கு எவ்வளவு பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பது கருவூலத் தலைவருக்குத் தெரியவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில நாட்டில் அரசியற் கணக்குக்களெல்லாம் ஒவ்வொரு வருடமும் மார்ச்சு 31-ந் திகதியுடன் முடிவு பெறும். ஆகையால் அடுத்த வருட வரவுத் திட்டத்தை எப்ரில் மாதத்திலேயே கருவூலத் தலைவர் பாராளு மன்றத்திற்குச் சமர்ப்பிப்பர். தேவையான பணத்தை எவ்வெவ் வழிகளைக் கொண்டு சேகரிக்க ஆலோசித்திருக்கின்றார் என விபரிக்கும் அறிக்கையே **வரவுத்திட்டம்** எனப்படும். பாராளு மன்றத்தில் இவ்வரவுத் திட்டம் விவாதிக்கப்படுந் தினம் மிக முக்கியமானதாகக் கருதப்படும். அன்று பொதுமக்கள் மன்ற அங்கத்தவர் பெரும்பாலாரும் சமுகமாயிருப்பர். அங்கத்தவரல்லாத பொதுமக்கள் பாராளு மன்றத்தின் நடபடிக்கைகளைக் கவனிப்பதற்கென விடப்பட்டிருக்கும் மண்டபங்களும் நிறைந்திருக்கும். வரவுத் திட்டத்தைச் சபைக்குச் சமர்ப்பித்துப் பேசும்போது கருவூலத் தலைவர் சென்ற வருடத்தின் அரசிறை வரவு செலவு எந்நிலையிலிருந்ததென்பதை விபரித்தும் வருகிற வருடத்தில் ஏற்படக்கூடிய செலவுகளுக்கு வருவாய்களை எவ்வெவ் வகையில் வகுக்க உத்தேசித்திருக்கின்றாரென்றும் தெரிவிப்பார். புதிதாகக் கருவூலத் தலைவர் பதவிக்கு வரும் பிரமுகர், தாம் முதன்முதற் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டத்தின் முறையாலும் அதனைச் சபைக்குச் சமர்ப்பித்துப் பேசும் பேச்சினாலும் தமது பிற்கால அரசியற் புகழை ஆக்குவார் அல்லது அழிப்பார். கருவூலத் தலைவரின்



திட்டமானது ஒரு பிரேரணையேயன்றி முடிவுபெற்ற கருமமல்லவென்பது நினைவுகூரத் தக்கது. ஏனெனில், அரசிறைகளைச் சேகரிக்கும் முறைகளைத் தீர்மானிக்கும் உரிமை பொதுமக்கள் மன்றத்தைச் சார்ந்ததாகலின்.

கருவூலத் தலைவர் தமது வரவுத் திட்டத்தைச் சமர்ப்பித்ததும் சபை, **வழிவகை ஆராய்வுச் சபை** (A Committee of Ways and Means) யாக மாறித் திட்டத்தைப் பரிசீலனை செய்யும். அடுத்தவருட அரசியற் செலவுக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்கத் தகுந்த வழிகளை ஆராய்வதே இச்சபையினரின் கடமையாகும். சபை, கருவூலத் தலைவர் சமர்ப்பித்த பணஞ் சேகரிக்கும் பிரேரணைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து ஒரு தீர்மானத்துக்கு வந்தபின், பிரேரணைகளொருங்கு சேர்க்கப்படும். பின் வரவு செலவுப் பிரேரணைச் சட்டமாய்த் திரும்பவும் பாராளுமன்றத்தின் கவனத்துக்கு, ஏனைய பிரேரணைச் சட்டங்களைப்போல் மூன்றுதரம் பிரேரிக்கப்படுதல், ஆலோசனைச்சபையால் ஆராயப்படுதல், அறிக்கை செய்யப்படுதல் ஆகிய கருமங்கள் மூலம் பொதுமக்கள் மன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஈற்றில் அங்கீகரிக்கப்படும். பின்னர் இச்சட்டமும் ஏனைய சட்டங்களைப்போலவே பிரபுக்கள் மன்றத்தின் ஆலோசனைக்கனுப்பப்படுமாயினும், அச்சபையினரது அங்கீகாரம் இப்பணச் சட்டங்களுக்கு இன்றியமையாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்று. முன் கூறியதுபோற் பணச் சட்டங்களில் எவ்வித திருத்தத்தையும் அம்மன்றஞ் செய்யவியலாது. மேற்சபையாருக்கும் கீழ்ச்சபையாருக்கும் இப்பணச் சட்டங் காரணமாக அபிப்பிராய பேதமேற்படின், கீழ்ச் சபையார் தம்மால் அங்கீகரிக்கப்பட்ட பணச் சட்டத்தை நேரே மன்னர்பிரானுக் கனுப்பி அவரது அங்கீகாரத்தைப் பெறலாம். பொதுமக்கள் மன்றம் செலவு ஆராய்வுச் சபை (Committee of Supply) யாக மாறி, செலவுத் திட்டத்தை யாராயும்போதும் வழிவகை ஆராய்வுச் சபையாயிருந்து வருமானப் பிரேரணைகளை ஆராயும்போதும் அரசாங்கத்தைச் சேராத ஏனைய அங்கத்தினர் அரசாங்கத்தின் பல பகுதிகளினதும் வேலைகளைக் குறித்துக் கண்டனஞ் செய்வர். ஒரு மந்திரியினது மேற்பார்வையில் நடைபெறும் அரசியற் பகுதியின் செலவுத் திட்டம் ஆராயப்படும்போது அப்பகுதியாரின் கொள்கைகளை விவாதிக்க விரும்புபவர், அதனைத் தொடக்குவதற்கு வழியாக மேற்படி திட்டத்தில் ஒரு சிறு தொகையைக் குறைக்கவேண்டுமெனப் பிரேரித்து அதன் சார்பாகப் பேசும்போது அப்பகுதியினரின் கொள்கைகளைக் கண்டிப்பர். எனவே, இம்முறைபற்றி அரசிய லெதிர்க் கட்சிக்கும் ஏனைய அங்கத்தினர்க்கும் அரசியற் கட்சியாரது கொள்கைகளிலும் வழிவகைகளிலும் தமக்கேற்படும் அதிருப்தியை எடுத்துக் காட்டவும் கண்டிக்கவும் போதிய சந்தர்ப்ப மேற்படுகின்றது.



அரசியற் கட்சியாராற் சமர்ப்பிக்கப்பட்ட செலவுத்திட்டத்தைப் பொதுமக்கள் மன்றம் அங்கீகரிக்க மறுப்பின், அம்மறுப்பு அரசினர்பால் இம்மன்றத்திற்கு நம்பிக்கையில்லை யென்பதைத் தெரிவிக்கின்றதென்பதைக்கருதி, மந்திரி சபையினர் தத்தம் பதவிகளினின்றும் விலக வேண்டும்.

செலவு ஆராய்வுச் சபையாக மாறிப் பொதுமக்கள் மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட செலவுத்திட்டம், பிரேரணைச்சட்டமாக அமைக்கப் பட்டுச் சபையின் அங்கீகாரத்துக்கு விடப்படும். இச்செலவுப் பிரேரணைச்சட்டத்தை யங்கீகரிப்பதினால் சபை அரசினர்க்கு அச்சட்டத்தில் ஒவ்வொரு பகுதியினருக்குமென விடப்பட்டிருக்குந் தொகைகளை அரசிறை மூலதனத்திலிருந்து எடுத்துச் செலவுசெய்ய உத்தரவு கொடுக்கின்றது.

கருவூலத்தலைவர் எவ்வழிகளால் மேற்குறிக்கப்பட்ட தேவைகளுக்கு பணஞ் சேகரிக்கலாமென ஆராய்வாம்:—

வரிகளை விதித்தும், கடன்பெற்றும் பணஞ் சேகரிக்கலாம். அரசினர் பெறும் கடன், சின்னாட் கடன் (Short Loan), பன்னாட் கடன் (Long Loan) என இருதிறத்தது. சின்னாட் கடனாவது சில வருடங்களுக்குள் திருப்பிக்கொடுக்கப்படுங் கடனும். பன்னாட்கடனாவது பலவருடங்களுக்குள் திருப்பிக் கொடுக்கவேண்டிய கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலின் சாதாரண செலவுகளுக்கு வேண்டிய பணம் வரிகளின் மூலமாயும், போர் நடாத்துதல் முதலிய ஏனைய கருமங்களுக்கு வேண்டிய பணம் கடன்மூலமாயும் சேகரிக்கப்படும்.

வரிகள் இருவகைப்படும். அவை பிரஜைகள் அரசினர்க்கு நேராகக் கொடுக்கும்வரியும் அரசினர் மறைமுகமாகப் பெறும் வரியுமாகும். வருமானவரியே நேர்வரிகளுள் இக்கு முக்கியமானது. இறந்தவரொருவரின் ஆஸ்தியை அவரது உரிமைக்காரர் பெறுமுன் அவ்வாஸ்தியிலிருந்து அறவிடப்படும் (Death or Estate duty) ஆஸ்தி வரியும் நேர்வரியாகும். ஆங்கில நாட்டில் இறப்பவரொருவர் நூறு தங்கப்பவுணுக்குமேற் பெறுமதியுள்ள ஆஸ்தியை விட்டிறப்பாராயின், அவராஸ்தியிற் குறித்த ஒரு தொகையை அரசாங்கம் பெறும். ஆகாயவசனி, மோட்டோர் வண்டி அனுமதிகளின்மீது விதிக்கும் வரிகளும் நேர்வரிகளே. இந்நேர்வரிகளைக் கொடுக்கும் பிரஜைகள் தாம் இவ்வளவு தொகையை வரியாகக் கொடுக்கின்றனரென அறிவர். ஆனல் பிரஜைகள் நேர்முகமாக அறியாமற் கொடுக்கும் வரிகளுமுள. புகையிலை, லாகிரிவஸ்துக்கள், சீனி, தேயிலை முதலிய பொருள்களின்மீதும் வரி விதிக்கப்படும். இப்பொருள்களிற் சில பிறநாடுகளிலிருந்து வருவிக்கப்படுவன. ஏனையவை உள்நாட்டிலேயே செய்யப்படுவன. பிறநாடுகளிலிருந்து இறக்குமதி



யாகும் பொருள்கள்மீது விதிக்கப்படுவது சுங்கவரி (Custom Duty) எனப்படும். உள்நாட்டுப் பொருள்கள்மீது விதிக்கப்படுவது உள்நாட்டுச் சரக்குவரி (Excise Duty) எனப்படும். இவ்வரிகளை அவ்வப்பொருள்களை முறையே வருவிப்போரும், உண்டாக்குவோரும் முதற்படியில் அரசினருக்குக் கொடுத்துப்பின் அப்பொருள்களை வாங்கி உபயோகிப்போரிடமிருந்து பெறும்விலைகளுடன் சேர்த்தறவிடுவர். இவை மறைமுக வரிகளாம்.

அசாதாரண செலவுகள் ஏற்படும்போதெல்லாம் பாராளுமன்றம் கடன்பெற்று அச்செலவைச் செய்வதற் குத்தரவு கொடுக்கும். உதாரணம்:— 1914-ம் ஆண்டில் ஏற்பட்ட மகாயுத்தத்தின் செலவுகளுக்கும் இப்போது நடக்கும் யுத்தத்தின் செலவுகளுக்கும் யுத்தகடன் (War Loan) மூலமும், போர்ச் சேமிப்புத்தகுதிப் பத்திரங்கள் (War Savings Certificates) மூலமும் பணத்தை அரசாங்கம் கடனகப் பெற்றது. இக்கடன்களெல்லாம் சேர்ந்ததொகையே நாட்டின்கடன் (National Debt) எனப்படும். வருடந்தோறும் பாராளுமன்றம் வரவுசெலவுத் திட்டங்களை யங்கீகரிக்கும்போது நாட்டுக்கடன் பெயராற் கொடுக்க வேண்டிய வட்டிக்காகவும் ஒருதொகையை ஒதுக்கிவைக்கும். அதுவுமன்றிக் கடனைப் பாகம்பாகமாகக் கொடுத்துத் தீர்ப்பதற்குக் கடன்தீர்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி (Sinking fund) என ஒரு தொகையையும் இயன்றளவு தெண்டித்தொதுக்கி வைக்கும்.

அரசியற் செலவுகளைச் செய்யும் அரசியற் பகுதியினர் தொடக்கத்திலேயே அச்செலவுகளுக்கொரு திட்டமிட்டிருப்பாரேயாயினும் வருடாந்தஞ் சமீபிக்கும்போது சில காத்திராப்பிரகாரமான செலவுகளையுஞ் செய்ய வேண்டிய நிலையிலிருப்பர். பாராளுமன்றத்தி னுத்தரவின்றி எப்பணத்தையும் செலவுசெய்ய இயலாதாகையால், காத்திராப் பிரகார மேற்படும் செலவுகளைச் செய்வதற்கு உத்தரவுகேட்டு அவ்வப்போது **குறை நிரப்புச் செலவுத் திட்டத்தைப்** (Supplementary Estimate) பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து உத்தரவு பெறுவர். இக்குறை நிரப்புத் திட்டமும் வருடச் செலவுத் திட்டம்போலவே பாராளுமன்றத்திற் பிரேரிக்கப்பட்டு அநுமதிக்கப்படவேண்டும்.

இதுகாறும் அரசியற் செலவுகளுக்கு வேண்டிய பணத்தைப் பாராளுமன்றம் எவ்வெவ் வகைகளில் சேகரிக்குமென்பதை யாராய்ந்தோம். சேகரித்த பணத்தை எவ்வழிகளிற் செலவிட வேண்டுமென்பதை விதித்தலும் பாராளுமன்றத்தி னுரிமையே. இக்கடமையைப் பாராளுமன்றம் **செலவு நிர்ணயச் சட்டம்** (Appropriation Act) மூலம் நிறைவேற்றும். இவ்விதம் செலவு நிர்ணயத் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட செலவுகள்



யாவும் அவ்வப்படியே செலவுசெய்யப்படுகின்றனவோ என்பதைப் பாராளுமன்றம் எவ்விதம் அறிந்துகொள்ளும்? பாராளுமன்றத்துக்கு அவற்றை அறிவிப்பதற்கே பிரதம கணக்குப் பரிசோதகரின் பகுதியென ஒரு அரசியற் பகுதியுண்டு. இப்பிரதம கணக்குப் பரிசோதகர், அரசியற் கட்சிகளுடன் எவ்வித கலப்புமில்லாத ஒரு உத்தியோகத்தவராவர். அரசியற் செலவுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட வெவ்வேறு தொகைப் பணங்களைப் பாராளுமன்றம் எவ்வெச் செலவுக்கென ஒதுக்கி வைத்ததோ அவைகட்கே அரசாங்கத்தாரை உபயோகிக்கச் செய்வது இவ்வுத்தியோகத்தரின் முக்கிய கடமையாகும். இவரது உத்தியோகப் பகுதியிற் கடமையாற்றுவோர் வருடந்தோறும் அரசியற் கணக்குக்களை யெல்லாம் பரிசோதித்து அரசியற் செலவைக் குறித்துப் பொதுமக்கள் மன்றக் கணக்குப் பரிசோதனைச் சபையாருக்கு அறிவிப்பர். நமது இலங்கையிலும் இவ்வண்ணமே பிரதம கணக்குப் பரிசோதகர் (Auditor General) அரசியற் செலவுகளைப் பரிசீலனை செய்து அரசாங்க சபைக்கு அறிவிப்பர்.

ஆங்கில சரித்திரத்தில் இடைக்காலத்திலே (Middle ages) மன்னர் பிரானுடைய வருவாய்களையெல்லாம் பெற்றுச் சேமித்து வைத்து அவருடைய செலவுகளுக்குத் தேவையான தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் காலத்துக்குக் காலம் கொடுத்துக் கணக்கெழுதி வைத்திருக்கும் உத்தியோகத்தர் (Chess-board) சதுரங்க ஆட்டத்திற்குபயோகப்படும் பலகைபோன்ற கட்டங்களமைந்த (Chequered) மேஜையிற் றமது தொழிலைச் செய்து வந்தமையால் அவ்வுத்தியோகத்தர் (The Chancellor of the Exchequer) கருவூலத்தலைவ ரெனப்பட்டார்.

1938-ம் ஆண்டு எப்றில் மாதம் 1-ம் தேதி தொடக்கம் 1939-ம் ஆண்டு மார்ச்சு 31-ந் தேதி முடியவுள்ள ஒரு வருடத்தின் அரசியல் வருவாய் மூலங்களையும் அவை எவ்வாறு செலவழிக்கப்பட்டனவென்பதையும் அடுத்த இருபக்கங்களில் அட்டவணையாக அமைத்துள்ளோம் அவற்றைக்காண்க.



## வருமானம்.

| மூலம் | தொகை (தங்கப்பவுண்) |
|---|---|
| சுங்க வரி .... .... | 226,326,000 |
| உள்நாட்டுச் சரக்குவரி (Excise) .... | 114,200,000 |
| | 340,526,000 |
| மோட்டோர் வாகன வரி .... | 35,608,000 |
| மரண வரி (Estate Duty) .... | 77,430,000 |
| முத்திரைகள் .... | 20,980,000 |
| வருமான வரி முதலியன .... | 335,901,000 |
| மிகு வரியும் பாக்கியும் .... | 62,530,000 |
| தேசப்பாதுகாப்புக்கெனவிடுபடு தொகை | 21,890,000 |
| ஏனைய உள்நாட் டரசிறை வருமானங்கள் | 1,550,000 |
| மொத்தம் .... | 520,281,000 |
| தபாற்பகுதி (செலவு நீக்கி) வருவாய் .... | 9,500,000 |
| முடிக்குரிய நிலம் (செலவு நீக்கி) .... | 1,330,000 |
| சில்லறைக் கடன்களிலிருந்து .... | 5,699,000 |
| தபாற்பகுதிச் சேமிப்பு நிதி .... | 1,400,000 |
| பல சில்லறை, பிரத்தியேக வருவாய்கள் | 12,941,000 |
| மொத்தச் சாதாரண அரசியல்வருமானம் | 927,285,000 |
| தபாற்பகுதியின் ஒன்றற்கொன்று சமமான வருவாயும் செலவும் .... | 78,950,000 |
| ஆக மொத்தம் .... | 1,006,235,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செலவு.

| செலவு | தொகை (தங்கப்பவண்) |
|---|---|
| **I. ஒதுக்கிவைத்த தொகைச் செலவுகள்** | |
| நாட்டுக் கடன்வகை .... | 216,781,000 |
| வட அயர்லாந்துக்கருவூலத்துக்கு .... | 9,459,000 |
| வேறு ஒதுக்கிய தொகை .... | 4,825,000 |
| மொத்தம் .... | 231,065,000 |
| **II. சாதாரண செலவுகள்** | |
| தரைப் படை .... | 85,661,000 |
| கடற்படை .... | 95,945,000 |
| ஆகாயப் படை .... | 72,800,000 |
| நாட்டுப் பாதுகாப்பு வகை .... | 17,783,000 |
| அரசாங்க வுத்தியோகத்தர் வேதனம் | 409,383,000 |
| சுங்கவரி, உள்நாட்டுச் சரக்குவரி, உள்நாட்டு வருவாய் முதலியன அறவிடுவோர் வகை .... | 14,143,000 |
| மொத்தச் சாதாரணச் செலவு .... | 926,780,000 |
| கடன்தீர்க்கு நிதி .... | 13,219,000 |
| தபாற்பகுதியின் ஒன்றற்கொன்று சமமான வருவாயும் செலவும் .... | 75,300,000 |
| ஆகாயவசனிச் செலவு .... | 3,650,000 |
| ஆக மொத்தம் .... | 1018,949,000 |



## அப்பியாச வினுக்கள்.

1. அரசியற் பணப்பொறுப்பு யாரைச் சேர்ந்தது?
2. செலவு ஆராய்வுச் சபையென்பது யாது?
3. அச்சபை செய்யும் வேலைகளேவை?
4. வருமானத் திட்டமென்பது யாது?
5. அரசிறை வருவாய் ஆராய்வுச் சபை யென்பது யாது? அது செய்யும் வேலைகளேவை?
6. வரவு செலவுப் பிரேரணைச் சட்டமென்பது யாது?
7. பணம் தேவைப்படும்போது பாராளுமன்றம் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்ளும்?
8. நேர்முகவரி, மறைமுகவரி என்பவற்றின் வித்தியாசமென்ன?
9. நாட்டுக்கட னென்பது யாது?
10. பிரதம கணக்குப் பரிசோதக ரென்பவர் யார்? அவரது கடமைகள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்.

இவ்வதிகாரத்தில் அரசாட்சியைக் குறித் தாராய்வாம். சட்டங்களை நிறைவேற்றுதலும் அரசியலுக்கு வேண்டிய பணத்தைச் செலவுசெய்ய உத்தரவு கொடுப்பதும் பாராளுமன்றஞ் செய்யும் முக்கிய கடமைகளென முன் பாடத்தி லறிந்தோம்.

பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைப் பிரஜைகள் அநுட்டிக்கச் செய்வதும் பொதுவாக அரசியலை நடாத்துவதுமாகிய கருமங்களைச் செய்யும் அங்கங்களைச் சேர்ந்தவர்களை ஆட்சியாள ரென்போம்.

இவ்வாட்சிக் குழுவினர்க்குச் சட்டப்படி தலைவராய் உள்ளவர் மன்னரே. மன்னரது பெயராலேயே ஆட்சி நடாத்தப்படும். மந்திரிமார் அரசனுடைய மந்திரிமார் எனப்படுவர். ஆட்சி உத்தியோகஸ்தர்கள் அரசனது ஊழியர்கள். இவர்கள் அரசனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் கடப்பாடுடையவர்கள். சட்டப்படியுள்ள சம்பந்த மிவ்வாறிருக்க, காரியாம்சத்தில் இவ்வுத்தியோகத்தர்களைத் தமது மந்திரிமார்களின் விருப்பத்திற்கிணங்கவே மன்னர் நியமிப்பார். இவ்வுத்தியோகத்தர்கள் தத்தம் மந்திரிமாருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் கடப்பாடுடையவராவர். அரசியல் சம்பந்தமான அநேக கருமங்கள் மன்னர் பெயராலேயே செய்



யப்படும்; "அரசு பிழையாது" என்னும் கருத்தையுடைய ஆங்கிலச் சட்டக் கூற்றைக் குறித்து முன்னறிந்தோம். இதன் கருத்தென்னை? அரசனது மன்றங்களாகிய நீதி மன்றங்களில் எவராவது அரசன்மீது வியாச்சியம் தொடர முடியாதென்பதும் அரசன் பெயராற் கருமமாற்றும் மந்திரிமார் முதலிய மற்றையவர்கள் எப்பிழையைச் செய்யினும், அது குறித்த மந்திரியாரைச் சாருமேயன்றி அரசனை ஒருபோதும் சாராதென்பதுமே யாகும்.

ஆங்கில அரசாட்சியின் முக்கிய அங்கங்களையும் அவற்றின் தலைவர்களையும் கவனிப்பாம்.

**கடற்படையாட்சி நிலையம்:**—கடற்படையாட்சி நிலையக் குழுவின் முதற் பிரபு. (The First Lord of the Admiralty)

**கருவூலம்:**—கருவூலத் தலைவர். (The Chancellor of the Exchequer)

**போர்க் காரியாலயம்:**—போர்மந்திரி.

**குடியேற்ற நாட்டுக் காரியாலயம்:**—குடியேற்றநாட்டு மந்திரி.

**சமவுரிமை நாட்டுக் காரியாலயம்:**—சமவுரிமைநாட்டு மந்திரி.

**பிறநாட்டுக் காரியாலயம்:**—அந்நியநாட்டு மந்திரி.

**இந்தியக் காரியாலயம்:**—இந்திய மந்திரி.

**பிறிவிக் கவுன்சில்:**—கவுன்சில் அக்கிராசனத் திருமகன். (The Lord president of the council.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக் கழகம்:—கல்விக் கழகத் தலைவர்.

உள்நாட்டுக் காரியாலயம்:—உள்நாட்டு மந்திரி.

விவசாயம், மீன்பண்ணைகளின் காரியாலயம்:—விவசாய மந்திரி.

கட்டடப் பரிபாலனக் காரியாலயம்:—கட்டடப் பரிபாலன முதல் ஆணையாளர்.

சுகாதாரப் பகுதி:—சுகாதார மந்திரி.

தபாற்பகுதிக் காரியாலயம்:—தபாற்பகுதித் தலைவர். (Post Master General)

வாணிப ஆட்சிக் கழகம்:—வாணிப ஆட்சிக் கழக அக்கிராசனர்.

ஆகாயப்படைப் பகுதி:—ஆகாயப்படை மந்திரி.

போக்கு வரவுப் பகுதி:—போக்கு வரவுப் பகுதிமந்திரி.

உபகார வேதனப் பகுதி:—உபகார வேதனப்பகுதி மந்திரி.

தொழிற் பகுதி:—தொழில் மந்திரி.

இவையொழிந்த இன்னுஞ் சில சிறு அரசாட்சிப் பகுதிகளுமுள. மேற்கூறிய அரசாட்சிப் பகுதிகளொவ்வொன்றையும் பொறுப்பேற்று நடாத்துவதற்குப் பாராளு மன்றத்திற்கு உத்தரவாதியாயுள்ள மந்திரிமார் ஒவ்வொருவருளர். அவ்வப்பகுதிகளின் தலைவர்களின் உத்தியோகப்பெயர்களே மேலேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவை.



கருவூல முதற் றிருமகன் (The first Lord of the Treasury) என்னும் மந்திரிப் பதவி இப்போதும் சட்டப்படி இருப்பதாகக் கவனிக்கப்படினும் அம்மந்திரிப் பதவியைப் பிரதம மந்திரியாரே வகிப்பாராகலின், அது பிரத்தியேகமான பதவியாகக் காரியாம்சத்திற் கவனிக்கப்படுவதில்லை. இவ்விதம் வேலையில்லாது வருமானம் மாத்திரமுள்ள வேறுஞ் சில மந்திரிப் பதவிகளும் ஆங்கில அரசாங்கத்திலுண்டு. அப்பதவிகள் (Sinecures) கருமசூனிய அதிகார மெனப்படும்.

முன் கூறிய அட்டவணையிலுள்ள மந்திரிப் பதவிகள் ஒழிந்த வேறு சில மந்திரிப் பதவிகள் பின்வருவன:—

பிரபுக்கள்மன்ற உயர் தலைவர்.

முத்திரைத் திருமகன்.

லன்காஸ்ரர் காணிப் பரிபாலனப் பகுதித் தலைவர்.

வேதனமளிக்கும் பகுதித் தலைவர் (Pay Master General)

கடற்படையாட்சி நிலையப் பொதுவதிகாரப் பிரபு—(Civil Lord of the Admiralty)

கருவூல அதிகாரப் பகுதியின் ஐந்து பிரபுக்கள் (Five Junior Lords of the Treasury)

வரவு செலவு ஆட்சி அமைச்சர் (Financial Secretary)

ஆதரவு அமைச்சர் (Patronage Secretary)

போர்க் காரியாலய வரவு செலவு அமைச்சர்.

தபாற்பகுதி உப தலைவர்.

18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலநாட்டு 'அற்ரேணி ஜெனறல்' (முடிக்குரிய பிரதம நியாயதுரந்தரர்) (Attorney General for England)

ஆங்கிலநாட்டு "சோலிசிற்றர் ஜெனறல்" (முடிக்குரிய நியாயவாதி) (Solicitor General for England)

ஸ்கோத்லாந்துநாட்டு நியாயதுரந்தரப் பிரபு (Lord Advocate for Scotland)

ஸ்கோத்லாந்துநாட்டு "சோலிசிற்றர் ஜெனறல்".

ஏனைய உதவி மந்திரிகள் பின்வருமாறு:—

A. உள்நாட்டு உதவி மந்திரி.
B. அந்நிய நாட்டு உதவி மந்திரி.
C. சமவுரிமை நாட்டு உதவி மந்திரி.
D. குடியேற்றநாட்டு உதவி மந்திரி.
E. போர்ப்பகுதி உதவி மந்திரி.
F. இந்தியநாட்டு உதவி மந்திரி.
G. ஆகாயப்படை உதவி மந்திரி.
H. ஸ்கொத்லாந்து நாட்டு உதவி மந்திரி.

பின் வருபவர்கள் பாராளு மன்ற அமைச்சர்களாவர்:—

A. கடற்படை ஆட்சிக்குழுவின் பாராளுமன்றஅமைச்சர்.
B. வாணிபக் குழுவின் " "
C. சுரங்கப் பகுதிகளின் " "
D. பிறநாட்டு வாணிபப் பகுதிகளின் " "
E. விவசாயப் பகுதிப் " "



F. தொழிற் பகுதிப் பாராளுமன்ற அமைச்சர்.
G. கல்விப் பகுதிப் " "
H. சுகாதாரப் பகுதிப் " "
I. போக்குவரவுப் " "

மேற்கூறிய மந்திரிப் பதவிகளையும் அரசாட்சிப் பகுதிகளையு மொழிந்த வேறு சில பதவிகள் இக்காலம் நிகழும் போர் காரணமாக நியமிக்கப் பட்டிருக்கின்றன. அவையாவன:—

i. ஆகாயவிமான உற்பத்திப் பரிபாலன மந்திரி.

ii. பொருளாதாரப் போர் மந்திரி.

போருக்கின்றியமையாதனவாய எப்பொருளும் சத்துருக்கள் கையிற் கிட்டாதபடி தடுக்கவேண்டிய உபகரணங்களைப் பரிபாலனஞ் செய்பவர்.

iii. நாவாய் மந்திரி.

ஆங்கில நாட்டிற்குப் போர்க்காலத்தில் வேண்டப்படும் பொருள்களைப் பிறநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்குத் தேவையான கப்பல்களைக் கட்டுவித்து அல்லது பிறரிடத்திருந்து பெற்று, அவ்வப்போது நாட்டிலுள்ளவைகளைத் தேவைக்குத் தக்கதாகப் பிரித்துக் கொடுத்து ஏற்றிறக்குமதிப் பொருள்களைப் பரிபாலனஞ் செய்பவர்.

iv. போர்ப்பகுதிச் சேகரிப்பு மந்திரி.

v. உணவுப் பொருள் மந்திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi. போர்ப் பிரசார மந்திரி.
vii. எண்ணெய் (Petrol) ப் பரிபாலன மந்திரி.

மேற்கூறிய அரசாங்கப் பகுதிகளுள் முக்கியமான சிலவற்றின் கடமைகள் யாவையென இனி ஆராய்வாம்.

## கருவூலம் (The Treasury)

தேசத்தின் வரவு செலவுக் கணக்குப் பொறுப்பையுடைமையால் இப்பகுதி ஏனைய அரசாங்கப் பகுதிகளினும் மிக முக்கியமானதெனலாம். வரிகள் முதலியவற்ருல் அரசியலுக்கு வரும் வருவாய்களை அறவிடுவதையும் அரசியலை நடாத்தற்குரிய செலவுகளைச் செய்யும் ஏனைய அரசாங்கப் பகுதிகளின் செலவுகளையும் மேற்பார்வை செய்வது இக் கருவூலப் பகுதியே. இப்பகுதிக்கு (The First Lord of the Treasury) கருவூல முதற்றிருமகன் என்னும் மந்திரிப் பதவியுடையவரே தலைவர் எனப்படினும், கர்ரியாம்சத்தில் அப்பகுதியின் கடமைகளின் பொறுப்பை யுடையவரும் நாட்டின் வரவு செலவுக் கருமங்களைப் பார்ப்பவரும் (Chancellor of the Exchequer) **கருவூலத் தலைவ**ரெனப்படும் மந்திரியாரே. முன் கூறியதுபோல் கருவூல முதற் றிருமகனுகிய மந்திரிப் பதவியைப் பிரதம மந்திரியே வகிப்பது வழக்கம். ஆங்கில அரசியற் சம்பிரதாயத்திற் கரும சூனிய அதிகாரமுள்ள (Sinecure) மந்திரிப் பதவிகளுள் ஒன்று இக்கருவூலமுதற்றிருமகன் பதவியாகும்.



கருவூலப்பகுதியின் முக்கியமான கடமைகள் இரண்டு. அவையாவன:

i. பிரஜைகளிடமிருந்து வருடந்தோறும் அறவிடப்படும் வரிப்பணத் தொகை, அவ்வவ் வருடத்தில் அரசியலை நடாத்தத் தேவையாகும் தொகையிலும் அதிகரிக்காதபடி செய்தல்.

ii. ஒவ்வொரு அரசாங்கப் பகுதியினதும் செலவிற்கெனப் பாராளுமன்றத்தால் வரையறுத்துக் கொடுத்த தொகைக்கு மேல் அவ்வப் பகுதி செலவழிக்காது தடுத்தல்.

அரசியல் வருவாய் மூன்று முக்கியமான வழிகளாற் பெறப்படும்.

A. வரிகள்.
B. அரசாங்கஞ் செய்யும் தொழில்களின்மூலம் பெறும் லாபம்; அதாவது தபால் தந்தி முதலியவைகளின் மூலம் பெறுவன.
C. அரசாங்கத்துக்குரிய காணிகளினது வருவாய்.

**உள்நாட்டு மந்திரியின் பகுதி.** (The Home Office)

பிரித்தானிய நாட்டின் உள்நாட் டரசியற் கருமங்களைச் செய்வதினுல் இப்பகுதியும் மிக முக்கியமானதே. பிரஜைகள் நீதி நியமப்படி (Peace and Order) வாழ்க்கை நடாத்தவும் நாட்டிற் கலகமின்றி இருக்கவும் செய்வது இப்பகுதியினர் கடமை. மறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்கூடங்கள், பித்தர் சிகிச்சா சாலைகள், கைத்தொழிற் பாடசாலைகள் முதலிய தாபனங்களை நடாத்துவதும், தொழிற்சாலைகள், கரிச் சுரங்கங்களாகிய இடங்களில் உயிருக் கபாயமான வேலைகளைச் செய்பவர்களைப் பாதுகாப்பதற்கான பிரமாணங்களை நிர்வகிப்பதும் இப்பகுதியினர் கடமையாகும்.

உள்நாட்டு மந்திரியே இப்பகுதித் தலைவராவர். பிரதம மந்திரி யொழிந்த ஏனைய மந்திரிகளுள் இவரே தலைமை யமைச்சராகக் கருதப்படுவர். அரசனுக்கு மிவருக்கு மிடையே நெருங்கிய தொடர்புண்டு. நீதிஸ்தலங்களிற் குற்றவாளியாகக் காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்படுபவரை மன்னிப்பது அல்லது அத்தண்டனையை விலக்கி மறியல் முதலிய வேறு தண்டனைகளை விதிப்பதான அரசனது சொந்த உரிமையை, அரசன் கையாளுவது இம்மந்திரியினது ஆலோசனைப்படியேயாகும். அரச சமுகத்திற்கென அனுப்பப்படும் மனுக்களை இவரே பெறுவர். அந்நிய நாடுகளிலிருந்து பிரித்தானிய நாட்டுக்கு வருபவரையும் அந்நியராயினும் பிரித்தானியப் பிரசாவுரிமை பெற விரும்புவோரையும் குறித்துள்ள சட்டங்களை யெல்லாம் நிர்வகிப்பதும் இம்மந்திரியாரே.

றெக்கோடேர்ஸ் (Recorders) எனப்படும் நீதிபதிகளையும், ஸ்ரிப்பென்டயறி (Stipendiary Magistrates) எனப்படும் நீதிபதிகளையும் குற்றங்



கடியும் நீதிமன்றங்களில் அரசாங்கச் சார்பாக வழக்குரைக்கும் நியாயவாதிகளையும் அவர்களின் உதவி உத்தியோகத்தர்களையும் நியமிப்பது உள்நாட்டு மந்திரியே.

குற்றங்கடியும் வழக்குக்களையும் பிரஜைகளினது ஆஸ்தி முதலிய உரிமைகளைப்பற்றிய வழக்குக்களையும் விசாரித்துத் தீர்க்கும் தத்துவம் உடையவர்களாய்ப் பெரிய நகரங்களில் அல்லது அரசனது அதிகாரம் பெற்ற (Barough) நகரங்களில் மூன்றுமாதங்களுக்கொருமுறை கூடும் (Quarter Sessions) நீதி ஸ்தலங்களில் நீதிபதியாய் இருப்பவர்களே (Recorders) றெக்கோடேர்ஸ் எனப்படுவர்.

பெரிய பட்டணங்களில் வேதனம்பெற்று பொலிஸ் நீதிபதிகளாய்க் கடமையாற்றுவோர் ஸ்ரிப்பென்டையரி நீதிபதி (Stipendiary Magistrate) எனப்படுவர்.

**பிறநாட்டு மந்திரியின் பகுதி** (Foriegn Office). இம்மந்திரியின் பகுதியும் ஒரு முக்கிய அங்கமாகும். பிரித்தானிய நாட்டிற்கும் பிற அரசியலின் பாற்பட்ட நாடுகளுக்கு மிடையேயுள்ள சம்பந்தங்களைப் பரிபாலனஞ் செய்தலும், பிறநாடுகளிற் சென்று வசிக்கும் பிரித்தானிய பிரஜைகளின் க்ஷேம லாபங்களைக் கவனிப்பதும் இப்பகுதியாரது கடமைகளாம்.

முற்காலத்திலே பிரித்தானிய நாட்டின் அரசர் பிறநாட்டுக் கருமங்களைத் தானே நேரிற் கவனித்து வந்தார். ஆனால் 200 வருடங்களின்முன், பிறநாடுகளுடன் சம்பந்தமான கருமங்களைப் பரி

---

Stipend = வேதனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலனஞ் செய்யு முரிமையைப் பாராளு மன்றம் பெற்றது. இப்போது போர் தொடுப்பதும் சமாதான உடன்படிக்கை முதலியன செய்வதும் மன்னரது பெயராலேயே நிகழ்வதாயினும் இச் செயல்களெல்லாம் பிறநாட்டு மந்திரியினதும் மந்திரி சபை (Cabinet) யினதும் ஆலோசனைப்படியே நிகழும். பிறநாட்டு மந்திரியே இப்பகுதியின் தலைவர்.

இப்பகுதியின் முக்கிய கடமைகளாவன:—

**A. அரசாங்க தூதர்கள் (Ambassadors), அரசாங்கப் பிரதிநிதிகள் (Consuls) ஆகிய தூதர்களைப் பிற நாடுகளில் நியமிப்பது.** அரசாங்க தூதர்கள் பிற நாடுகளிலே தம் நாட்டின் பிரதம பிரதிநிதிகளாகக் கடமை யாற்றுவர். அவர்கள் அவ்வந் நாட்டின் தலைநகர்களிலே வசிப்பர். பிரித்தானிய அரசினர்க்கும் பிறநாட்டு அரசினர்க்கு மிடையேயேற்படும் கடிதப் போக்குவரவு முதலியவெல்லாம் இத்தூதர்கள் மூலமாகவே நடைபெறும். அன்றியும், ஒவ்வொரு அரசாங்க தூதரும் தம் முத்தியோகப் பொறுப்புள்ள பிறநாட்டில் நிகழும் முக்கிய கருமங்களைத் தமது அரசினர்க்கு அறிவிக்கும் கடப்பாடுடையர்.

அரசாங்கப் பிரதிநிதிகளென்பவர் ஷை தூதர்களிலும் பார்க்கக் குறைந்தபடியிலுள்ள உத்தியோகத்த ராவர். இவர்கள் அரசனது பிரதிநிதிகளாகார். அரசாங்க தூதரே முக்கியமாக அரசப்



பிரதிநிதிகளாவர். கொன்சல்ஸ் (Consuls) எனப் படும் அரசாங்கப் பிரதிநிதிகள் தம் நாட்டிற்கும் தாமுத்தியோகஞ் செய்யும் பிறநாட்டிற்கு மிடையேயுள்ள வர்த்தக அபிவிருத்தியைக் கவனிப்பதும் அங்கு வசிக்கும் பிரித்தானியப் பிரஜைகளின் நலவுரிமைகளைக் கவனிப்பதுமே கடமையாகும்.

**B. பிறநாடுகளிற் பிரயாணஞ் செய்யும் பிரித்தானிய பிரஜைகளுக்குப் (Passport) பிரயாண அனுமதிச் சீட்டுக் கொடுப்பது.**

பிறநாட்டு மந்திரிக்கு உதவியாளர்களாய்க் கருமமாற்றும் நிரந்தர உத்தியோகத்தர் சிலருளர். இவர்களுள் நிரந்தர உப பிறநாட்டு மந்திரி என்பவரொருவரும் மூன்று உதவி உபபிறநாட்டு மந்திரிமாரும் முக்கியமானவர்கள். முன் அத்தியாயங்களிற் கூறியபடி அரசாங்க மந்திரிகளில் மாற்றங்களேற்படின் இப்பிறநாட்டு மந்திரிப் பதவியிலும் மாற்றமேற்படும். ஆனால் மற்றொரு பிறநாட்டுமந்திரி, பதவி யேற்கும்வரையும் அப்பகுதியினரின் இலக்குக்கள் முன்பின் முரணுறாது ஒரேவகையாய் இலக்கில் (Policy) நிலைப்பாடுடையதாயிருக்கும்படி செய்வது நிரந்தர உத்தியோகத்தரின் கடமையே. நிரந்தர உப பிறநாட்டுமந்திரி என்பவர் மிக முக்கியமான உத்தியோகத்தர். அந்நிய நாடுகளுக்கும் தமது நாட்டிற்கு மிடையேயுள்ள சம்பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிநேகமாய் அல்லது சிநேகபேதமாயிருக்க வேண்டுமெனத் தீர்மானிப்பதும் பிறநாட்டு மந்திரியே.

**போர்ப்பகுதி (War Office).** நாட்டின் போர்ப்படைகளின் பொறுப்பையுடைய அரசாங்கப்பகுதி அடுத்த படியானது. போர் மந்திரியே இப்பகுதியின் தலைவர். **கடற்படைப் பகுதி** அல்லது கடற்படைக் குழுவே கடற்படையின் பொறுப்பையுடையது. கடற்படையாட்சிப் பகுதியின் முதற்பிரபு என்னும் மந்திரியே இதன் தலைவர். 1914-ம் ஆண்டு ஐரோப்பிய மகா யுத்தத்தின்பின் **ஆகாயப்படை மந்திரி** என ஒரு பதவியுமுண்டாக்கப்பட்டது.

**இந்திய மந்திரியின் பகுதி (India Office).** இந்திய நாட்டு மந்திரியைத் தலைவராகக் கொண்ட பகுதி இந்தியாவின் அரசியற் பொறுப்பையுடையது. இந்திய அரசியலை மேற்பார்வை செய்ய இவருக்குதவியாளராக விருக்கும் பொருட்டு **இந்திய அரசியலாலோசனைச் சபை** யென்ப தொன்றுண்டு. இச்சபை இந்தியாவில் அரசியலநுபவமும் ஜனங்களிடையே செல்வாக்குமுள்ளவர்களென அரசினராற் கருதப்படும் சில இந்தியப் பிரமுகர்களையும், இந்தியாவில் நீண்ட காலம் வசித்து அவ்வரசியலில் முக்கிய பதவிகளையுடையரா யநுபவம் பெற்ற வேறு சிலரையுங் கொண்டது.

**சமவுரிமை நாட்டுப் பகுதி (Dominions Office).** இப்பகுதி பிரித்தானிய நாட்டிற்கும் கனடா



ஒள்ஸ்திரேலியா முதலிய சமவுரிமை நாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளைக் கவனிக்கும். இதன் தலைவர் சமவுரிமை நாட்டு மந்திரி. முன்னத்தியாயங்களிற் கூறியபடி சமவுரிமை நாடுகள் தமது அரசியற் பொறுப்பு முழுவதையும் பெற்றுள்ளன. பிரித்தானிய சக்கிராதிபத்தியத்திற் பிரித்தானியாவுக் கெவ்வளவுரிமை யுண்டோ அவ்வளவுரிமை இச்சமவுரிமை நாடுகளுக்குமுளதாகக் கவனிக்கப்படுகிறது. பிரித்தானிய பாராளு மன்றத்திற் சமவுரிமை நாடுகளைப் பற்றிய கருமங்களை அதிகாரபூர்வமா யெடுத்துரைக்குமுரிமையுடையவர் இப்பகுதியின் மந்திரியே. பிரித்தானிய நாட்டு மந்திரிமார் தமதரசியற் கருமங்கள் யாவற்றையும் மன்னர் பெயரால் எவ்விதம் செய்கிறார்களோ, அவ்விதமே ஒவ்வொரு சமவுரிமை நாட்டிலுள்ள மந்திரிமாரும் **ஆறும் ஜோர்ஜ்** மன்னரைத் தமது சொந்த மன்னராகக் கருதி, அவர் பெயராலே தமதரசியற் கருமங்களைச் செய்வர். ஆனால் மன்னர்பிரான் பிரித்தானிய நாட்டிலேயே நிரந்தரமாய் வசித்தலினால், அவருக்கும் சமவுரிமை நாடுகளினரசாங்கங்களுக்குமிடையே ஏற்படக்கூடிய வரசியற் கருமங்களை நடாத்துவது இம்மந்திரியே.

**குடியேற்ற நாட்டு மந்திரியின் பகுதி (Colonial Office).** குடியேற்றநாட்டு மந்திரியே இதன் தலைவர். சமவுரிமை நாடுகளையும் இந்தியாவையுமொழிந்த ஏனைய பிரித்தானிய சக்கராதிபத்தியத்

தின் பாற்பட்ட நாடுகளி னரசியற் பொறுப்பு இப்பகுதியைச் சேர்ந்ததே. குடியேற்ற நாடுகள் யாவும் இப்பகுதியினரால் மேற்பார்வை செய்யப் படும். குடியேற்ற நாடுகளின் தேசாதிபதிகள் குடியேற்ற நாட்டு மந்திரியின் ஆலோசனைப்படி அரசனாலேயே நியமிக்கப்படுவர். ஏனைய முக்கியமான உத்தியோகத்தர்களை இம்மந்திரியே நியமிப்பார். குடியேற்ற நாடுகளுக்கும் பிரித்தானிய நாடுகளுக்கு மிடையேயுள்ள தொடர்புகளெல்லா மவ்வந் நாடுகளின் தேசாதிபதிகளின் மூலமாகவே நடைபெறும். குடியேற்ற நாடுக ளொவ்வொன் றினதும் அரசிற் கருமங்களைக் குறித்த இலக்குக்கள் இன்னவை யெனத் தீர்மானிக்கு முரிமை இம்மந்திரி யாருடையதே. குடியேற்ற நாடுகளின் சட்டசபைகளில் நிறைவேறும் சட்டங்களுள் முக்கியமானவை இம்மந்திரியின் அங்கீகாரம் பெற்றே அநுசரணையில் வரக்கூடியதாக ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது.

குடியேற்ற நாட்டு மந்திரிக்குப் பாராளுமன்ற உதவி மந்திரியென ஒரு உதவியாளரும் வேறு நிரந்தரமான உதவி மந்திரிகள் சிலரும் உண்டு. உதவி மந்திரிமார் அக்காரியாலயத்தில் நிரந்தரமாயிருந்து கடமையாற்றும் முக்கியமான உத்தியோகத்தர்களே. குடியேற்ற நாடுகளில் முக்கியமானவை யொவ்வொன்றும் ஒவ்வொரு நிரந்தர வுதவி மந்திரியின் பொறுப்பிலும், ஏனையவை



தொகுதிகளாக வேறு நிரந்தர உதவி மந்திரிகளின் பொறுப்பிலும் விடப்படும். இலங்கை யரசியலின் மேற்பார்வையும் ஒரு நிரந்தர வுதவி மந்திரியின்பாற் பட்டது. இக்காரணம்பற்றிக் குடியேற்ற நாடுகளி னரசியற் பரிபாலனம் இலக்கில் நிலைப்பாடுடையதும் அநுபவசாத்திய மானதுமாய்க் காணப்படும். குடியேற்ற நாடுகளின் தேசாதிபதிக ளொவ்வொருவரும் குடியேற்றநாட்டு மந்திரிக்கு உத்தரவாத முடையவ ராவர்.

**சுகாதார மந்திரியின் பகுதி (Minister of Health).** தேசமக்களினது உடல்நலமாகிய வற்றைக் கவனிக்கும் பொறுப்பை யுடையது.

**கல்விக் கழகம்.** நாட்டின் ஆரம்பக்கல்வியின் பரிபாலனத்தையுடையது.

வர்த்தகக் கப்பற் போக்குவரவு, வணிக முத்திரை (Trade Mark), தனியுரிமைப்பத்திரங்கள் (Patents), கூட்டுப்பங்கு வணிகச்சமுதாயங்கள் (Joint stock Companies) முதலியவற்றின் கருமங்களைச் செய்வது **வாணிபக் குழுவின்** கடமையாகும்.

**கட்டடப்பரிபாலனப்பகுதி.** அரசாங்கக் கட்டடங்களை அமைப்பதும், அவை பழுதுருது பாதுகாத்தலும், மன்னரது மாளிகைகளையும் தோட்டங்களையும் பாதுகாத்தலும் இப்பகுதியினரின் கடமைகளாகும்.

தொழிலாளர்களை ஒருங்குசேர்த்து அவரவர்க்கேற்ற இடங்களுக்கனுப்பும் நிலையங்களை ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதும் தொழிலின்மையை அகற்றுவதற்கு வழிகளைத் தேடுவதுமாகிய பொறுப்பை யுடையது **தொழில்மந்திரியின்** பகுதியாகும்.

விவசாயம், மீன்பண்ணை, தபாற்பகுதி என்பன ஏனைய அரசியற்பகுதிகளாம்.

பிரித்தானிய நாட்டிலுள்ள அநேக அரசியற் பகுதிகளுள் முக்கியமானவைகளே மேலே கூறப் பட்டன. அப்பகுதிக ளொவ்வொன்றிலும் நிரந் தரமான உயர்தர உத்தியோகத்தரிருப்பர். அவர் களது அநுபவமும் ஆற்றலும் அவ்வப்பகுதியின் மந்திரியாயுள்ள தலைவர்களுக்குப் பேருதவியா யிருக்கும். இந்த நிரந்தர உத்தியோகத்தர் சிவில் சேர்விஸ் எனப்படும் உயர்தர அரசாங்க உத்தியோக வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

மந்திரிமார் போலன்றி, இந்நிரந்தர உத்தி யோகத்தர்கள் அரசியற் கட்சிகளைச் சார்ந்தவர் களுமல்லர்; அரசியல் விவாதங்களிற் பங்குபற்று வருமல்லர்; இவர்கள் அரசாங்க ஊழியர்களே. தம துத்தியோகத்திலிருக்கும் வரையும் இவர்கள் பாராளுமன்றத்தில் அங்கத்தவராதல் இயலாது. தமது காரியாலயத் தலைவராயுள்ள மந்திரியார் அரசியற் கட்சிகளுள் எதனைச் சேர்ந்தவராயினும் நிரந்தர உத்தியோகத்தருக்கு அதனால் எவ்வித மாறுபாடு மேற்படுவதில்லை. நிரந்தர உத்தியோ கத்தர்கள் இளைப்பாறுங்காலம் வரும்வரையில் அரசாங்க ஊழியர்களாகக் கடமையாற்றுவர்.



கல்வி, புத்தி, அநுபவங்களால் மேம்பட்ட இவர் களின் ஆலோசனை மந்திரிமாருக் குதவியாய் இருக்கும். இவர்கள் ஒரு சாமர்த்திய நிச்சயப் பரீட்சைமூலம் தெரிந்தெடுக்கப்படுவர். இளம் வயதினராகவே உத்தியோகத்திற் சேர்ந்து 55 அல்லது 60 வயது வரையும் கடமையாற்றுவர்.

சிவில் சேர்விஸ், தனித்தனி மந்திரிமார்கள், மந்திரிசபை, மன்னர் ஆகியநான்கு அங்கங்களையும் கொண்டதே அரசாங்க மெனப்படும்.

சாதாரண தபாற் சேவகன் தொடக்கம் மந்திரிமார்கள் வரையுமுள்ள உத்தியோகத்த ரொவ்வொருவரும் அரசனின் சேவையில் உள்ள வர்களே.

## அப்பியாச வினுக்கள்.

1. அரசாங்கத்தின் முதல்வர் யாவர்?
2. ஒரு அரசாங்கப்பகுதி என்ருல் என்ன?
3. அரசாங்க உயர்தர ஊழியன் யார்?
4. கருவூலம் என்பது யாது?
5. உள்நாட்டு அரசாங்கப்பகுதியாவது யாது?
6. பிறநாட்டரசியற் பகுதியாவது யாது?
7. குடியேற்றநாட் டரசாங்கப் பகுதியாவது யாது?
8. ஒவ்வோரு அரசாங்கப் பகுதியினதும் செய்கைகளுக்குப் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புடையவர் யாவர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13-ம் அதிகாரம்

# நீதி பரிபாலனம்.

அரசாங்கத்தினது முக்கருமங்களுட் சட்டமியற்றல், ஆட்சி செய்தல் ஆகிய முதலிரு கருமங்களை முந்திய இரு அத்தியாயங்களிற் கற்றேரும். இவ்வத்தியாயத்தில் மூன்ருவது கிருத்தியமாய நீதி பரிபாலனத்தைக் குறித்தாராய்வோம்.

பிரஜைகள் தமது சுதந்திரத்தைக் காப்பாற்றுவதையே வேறெவ்வுரிமையிலும் மேம்பட்டதாகக் கருதுவர். பிரித்தானிய நாட்டிற் கையாளப்படும் நீதிவழங்கு முறை பிரஜைகளின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதையே அடிப்படையாகக் கொண்டதென உலகத்திற் புகழ்பெற்றது. சட்டத்திற்கு முரணுய் நடப்பவரின் துர்க்கிருத்தியங்களாற் பிரஜைகளும் அவர்களின் ஆஸ்திகளும் கஷ்ட நஷ்டங்களுருது காப்பாற்றுவதே நீதிபரிபாலனத்தின் இலக்காகும். மக்கள் கூடிவாழத் தொடங்கிய காலம் முதல், ஜாதிப் பஞ்சாயத்தாரிட்ட ஆணைகளை மீறி நடப்பவர்களை அல்லது அரசாங்கத்தார் வகுத்த சட்டங்களுக்கு முரணுக நடப்பவர்களைத் தண்டிக்கும் வழக்கமிருந்து வருகின்றது. பண்டைக் காலத்தில் ஒவ்வொரு சாதிக் கூட்டத்தினர்க்கிடையே ஏற்படும் பிணக்குக்களை அச்சாதித் தலைவராய் உள்ள முதியவர் விசாரணை செய்து, தண்டிக்கவேண்டியவரை



முறைப்படி தண்டித்தார். காலகதியில் ஜாதிக் கூட்டத்தினரொருங்கு சேர்ந்து ஒரு அரசனது ஆஞ்ஞைக்குக் கீழ்ப்பட்டு வாழத் தொடங்கிய போது பிரஜைகளுக்கிடையே ஏற்படும் பிணக்குக்களை விசாரிப்பதும் நீதி வழங்குவதுமாகிய செயல்களை அரசனே செய்துவந்தான். அக்காலத்தில் அரசனே சட்டம் விதிப்போனும் பரிபாலனஞ் செய்வோனுமாயிருந்தான். எனினும் இக்காலத்தில் அரசன் சட்டம் விதிப்பதுமில்லை; தானே நீதி வழங்குவதுமில்லை. பிரித்தானியநாட்டிற் சட்டம் விதிப்பது பாராளு மன்றமென்றும், அவைகளெல்லாம் அரசன் பெயராலேயே விதிக்கப்பட்டனவெனக் கூறப்படுமென்றும் முன்னதிகாரமொன்றிற் கற்றேரும். அவ்வாறு அரசன் பெயரால் விதிக்கப்பட்ட சட்டங்களைப் பரிபாலனஞ் செய்யத் தனித்தனி நீதிபதிகள் அரசனலே நியமிக்கப்படுவார்கள். இந்த நீதிபதிகளை அரசன் நீதித் தலைவராயுள்ள பிரபுக்கள் மன்றத் தலைவரின் ஆலோசனைப்படியே நியமிப்பார். மேற்கூறியவாறு அரசன் தானே செய்த நீதிபரிபாலனத் தொழிலைப் பிறரிடங் கொடுத்தபோது அரசனே நீதியின் தனிப்பேரூற்று எனக் கருதப்படுவது ஆங்கில அரசியற் சம்பிரதாயம்.

பிரபுக்கள் மன்றத் தலைவராய நீதித் தலைவர் அவ்வப்போது அரசியலை நடாத்தும் அதிகாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடைய கட்சியைச் சேர்ந்தவராகையால் அக்கட்சியினர் அரசியல் அதிகாரம் விட்டு நீங்க வேண்டி வரும்போது தாமும் தமது பதவியினின்றும் நீங்குவர். எனினும் நீதித்தலைவரின் ஆலோசனைப்படி நியமனஞ் செய்யப்பெற்ற நீதிபதிகள் அரசியற்கட்சிப் பற்றற்றவராயிருப்பர்; நீதிபதியாக ஒருமுறை நியமனஞ் செய்யப் பட்டாற் சீவிய பரியந்தம் அப்பதவிகளி லிருப்பர். இவர்களை எக்காரணம் பற்றியாயினும் பதவியினின்றும் நீக்க வேண்டுமாயின் பாராளு மன்றத்தின் இரு சபைகளு மொருங்கு சேர்ந்து மன்னர்பிரானுக்கு ஒரு பிரத்தியேக விண்ணப்பம் சமர்ப்பித்தே நீங்கச் செய்யலாம். நீதிபதிகளும் நீதிஸ்தலங்களும் சுதந்திரமுடையவை. சட்டங்களை யியற்றும் பாராளு மன்றமாவது அரசியலை நடாத்தும் ஆட்சியாளராவது நீதிபரிபாலனத்தை எவ்விதமேனும் மேற்பார்வை செய்ய அல்லது கட்டுப்படுத்த இயலாது.

பிரித்தானிய நாட்டின் நீதிமுறை நேர்மை நிறைந்ததென உலகப் பிரசித்தி பெற்றது. அது ஆறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. அவையாவன:—

1. குற்றஞ் சாட்டப்படுபவர் குற்றஞ் செய்தாரென அத்தாட்சிப்படுத்தப்படும் வரையும் குற்றஞ் செய்யாதவரெனக் கருதுதல்.
2. மக்கள் யாவரும் ஒருவருக் கொருவர் சமத்துவமுடையவரெனக் கருதல்.



3. சட்ட மறியாமை அதை மீறுவதற்கு ஒரு சமாதான மாகாது.
4. நீதி விசாரணைகள் யாவும் பகிரங்கமாக நடாத்தப்படல் வேண்டும். குற்றஞ் சாட்டப்படுவோன் குற்றஞ் சாட்டியவனை நேர்முகமாய்ச் சந்திக்கக் கூடியதாக விசாரணை நடத்துதல்.
5. தனக்கு ஏற்பட்ட குறை குற்றங்களை நிவர்த்திக்க வேண்டுமென நீதிஸ்தலத்திற் போய் விண்ணப்பிக்க ஒவ்வொருவருக்கு முரிமையுண்டு. ஒருவர்க்கேனும் நீதி விலக்காகாது.
6. எவரேனும் ஒரே குற்றம்பற்றிய வழக்கில் ஒரு முறைக்குமேல் விசாரணை செய்யப்படக் கூடாது.

பிரித்தானிய நீதிமுறை முத்திறப்பட்ட சட்டங்களைக் கொண்டது. அவையாவன:—

A. தேச வழக்கச் சட்டம் (Common or Customary Law). இச்சட்டங்கள் எக்காலத்தினும் எவராலும் இயற்றப்பட்டவையு மன்று; சட்டப் புத்தகத்திற் பதிவுசெய்யப்பட்டவையு மன்று; பண்டுதொட்டு நாட்டிற் கைக்கொள்ளப்பட்டு வந்த பழக்க வழக்கங்களை அநுசரித்தவை. இப்பழக்க வழக்கங்கள் நெடுங்காலமாக அநுசரணையிலிருந்து வந்தமையாற் சட்டதத்துவம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B. பாராளுமன்றம் விதித்த சட்டங்கள்.**

**C. தர்ம நீதி (Equity).** முன் கூறிய தேசவழக்கச் சட்டங்களையும் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட சட்டங்களையும் உபயோகித்து ஒரு வழக்கைத் தீர்க்க முயலுங்கால், அவ்வழக்கிற்கேற்ற சட்டங்களை மாத்திரமே கடைப்பிடித்து நீதி செலுத்த வியலாதெனக் காணும் நீதிபதி யொருவர், தனக்குமுன் நீதிபதிகளாயிருந்தோர் செய்த தீர்ப்புக்களை அல்லது நீதிக்கடிப்படையான தர்மக் கொள்கைகளென அங்கீகரிக்கப்படுங் கொள்கைகளைச் சட்டங்களுக் குதவியாகக்கொண்டு வழக்கைத் தீர்த்தால், அது தர்ம நீதியைக் கடைப்பிடித்த தீர்ப்பெனப்படும்.

நாட்டில் மக்கள் சமாதானமாய் வாழ்வதற்கு இன்றியமையாத சாதனமாயுள்ளவை தேசியச் சட்டங்களாம். அச்சட்டங்கள் இருவகையின என்பது நினைவுகூரத் தக்கது. ஒருவருடைய மனமோ சரீரமோ புண்படக் கூடியதாகப் பிறிதொருவர் துஷ்க்கிருத்தியத்தைச் செய்யின், அதனாற் புண்பட்டவர் புண்படுத்தியவர்மீது நீதிமன்றத்தில் வியாச்சியம் தொடர்தலும் அம்மன்றத்தில் அவ்வழக்குத் தீர்க்கப்படுதலும் ஆகியவை குற்றங் கடியும் சட்ட(Criminal Law)ப்படியே நடைபெறும். அன்றி, ஒருவரது பொருளை அல்லது ஆஸ்தியை இன்னொருவர் அபகரித்தால் அதனைத் தடுத்து நட்டமடைந்தோனை நட்டத்திலிருந்து நிவிர்த்தி



பெறச் செய்வதற்குரிய சட்டம் (Civil Law) பொருட் சட்டமெனப்படும். இப்பொருள் சம்பந்தமான சட்டம் நட்டமடைந்தோனுக்குப் பரிகாரத்தை ஈட்டும் தன்மையதாதலின் பரிகாரச் சட்டம் (Remedial Law) எனவும் படும். உதாரணம்:— களவு செய்தானொருவனைத் தண்டிப்பது குற்றங் கடியுஞ் சட்டப்படியே. கடன் பெற்றவனொருவன் அக்கடனைத் திருப்பிக் கொடுக்கத் தவறின், திருப்பிக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தற்குச் சாதனமாயுள்ளது பொருட் சட்டமே. முன் கூறியதுபோல் துஷ்க்கிருத்தியஞ் செய்த வொருவன்மீது வியாச்சியந் தொடருங்கால், அவனது துஷ்க்கிருத்தியத்தாற் பாதிக்கப்படுவது அவனாற் றாக்குற்றவ னன்று, இராச்சியமே என்பது பிரித்தானிய நீதி பரிபாலனத்தின் சம்பிரதாயமாகும். பொருட் சட்டமோவெனின், அவ்வாறு கருதாது ஒருவனடைந்த நட்டத்தைத் தடுத்து உரிய பொருளை அவன் பெறக் கூடியதாய்ச் செய்யுந் தன்மையது. இதனாலேயே அச்சட்டம் பரிகாரச் சட்டமெனக் கூறப்பட்டது.

பிரித்தானிய நாட்டிலுள்ள நீதிமன்றங்கள், நீதி ஸ்தலங்களுக்கெல்லாம் தலையாயுள்ள பிரபுக்கள்மன்றம் தொடக்கம் பெற்றி செஷன்ஸ் (Petty Sessions) எனப்படும் சிறு தீர்ப்பு நீதிஸ்தலங்கள்வரை பகுக்கப்பட்டுள்ள அட்டவணை ஒன்றோடொன்றுள்ள சம்பந்தத்தையும் தெரிவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபுக்கள் மன்றம்.
(House of Lords)

அதியுயர் நீதிமன்றம்
(Supreme Court of Judicature)

- உயர்நீதிமன்றம். (High Court)
  - கிங்ஸ் வெஞ்ச். (King's Bench)
  - சான்செறி நீதிமன்றம். (Chancery)
  - உரிமைத்தத்துவ நீதிமன்றம். (Probate)
    - விவாகநீக்க நீதிமன்றம். (Divorce)
      - கப்பல்சம்பந்தமான வழக்குத் தீர்க்கும் நீதிமன்றம். (Admiralty)
  - பருவ நீதிமன்றம். (Assizes)
    - மூத்திங்கள் நீதிமன்றம். (Quarter Sessions)
      - சிறுதீர்ப்பு நீதிமன்றம். (Petty Sessions)
- புனர்விசாரணையுயர்நீதிமன்றம். (Court of Appeal)

உயர் நீதிமன்றம் (The High Court of Justice) இருவேறு பிரிவுகளை யுடையது. ஒரு பிரிவு புனர் விசாரணை உயர் நீதிமன்ற மெனப்படும். மாகாண நீதிமன்றங்களில் விசாரித்துத் தீர்க்கப் பட்ட தீர்ப்புக்களிற் றிருப்தியடையாத வழக்காளி கள் வேறு தீர்ப்பு வேண்டித் தம் வழக்குக்களைப் பற்றி இம்மன்றத்திற்கு மனுச் செய்யலாம். மற்றைய பிரிவு உயர்தரஆஸ்தி சம்பந்தமான வழக் குக்களை விசாரணை செய்யும். இவ்வுயர் நீதிமன்றம்



ஆங்கிலநாட்டுப் பரிஸ்டர்.
தலையங்கியையும் மேலங்கியையும் கவனிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திறத்ததாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையா வன:—(1) கிங்ஸ் வெஞ்ச் (King's Bench) நீதிமன்றம். (2) சான்செறி (Chancery) நீதி மன்றம். (3) உரிமைத் தத்துவம், விவாக நீக்கம், கப்பல்கள் சம்பந்தமான வழக்குக்களைத் தீர்க்கும் நீதிமன்ற மென்பன.

**கிங்ஸ் வெஞ்ச்** (The King's Bench Division) **நீதிமன்றம்.** இம்மன்ற நீதிபதிகள் ஊர்கள்தோறுஞ் சென்று பருவநீதி மன்ற (Assizes) விசாரணையை நடாத்துவர். பருவநீதிமன்ற விசாரணையிற் குற்றங் கடியும் வழக்குக்களையும் பொருள்சம்பந்தமான வழக்குக்களையும் விசாரிப்பர்.

**சான்செறி நீதிமன்றம்** (The Chancery Division). நம்பிக்கையாக வகிக்கப்பட்ட ஆஸ்தி சம்பந்தமான வழக்குக்களையும பிராயமாகாத சிறுவரின் மேற்பார்வை சம்பந்தமான வழக்குக்களையும் விசாரித்துத் தீர்க்கும்.

**உரிமைத் தத்துவம், விவாக நீக்கம், கப்பல் சம்பந்தமான வழக்குக்கள் தீர்க்கும் நீதிமன்றம்.** இஃது மரணசாதனம், விவாக சம்பந்தமான வழக்குக்கள், கடலிற் கப்பலோடு கப்பல் காத்திராப் பிரகாரம் மோதுதல், அமிழ்ந்திய கப்பலை மிதத்துதல் முதலிய கப்பல் சம்பந்தமான வழக்குக்களை விசாரித்துத் தீர்க்கும்.

மேற்கூறிய நீதிமன்றங்களே பொருள்சம்பந்தமான வழக்குக்களைத் தீர்க்கு முயர்நீதிமன்றங்கள்.



மாகாண நீதி மன்றங்களிலிருந்து புனர் விசாரணைக்காக வந்த வழக்குக்களையும் ஏனைய உயர்தர பொருள்சம்பந்தமானவழக்குக்களையும் உயர் நீதி மன்றம் விசாரித்துத் தீர்க்கும். உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் 25 பேர் வரையிலுளர். இவர்களொவ்வொருவரும் வருஷம் 5000 தங்கப் பவுண் வேதனமாகப் பெறுவர். இங்கிலாந்தின் பிரதம நீதிபதியே உயர் நீதிமன்ற நீதிபதிகளெல்லாருக்கும் தலைவராவர்.

உயர்நீதிமன்றத்திற் றீர்க்கப்பட்ட வழக்குக்கள் வேண்டப்படின், பிரபுக்கள் மன்றத்துக்குப் புனர் விசாரணைக் கனுப்பப்படலாம். பிரபுக்கள் மன்றமே ஆங்கில நாட்டிலுள்ள நீதிமன்றங்களுளெல்லாம் தலையாயது.

**பிரபுக்கள் மன்றம்.**
(The House of Lords)
|
**உயர் நீதி மன்றங்கள்.**
(The High Courts of Justice)
|
**மாகாண நீதி மன்றம்.**
(County Courts)

பொருள் சம்பந்தமான சிறு வழக்குக்கள் மாகாண நீதிமன்றங்களில் (County Courts) விசாரித்துத் தீர்க்கப்படும். இம் மன்றங்களின் நீதிபதிகளைப் பிரபுக்கள் மன்றத் தலைவரே நியமிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங் கடியும் நீதிமன்றங்களைக் (Criminal Courts) குறித்துச் சிறிதாராய்வாம். ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு பொலிஸ் நீதிமன்ற முண்டு. அங்கு ஒரு சமாதான நீதிபதி அல்லது வேதனம் பெறும் நீதிபதி நீதி வழங்குவர். சமாதான நீதிபதி வேதனம் பெறார். பெரிய பட்டணங்களில் பொலிஸ்நீதிமன்றங்களின் நீதிபதியாயிருப்பவர்கள் பெரும்பாலும் வேதனம் பெறுபவர்களே. வேதனம்பெறும் நீதிபதிகளில்லாத விடங்களில் இரு சமாதான நீதிபதிகள் சேர்ந்து விசாரணையைச் செய்யலாம். அவர்களுட் கூடிய காலம் கடமையாற்றியவர் அக்கிராசனராயிருப்பர். இச்சமாதான நீதிபதிகள் நடாத்தும் நீதிமன்றங்களிற் சிறு குற்றங் கடியும் வழக்குக்களே விசாரிக்கப் படும். இவை சிறுதீர்ப்பு (Petty Sessions) நீதிமன்றங்களெனப்படும்.

உயர்தர குற்றங்கடியும் வழக்குக்கள் வேறொரு நீதி மன்றத்தில் விசாரிக்கப்படும். அவை மூன்று மாதங்களுக் கொருமுறை கூடுமாகையால் **முத்திங்கள் நீதிமன்றம்** (Quarter Sessions) எனப்படும். இந்நீதிமன்றத்திலும் முக்கியமான பட்டணங்கள் தோறும் 'றெக்கோடர்' எனப்படும் வேதனம் பெறும் நீதிபதியே அக்கிராசனரா யிருப்பர். ஏனைய பட்டணங்களிற் சமாதான நீதிபதிகள் அக்கிராசனராயிருப்பர். றெக்கோடேர்ஸ் எனப்



படுபவர் பிரபுக்கள் மன்றத் தலைவரின் ஆலோசனைப்படி மன்னர்பிரானாலேயே நியமிக்கப்படுவர்.

**பருவநீதி மன்றமும், குற்றங் கடியும் புனர் விசாரணை உயர்நீதி மன்றமும்** (The Court of Criminal Appeal) குற்றங்கடியும் நீதிமன்றங்களிற் றலையாயவை. பொலிஸ் நீதிமன்றத்தில் விராரணைக்கு வந்த குற்றச்சாட்டு, சிறு தீர்ப்பு நீதிமன்றத்தாலாவது முத்திங்கள் நீதிமன்றத்தாலாவது விசாரித்துத் தீர்க்க முடியாத முக்கியம் வாய்ந்ததெனின், அது பருவநீதி மன்றத்தில் விசாரணைசெய்யவிடப் படும்.

சிறுதீர்ப்பு நீதிமன்றமும் முத்திங்கள் நீதிமன்றமும் ஆரம்ப விசாரணை நீதிமன்றங்களெனப் படும். குற்றஞ்செய்வோர் முதன்முதல் இவைகளிலேயே விசாரிக்கப்படுவா ராகலின். இவற்றில் வழக்குக்கள் காலதாமதமின்றி விசாரிக்கப்பட்டுத் தீர்க்கப்படுதலினால் இவைகள் **உடன் தீர்ப்பதிகார** (Court of Summary Jurisdiction) **நீதிமன்றங்க**ளெனவும்படும்.

பருவநீதி மன்றம் லண்டனிலும் ஏனைய பெரிய பட்டணங்களிலும் உயர்நீதி மன்ற நீதிபதிகளின் தலைமையில் நடைபெறும். இவைகளிற் கொலை முதலிய உயர்தர குற்றங்கடியும் வழக்குக்கள் விசாரிக்கப்படும். பருவநீதி மன்றம் கூடும்போதெல்லாம் சில ஆடம்பர சம்பிரதாயங்கள் கவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிக்கப்படும். அவைகளினுல் அங்குச் சமுகமாயுள்ளோர் மனத்திற் சட்டத்தின் உயர்வு பெரிதாக மதிக்கப்படுகின்றது. நீதிபதி மனத்தைக் கவரும் நிறத்தைப் பொருந்தியதும், அணிந்திருப்போருடைய உடம்பு முழுவதையும் மூடியிருப்பதினுற் காண்பவர் கவனத்தைக் கிரகிக்குந் தன்மையதுமான ஒரு அங்கியையும் சிரமுடி (Wig) யையும் அணிந்திருப்பர். அவ்வண்ணமே மன்றத்தில் வழக்குரைக்க வந்திருக்கும் (Barristers) நியாயதுரந்தரர்களும் தத்தமக்குரிய நீண்ட அங்கிகளையும் சிரமுடியையும் அணிந்திருப்பர். (159-ம் பக்கம் பார்) இம்மன்றங்கள் கூடும்போதும் கலையும்போதும் நடைபெறும் சம்பிரதாயங்களும் காண்பவர் மனத்தைக் கவரும் தன்மையன.

குற்றங் கடியும் வழக்குக்களை விசாரித்துத் தீர்க்கும் நீதிபதிகள் தங்கள் கடமையை 12 தீர்ப்புதவியாளர் (Jurors) களின் உதவியையும் பெற்றே தீர்ப்புச் செய்வர். இங்கிலாந்தில் தீர்ப்புதவியாளர்களாய் ஏற்படுவதற்குப் பெண்களுக்குமுரிமை யுண்டு. இலங்கையில் தீர்ப்புதவியாளர்களாய் ஏழு பேரே நியமிக்கப்படுவது வழக்கம். இத்தீர்ப்புதவியாளர் விசாரணை தொடங்குமுன் தாமொவ்வொருவரும் மன்னர் பிரானுக்கும் குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு மிடையேயுள்ள வழக்கை நன்கு விசாரித்து உண்மையைக் கடைப்பிடித்தே தீர்ப்புக் கொடுப்பதாகச் சத்தியஞ் செய்வர். இப்பன்னிரு தீர்ப்புதவியாளரும் தம்முள் ஒருவரைத்



தலைவராகத் தெரிந்துகொள்ளுவர். இத்தலைவரே தீர்ப்புதவியாளரின் சார்பாகப் பேசவேண்டியவற்றை யெல்லாம் பேசுவர்.

நியாயதுரந்தரர்கள் (Barristers) குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதிப்பர். வழக்கைத் தொடுத்து நடாத்துதற்கு அரசினர் சார்பாக ஏற்படும் நியாயதுரந்தரர் முடிக்குரிய நியாயதுரந்தரர் எனப்படுவர்.

வாதி, பிரதிவாதி ஆகிய இருபக்கத்தினர் சார்பாகவும் வியாச்சியத்திலுள்ள நிகழ்ச்சிகளைக் கண்டோர் நீதியன்றத்திற் சத்தியஞ்செய்து சான்று கூறுவர். குற்றஞ்சாட்டப்படுபவனும் விரும்பின், சான்று கூறலாம். முடிக்குரிய நியாயதுரந்தரரது வாதத்தையும் பிரதிவாதியின் நியாயத்தையுங் கேட்டபின்னர் நீதிபதி அவ்வழக்கிற் கூறப்பட்ட சான்றுகளின் சாராம்சத்தையும் வழக்குத் தீர்ப்புக்கு ஏற்புடைத்தாய சட்டப் பிரமாணங்களையும் தீர்ப்புதவியாளர்களாய பன்னிருவருக்கு மெடுத்துரைப்பார். வாதி, பிரதிவாதி ஆகிய இருபக்கத்தினரது வாதங்களையும் நீதிபதியின் விளக்கவுரையையுங் கேட்டபின் குற்றஞ்சாட்டப்பட்டோன் குற்றவாளியா? அல்லது சுற்றவாளியா? எனத் தீர்ப்பளிக்கும் பொறுப்புத் தீர்ப்புவியாளரைச் சேர்ந்ததே.

தமது தீர்ப்பைக்கூறுமுன் ஆலோசனை செய்யவேண்டி யிருந்தால் தீர்ப்புதவியாளர்கள் அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென விடப்படுமொரு தனியறையுட் சென்று கலந் தாலோசித்துத் தீர்ப்பை முடிவுசெய்வர்.

குற்றஞ் சாட்டப்பட்டோன் குற்றவாளி என்னும் முடிவுக்குத் தீர்ப்புதவியாளர்வரின், நீதிபதி அவன் செய்த குற்றத்துக்குச் சட்டம் விதிக்கும் தண்டனையை இடுவார்.

மேற்கூறியவாறு தண்டிக்கப்பட்ட ஒருவன் வழக்கு விசாரிக்கப்பட்ட முறையில் அல்லது ஈற்றிற் கொடுக்கப்பட்ட தீர்ப்பில் நீதியீனமிருப்ப தாக நினைத்தால், தனது வழக்கு லண்டன்மா நகரிலுள்ள குற்றங்கடியும் புனர்விசாரணை நீதி மன்றத்தில் விளங்கப்பட வேண்டுமென மனுச் செய்து கொள்ளலாம். புனர்விசாரணை நீதி மன்றத்தில் மூன்று நீதிபதிகள் சேர்ந்து விசா ரணையை நடாத்துவர். இம்மூவருள் அநேகமாகப் பிரதம நீதிபதியுமொருவராக விருப்பர். இந்நீதி மன்றம் முதலிற் கொடுக்கப்பட்ட தீர்ப்பைச் சரி யென ஆமோதிக்கவும் கூடும்; அன்றி, முற்றாய் நிராகரிக்கவும் கூடும். மேலும் அத்தீர்ப்பைக் குறைக்க அல்லது கூட்டவு முரிமையுண்டு. புனர் விசாரணை செய்யப்பட்டபின்னரும் சட்டசம்பந்த மான விவாதங்கள் காரணமாக மாத்திரம் முடிக்கு ரிய பிரதம நியாயதுரந்தரரின் (Attorney General) உத்தரவைப் பெற்று, பிரபுக்கள் மன்றத்திற்கு மனுச் செய்துகொள்ளு முரிமை இருபக்கத்தி னர்க்கு முண்டு.



பிரபுக்கள் மன்றத்தில் மறுதீர்ப்பு வேண்டு மென மனுச்செய்து விசாரணைக்கு வந்த வழக்குக் களை, பிரபுக்கள்மன்றத் தலைவரும் சட்டநிபுண ரான வேறு சில பிரபுக்களும் நீதிபதிகளாயிருந் தநுபவம் பெற்றோராய் அம்மன்றத்தி னங்கத்தின ரான வேறு சிலரும் ஒருங்குகூடி விசாரணையை நடாத்துவர். பிரபுக்கள்மன்றத் தலைவரே அக் கிராசனராவர்.

பிரபுக்கள் மன்றம்.
(The House of Lords)
|
குற்றங்கடியும் புனர் விசாரணை நீதி மன்றம்.
(The Court of Criminal Appeal)
|
பருவ நீதி மன்றம்.
(The Assize Court)
|
முத்திங்கள் நீதி மன்றம்.
(The Court of Quarter Sessions)
|
சிறு தீர்ப்பு நீதி மன்றம் அல்லது பொலிஸ் நீதி மன்றம்
(The Court of Petty Sessions or Police Court)

மேற்காட்டிய நீதிமன்றங்ளொழிந்த வேறு நீதிமன்றங்களுமுள. அவைகளுள் (Juvenile or Children's Courts) இளைஞர் நீதிமன்றமு மொன்று. இதில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள்பாற் குற்றஞ் சாட்டப்படும் வழக்குக்கள் விசாரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும். இந்நீதி மன்றங்கள் பிரத்தியேகமான ஓரிடத்திற் கூடும். அதாவது வேறு குற்றவாளிகள், வேடிக்கை பார்ப்பதற்காக வருபவர்கள் முதலானோர் செல்லாமற் றடுக்கப்படுவர். அன்றியும், ஏனைய நீதிமன்றங்களில் விசாரிப்பதுபோலன்றி இம்மன்ற நீதிபதி குற்றஞ் சாட்டப்பட்ட சிறுவனை அன்பும் ஆதரவுமாக, எக்காரணம்பற்றியக்குற்றம் நிகழ்ந்ததென விசாரித்து, அவ்வழியிலிருந்து திருத்துதற்கேற்ற முறையான தண்டனையே கொடுப்பர்.

**சடுதி மரண விசாரணை செய்யும் அதிகாரிகளின் நீதிமன்றம்** எனப்படும் வேறு நீதிமன்றங்களுமுள. இவற்றிற் பலாத்காரத்தினால் அல்லது வேறு காரணங்களினாற் சடுதியாக இயற்கைக்கு மாறாக ஏற்படும் மரணங்களைக் குறித்து விசாரணைசெய்யப்படும். விசாரணை செய்பவர் சடுதி மரணவிசாரணை அதிகாரி (Coroner) எனப்படுவர். அவர் பன்னிரு தீர்ப்புதவியாளரின் உதவிகொண்டே விசாரணை நடத்துவர்.

பிரித்தானிய பிரஜைகளினது உரிமைகளை வரையறுத்துக் கூறும் இரண்டு முக்கியமான இராச ஸாசனங்களைக் (Charters) குறித்துச் சிறிது கூறுவாம். இற்றைக்குப் பல நூற்றாண்டுகளின் முன் உறுதி செய்யப்பட்ட இச்சாசனங்கள் காரணமாக, இன்றும் அந்நாட்டுப் பிரஜைகள் அநேக உரிமைகளை அநுபவித்து வருகிறார்கள். இச்



சாசனங்களுள் முதலாவது கி.பி. 1215ம் ஆண்டில் **ஜோன்** என்னும் பெயர் பெற்ற அரசனால் உறுதி செய்யப்பட்ட மாபெருஞ் சாதனம் (Magna Carta) ஆகும். மக்களொவ்வொருவரும் நீதிபெறுமுரிமை யுடையோரென்றும் அந்நீதி எக்காலத்திலும் எவராலும் விற்கப்படக் கூடாதென்றும் நீதி செய்வதிற் காலதாமத மேற்படக்கூடாதென்றும் நீதி மறுக்கப்படக்கூடாதென்றும் அச்சாதனம் ஆணையிட்டது. மேலும், நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்பட்டுச் சட்டத்துக் கமைவான தீர்ப்பின்படி யன்றிச் சிறைப்படுத்தவாவது சட்டத்தின் பாதுகாப்புக் கப்பாற் படுத்தவாவது சொத்துக்களை இழக்கும்படி செய்யவாவது கூடாதென்றும் அச்சாதனம் வரையறுத்தது.

1679ல் உறுதி செய்யப்பட்ட **மன்றுய்க்கும் சட்டமும்** (The Habeas Corpus Act) பிரஜாவுரிமையை வரையறுக்குமொரு பெருஞ் சாதனமாகும். குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டவன் ஒரு குறித்த காலவெல்லைக்குள் நீதிமன்றத்திற் கொணர்ந்து சேர்க்கப்பட்டு விசாரிக்கப்படவேண்டுமென இச்சட்டம் விதித்தது. அக்கால எல்லை 20 நாட்களின்மேற்படலாகாது. சிறைப்பட்டானொருவன் சட்டப்படி சிறைப்படுத்தப்பட்டானோ என்பதை விசாரணை செய்ய, நீதிமன்றத்திற்கு அவனைக் கொண்டுவர வேண்டுமெனச் சிறைச்சாலைப் பாதுகாவலனுக்கு ஆஞ்ஞை யிடும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரேனும் ஒரு நீதிபதியின்முன் மனுச்செய்து கொள்ளலாம்.

ஆங்கில நாட்டில் நடைமுறையிலிருக்கும் நீதி பரிபாலன அமைப்பைப்பற்றி ஆராயும்போது, இவ்வத்தியாயத்தில் முன்கூறிய நீதி மன்றங்களுடன் பிறிதொரு நீதிமன்றத்தையும் கவனிக்க வேண்டும். அது ஏனைய நீதிமன்றங்களிலும் கௌரவத்தால் மேம்பாடுடையது. அதுவே பிறிவிக் கவுன்சிலின் நீதிச்சபை யெனப்படும். பிறிவிக் கவுன்சில் எனப்படும் அரச மந்திரசபை நீதி விசாரணை காரணமாகக் கூடும்போது நீதிவிசாரணைக் குழு எனப்படும். இக்குழுவினர் செய்யும் தீர்ப்புக்களெல்லாம் மன்னர்பிரானுக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகள் போலவே வரையப் பெறும்.

பெரும்பாலும் இந்நீதி விசாரணைக் குழு மூன்று அங்கத்தினரையே கொண்டதாக விருக்கும். இம் மூவரும் பிறிவிக் கவுன்சில் எனப்படும் மந்திர சபையில் அங்கத்தவராயும் உயர்தர நீதிபதிகளாய்க் கடமையாற்றி அநுபவம் பெற்றவராயுமிருப்பர். இக்குழுவினரே சமவுரிமை நாடுகள், குடியேற்ற நாடுகள், ஏனைய பிரித்தானிய நாடுகளினது உயர் நீதிமன்றங்களிற் செய்யப்பட்ட தீர்ப்புக்களை நீக்கி மறுதீர்ப்பு வேண்டுமென்னும் மனுக்களை விசாரணை செய்வர். இலங்கையில் சுப்பிரீங் கோடெனப்படும் உயர்நீதி மன்றத்தினது தீர்ப்புக்களுக்கு மாறுகச் செய்யப்படும் புனர் விசாரணை



வேண்டும் மனுக்களும் இக்குழுவினராலேயே விசாரிக்கப்படும். இம்மன்ற நீதிபதிகள் அங்கிகளாவது சிரமுடிகளாவது அணிந்து கொள்வதில்லை. மன்ற நடபடிக்கைகளும் ஆடம்பரமற்றிருக்கும். இதுவே பிரித்தானியச் சக்கராதிபத்தியத்தின் மகா உயர் நீதி மன்றம். கிறீஸ்த சமயச் சட்ட சம்பந்தமான விவாதங்களையும் இம்மன்றமே தீர்க்கும். அவ்வித மனுக்களை விசாரிக்கும்போது பிறிவிக் கவுன்சிலில் அங்கத்தவராயுள்ள தலைமையத்தியட்சர், அத்தியட்சர்களையும் தம்முடன் கூடவிருந்து விசாரணையிற் பங்குபற்றிச் சாஸ்திரார்த்தமான விஷயங்களில் வேண்டிய ஆலோசனைகளைக் கூறித் தீர்ப்புதவியாளர்களாய் (Assessors) இருக்கவேண்டுமென இக்குழுவினரழைக்கவுங் கூடும்.

மன்னர் பிரானிடத்துப் பிரஜைகள் நேரே தமது குறைகளைக் கூறு முரித்தையே இந் நீதி மன்றம் ஸ்திரப்படுத்துகின்றதெனலாம். ஏனெனில், பிறிவிக்கவுன்சி லென்பது மன்னனது ஆலோசனைச் சபையாதலின் அச் சபையினரின் தீர்ப்புக்களெல்லாம் மன்னனுக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆலோசனைகளேயன்றி வேறல்ல.

## அப்பியாச வினுக்கள்.

1. உடன்தீர்ப்பு அதிகார நீதிமன்றங்களாவன யாவை?
2. பொலிஸ் நீதிமன்றம், மாகாண நீதிமன்றமாகிய இரண்டும் எவ்வகையில் வேற்றுமை யுடையன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிரித்தானிய நீதிபரிபாலனத்திற்கு அடிப்படையாயுள்ள கொள்கைகள் எவை ?

4. பிரித்தானிய நாட்டில் நீதிபதிகளாய் உள்ளோரது சுதந்திரம் பாதிக்கப்படாமல் எவ்விதம் காப்பாற்றப் படுகின்றது ?

5. பொருள் சம்பந்தமான வழக்குக்களை விசாரணை செய்யும் உயர் நீதிமன்றங்கள் செய்யுங் கருமங்களை விரித்தெழுது ?

6. குற்றங் கடியும் பருவ நீதிமன்றங்களில் வழக்கு விசாரணை செய்யும் முறைகளை விரித்தெழுது ?

---

14-ம் அதிகாரம்

## பேரரசின் பாதுகாப்பு.

பகைவராற் றாக்குண்டு சீர்குலைந்து போகாதபடி தமது தேசத்தைக் காத்தற் பொருட்டுத் தேவையான படைகளைத் திரட்டி வைத்திருத்தல் ஒவ்வோரரசினதும் முக்கிய கடமைகளி லொன்றாகும்.

பிரித்தானிய நாடு ஒரு தீவகமாயிருத்தலின் சூழ்ந்திருக்குங் கடல், இயற்கை யரணாகவிருக்கின்றது. ஆயினும் நாட்டின் சரித்திரகாலத் தொடக்க முதல் அந்நாடு கடற் படையையே தனது பாதுகாப்பின் முதல் அங்கமாகக் கொண்டுளது. அந்நாட்டைக் காப்பதற்கு மாத்திரமன்றி, கடல்களுக் கப்பாற் பரந்துகிடக்கும் பிரித்தானிய சக்கராதிபத்தியத்துட்பட்ட நாடுகளைக் காப்பதற்கும் பெரும் வலியுள்ள கடற்படை இன்றியமையாத தாயிற்று. சப்த சமுத்திரங்களினு மோடும் பிரித்தானிய வர்த்தகக் கப்பல்கள் பகைவராற் றடுக்கப்பட்டுப் பிரித்தானிய சக்கராதிபத்தியத்தின்பாற்பட்ட நாடுகளுக்கிடையேயுள்ள போக்கு வரவு தடைப்படாமற் காக்கவும் கடற்படை யின்றியமையாதது. மேலும், கடல் கடந்திருக்கும் பிரித்தானிய ராச்சியத்தைச் சார்ந்த நாடுகளிலிருந்து பிரித்தானிய நாட்டுக்கு வேண்டுவனவாய உணவுப் பொருள்கள் கப்பல் மார்க்கமாகக் கொண்டு வரப்படல் வேண்டும். பிரித்தானிய நாட்டிற் செய்யப்படும் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பிறநாட்டிற் கொண்டு சென்று விற்க வேண்டும். ஆகவே, போதிய பலமுடைய கடற்படையின்றேல், பிரித்தானிய நாட்டு மக்கள் உணவின்றி வருந்தவும் வியாபார மிழந்து நஷ்டப்படவும் நேரிடும்.

பிரித்தானிய கடற்படை, வியாபாரக் கப்பல்கள் செல்லுங் கடற்பாதைகளையும் சக்கராதிபத்திய நாடுகள் தம்முடனும் பிறநாடுகளுடனும் செய்யும் வியாபாரத்தையும் பாதுகாக்கின்றது. அன்றியும், இப்பேரரசு பகைவராற் ரூக்குருமலும் காப்பாற்றுகின்றது.

1914—1918ம் ஆண்டுகட்கிடையே நிகழ்ந்த மகாயுத்தத்திற் பிரித்தானிய நாடு வெற்றிபெற, அந்நாட்டின் கடற்படை எத்துணை உதவியாயிருந்ததென்பதையும் இப்போது நிகழும் யுத்தத்தில் அந்நாட்டின் பாதுகாப்பிற்குக் கடற்படை இன்றியமையாச் சாதனமாயிருப்பதையும் நாம் நன்கறிவோம். கடற்படையே பிரித்தானிய நாட்டின் பாதுகாப்பிற்கு முதலங்கமாகும்.

கடற்படையே உத்தியோக முறையிலும் முதன்மை பெற்றதாதலின், படையணி பார்க்கப்படும்போது (Soldiers and Sailors) கடற்படை வீரர் முதலிடம் பெறுவர்.

**எட்டாம் ஹென்றி** என்னுமரசர் (1509—1547) கடற்படைக்குப் பெரிய கப்பல்களைக் கட்டுவதில் அதிகம் ஊக்கம் காட்டியவராவர். அவரே கடற்



படை ஆட்சியை முதன்முதலமைத்தவரெனலாம். இப்போதிருக்கும் கடற்படை அவர்காலந் தொடக்கம் வளர்ச்சியுற்று வந்தது. 1688ம் ஆண்டின் பின் கடற்படை தேசீயப்படைகளுள் ஓரங்கமாக்கப்பட்டு, அதன் செலவிற்குத் தேவையான பணமும் பாராளுமன்றத்தாற் கொடுக்கப்படத் தொடங்கியது. கடற்படை யாட்சிக்குழுவே கடற்படையைப் பரிபாலனஞ் செய்யுமுரிமை யுடையது. இக்குழுவின் தலைவர் கடற்படை யாட்சியின் முதற் பிரபு எனப்படுவர். அவர் ஒரு மந்திரிப் பதவியைப் பெற்றவர். அவர் வசிப்பதற்கு அரசாங்கத்தால் மாளிகை ஒன்று கொடுக்கப்படுவது வழக்கம். அக்குழுவின் ஏனைய அங்கத்தினராயுள்ளோர் பின் கூறப்படுபவர்:—

1. **கடற்படையின் முதற் பிரபு**:—இவரே கடற்படைத் தலைவர்களில் முதன்மை பெற்றவரும், படையை நன்னிலையில் வைத்திருக்கும் பொறுப்பையுடையவருமாவர். இவர் ஆஞ்ஞைப்படியே அப்படை, படைத்தொழிற் கேவப்படலாம். கடற்படையைத் திரட்டும் பொறுப்பையுமுடையவரிவரே.

2. **கடற் படையின் 2ம் பிரபு**:— கடற்படைக்கு வேண்டிய உத்தியோகத்தர்களையும் ஏனைய வீரர்களையும் நியமித்தலும், அவர்கள் படையின் ஆட்சி முறைக்கு அமைந்திருக்கச் செய்தலு மிவர் கடமையே. உத்தியோகத்தரையும் ஏனையோரையும் பயிற்றுதலையும் இவரே மேற்பார்வை செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கடற் படையின் 3ம் பிரபு:—படைக்கு வேண்டிய சகல பொருள்களையுஞ் சம்பாதிப்பதும் அவற்றை வேண்டியவா றுதவுவதும், கடற் படைக்கு வேண்டிய கட்டடங்களையும் புதிதாய்க் கப்பல்களைக் கட்டவும் செப்பனிடவும் ஏற்ற துறைகளையுமமைப்பதும் மேற்பார்வை செய்வதும் இவர் கடமைகளே.

4. கடற் படையின் 4ம் பிரபு:—கடற் படைக்கு வேண்டிய வைத்திய கருமங்களையும் உணவளிக்கும் பரிபாலனத்தையும் இவரே மேற்பார்வை செய்வர்.

5. வரவு செலவுப் பாராளுமன்றக் காரியதரிசி:—இவர் கடற்படை சம்பந்தமாய வரவு செலவு முழுவதற்கும் பொறுப்புடையவர். பாராளுமன்றத்திற் கடற்படை சம்பந்தமாய விவாதங்க ளேற்படும் போது கடற்படை யாட்சியின் முதற் பிரபுவுக்கு உதவியாளராயிருந்து வேண்டியவற்றை எடுத்துரைப்பர்.

6, கடற்படைப் பொது அதிகாரப் பிரபு:—(The Civil Lord) இவர் கடற்படையைச் சேர்ந்த கட்டடங்களையும், கட்டட வேலைகளையும் மேற்பார்வை செய்வர். கப்பல்களும் கட்டடங்களும் கட்டற்குரிய ஒப்பந்தங்களையும், நிலங் கொள்வதையும் இவரே செய்வர்.

7. நிரந்தரக் காரியதரிசி:—கடற்படை யாட்சிக் காரியாலயத்தில் உத்தியோகம் செய்பவர்களின் தலைவரிவரே. கட்சியரசியல் மாறும்போதெல்லாம்



கடற்படை ஆட்சிக் குழுவும் மாறுதலடையுமாதலின், ஆட்சிமுறையில் மாற்றமேற்படாதபடி யிருக்கச் செய்வதற்கு இன்றியமையாத மூலகாரணராயுள்ளவர்.

கடற்படையிற் றலைவர்களாய்க் (Admirals) கடமையாற்றி அநுபவம் பெற்றவர்களே கடற்படையாட்சிக் குழுவின் பிரபுக்களாய் அங்கத்துவம் பெறுவர். பிரித்தானிய சக்கிராதிபத்தியத்தை வேற்றரசுகள் தாக்காது காத்தற்பொருட்டு முதலணிப்படையாக விருந்து திறமையுடன் தன் கடமைகளைச் செய்யும் நிலையிற் கடற்படையை வைத்திருப்பதே கடற்படை யாட்சிக்குழுவினரின் கடமையாகும். கடற்படை ஒரு சுயேச்சாபிரவேசச் சைனியமாகும். பதினாறு ஆண்டுகட்கு மேற்பட்ட எவரும் அப்படையிற் சேர்ந்து அத்தொழிலையே தனது சீவிய தொழிலாக்கிக் கொள்ளலாம். அரசாங்கக் கடற்படைக் கல்லாசாலை டாட்மத் (Dartmouth) என்னும் ஆங்கில நாட்டுப் பட்டணத்தில் உண்டு. அங்கு கடற்படையி லுத்தியோகத்தராய் வருபவர் பயிற்றப்படுவர்.

பிரித்தானிய கடற்படை பல கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்படைக் கூட்டமொவ்வொன்றிற்கும் ஒரு (Admiral) கடற்படைத்தலைவர் அல்லது உதவிக் கடற்படைத்தலைவர் (Vice Admiral) தலைவராயிருப்பர். அவற்றிற் சில பின்

23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(அட்மிரல்) கடற்படைத் தலைவர்.
சேர். டட்லி பவுண்ட்.

வருவன:— உள்நாட்டுக் கடற்படை, மத்தியதரைக் கடற்படை, கிழக்கிந்திய கடற்படை, சீனப்பிர தேசக் கடற்படை என்பனவாம். பிரித்தானிய அரசினரால் நிறுவப்பெற்றுப் பரிபாலனஞ் செய்யப்படும் மேற்கூறிய கடற்படைகளொழிந்த ஏனைய சில கடற்படைகளும் அப்பேரரசின் பாது



காப்புக்காகவுள்ளன. அவை நியூசிலந்து, அவுஸ் திரேலியா, கனடா ஆகிய சமவுரிமை நாடுகளின் கடற்படைகளும் இந்தியநாட்டின் கடற்படையுமாம்.

கடற்படையிற் பல்வேறுவகைப்பட்ட போர்க் கப்பல்களுண்டு. அவைகளுள் (Battle Ships) என்னும் யுத்தக்கப்பல்களே முதற்படியாயுள்ளன. அவை மற்றவைகளிலும் மிகப் பெரியனவாயும் சத்துரு கப்பல்களிலிருந்து சுடப்படும் பீரங்கிக ளினால் இலகுவிற் பழுதுறாதிருப்பதற்காகத் தடித்த இருப்புக்கவசங்களை யுடையனவாயும் அதிகபார முள்ளதும் பெரியதுமான குண்டுகளைச் சுடக்கூடிய பெரியபீரங்கிகளையுடையனவாயுமிருக்கும். மற்றைய கப்பல்கள் குரூயிசர்கள், ஆகாயவிமானம் தாங் குங் கப்பல்கள், நாசகாரிகள், மைன்ஸ் சுவீப் பேர்ஸ், மோட்டர் டோர்ப்பிடோ படகுகள், நீர் மூழ்கிகள் என்பன.

**குரூயிசர்கள்** இரண்டாவதாக முக்கியம் பெற் றவை. முதற்படியில் உள்ளவற்றிலும் அதிவேக மாய்ச் செல்லும் சக்தியுடையனவாயும் முன்னை யனபோ லுயர்தர பீரங்கிகளை யுடையனவாயும் அவைகளை மூடியிருக்கும் இருப்புக் கவசங்கள் நிறை யிற் குறைந்தனவாயுமிருக்கும்.

**ஆகாய விமானம் தாங்குவன:—** கடற்படையுடன் தற்கால யுத்தங்களில் ஆகாய விமானங்களும் சேர்ந்துகொள்ளவேண்டி யிருத்தலின், தரையி லிருந்து வெகுதூரத்திலே கடற்சண்டை நிகழ்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், அவ்விடங்களி லுபயோகித்தற் பொருட்டு விமானங்களைத் தாங்கிச் செல்லக்கூடிய பெரிய கப்பல்களை (Air Craft Carriers) கடற்படை ஆட்சியாளர் வைத்திருப்பர்.

**நாசகாரிகள்** (Distroyers) என்பன பகைவரது கப்பல்களிலிருந்து செலுத்தப்பட்டுத் தன் படையைத் தாக்கவரும் நீர்மூழ்கி இடிகுண்டுகளைப் பிடிப்பதற்கும், சத்துரு கப்பல்களைத் தாக்க வேண்டிய இடிகுண்டுகளைக் கொண்டு செல்வதற்குமாகவுள்ளன. **மைன்சுவிப்பேர்ஸ்** (Minesweepers) எதிரிகளினுல் கடற்பாதைகள் துறைமுகங்கள் தோறும் விதைக்கப்பட்டிருக்கும் நீர்மூழ்கி வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பதற் குபயோகப்படுவன.

இக்காலத்திலே கடற்படையோடு சேர்ந்துழைப்பதற்கு அப்படையைச் சேர்ந்த வொரு ஆகாயப்படையு முண்டு. கடலிலே நிகழும் போரில் கப்பல்களுடன் ஆகாய விமானங்களும் பங்குபற்றுதல் சென்ற மகாயுத்தத்திலேயே தொடங்கியது. இப்போது நிகழும் போரிலும் இவ்வாகாயப்படை கடற்படைக் கின்றியமையாத் துணையாய்க் காணப்படுகின்றது.

**தரைப்படை.** கடற்படை பேரரசின் பாதுகாப்பின் முதலணியென முன்கூறினேம். தரைப்படை இரண்டாவதணியாகும். போர்க்காரியாலயத்திலுள்ளவர்களே தரைப்படையைப் பரிபாலிப்பவர்கள். இப்பரிபாலனத்திற்காகத் தரைப்படைக் குழு என ஒன்றுண்டு. போர்மந்திரியார் அக்குழுவின் அக்கிராசனராவார். இக்குழு 1904-ல் ஸ்தாபிக்கப்பட்டது.



முற்காலத்திலே ஆங்கில நாட்டிலுள்ள தரைப்படை சுயேச்சாதிகாரியாயிருந்த அரசனுக்குச் சொந்தமாயிருந்ததினுல், பிற்காலத்திலும் நாட்டில் நிரந்தர தரைப்படை ஒன்றிருப்பதைப் பிரஜைகள் உவந்தேற்க வில்லை. 1689ல் தரைப்படையின் பரிபாலனம் பாராளு மன்றத்தின் பொறுப்பில் விடப்பட்டது. படைச் செலவிற்குரிய பணத்தைப் பாராளுமன்றம் வருடந்தோறும் கொடுக்க வேண்டு மாதலின் அப்படை எச்சமயத்திலும் பாராளு மன்றத்ினது அதிகாரத்துக் குடன்படநேரிட்டது. இதனுலேயே பொதுமக்கள் மன்றம் போர்ப்படை யொவ்வொன்றின்மீதும் வரம்பிலா ஆதிக்கம் பெற்றது.

முன்கூறிய தரைப்படைக்குழுவில், அப்படையைப் போருக்காயத்தஞ் செய்யவும் உணவு கொடுத்தற்குரிய ஒழுங்கு செய்யவும் உடை ஆயுதங்கள் முதலியன கொடுக்கவும் பொதுவாகப் போரிலீடுபடுவதற்கு ஆயத்தமாயிருக்கப் படையை நன்னிலையில் வைத்திருக்கும் தனித்தனி பொறுப்புடைய போர்நிபுணர் நால்வர் அங்கத்தினராயுள்ளனர்.

தரைப்படையும் ஒரு சுயேச்சாபிரவேசச் சைனியம். சாதாரண காலங்களில் ஜனங்கள் கட்டாயப்படுத்தப்படாமலே தங்களிஷ்டப்படி இதிற் சேர்ந்து கொள்வர். சென்ற மகாயுத்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் இப்போதைய யுத்தத்திலும் அதிசீக்கிரத்திற் பெருந்தொகைப் படையைத்திரட்ட நேரிட்ட தினல், குறித்த வயதுக்கிடையே யுள்ளவர்கள் கட்டாயமாகத் தரைப்படையிற் சேரும்படி ஆஞ்ஞை யிடப்பட்டனர்.



ஒரு பிரிட்டிஷ் போர்வீரன்.

பிரித்தானிய தரைப்படை இரு பெரும்பகுதிகளையுடையது. (1) நிரந்தர தரைப்படையும் அதைச் சார்ந்த உபபடைகளும். (2) உள்நாட்டுப் பாது




காப்புக்காகவுள்ள தரைப்படை. நிரந்தர தரைப் படையைச் சேர்ந்தவர்கள் ஒரு குறித்த காலம் வரையும் படையிற் பணியாற்ற வேண்டும். ஏழு வருட காலமே சாதாரணமானது. அவ்வேழுவருடங்களும் பணியாற்றியபின் போர்வீரர்கள் ரிசேர்வ் படை என்னும் உபபடையில் விடப்பட்டு அதிலும் ஐந்து வருட காலம் வரையிற் பணியாற்றுவர். உப படையிலுள்ளவர்கள் ஐந்து வருடகாலத்துள் எந் நேரத்திலும் போருண்டாயின் நிரந்தரப்படையிற் சேரும்படி ஆஞ்ஞாபிக்கப்படுவர்.

உள்நாட்டுப் பாதுகாப்புப்படை உள்நாட்டைக் காவல்செய்யத் தாமாகவே விரும்பிச் சேர்ந்து கொள்ளும் வீரர்களையுடையது. போரில்லாக்காலத்தில் இவர்கள் தமக்குரிய சொந்தக்கருமங்களில் ஈடுபடுவர். இவர்கள் குறிக்கப்பட்டகாலம் பயிற்றப்பட்டு உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மாத்திரம் தேவைப்பட்டபோது, அழைத்த நேரம் வந்து சேருவதாக உறுதிசெய்து கொள்வர். இப்படை சென்ற மகாயுத்தத்திலும் பெரும்பணி செய்தது. இப்போது நிகழும் யுத்தத்திலும் ஆங்கில நாட்டிற்குப் பெரும்பணி செய்கின்றது.

தரைப்படை தொகையாற் பெரியனவும் சிறியனவுமான தன்மையினால் ஆங்கில நாட்டில் ஆறு பிரிவுகளாகும். அவற்றுள் ஆமி கோர் (Army Corps) எனப்படும் தரைப்படைப் பேரணியே முதலாகவுள்ளது. இது ஒரு ஜெனறலின் தலைமையின்கீழ் உள்ளது. அடுத்தபடியாயுள்ளவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிவிஷன்ஸ் எனப்படும் சிறிய பேரணிகளாம். ஒவ்வொரு சிறுபேரணியும் பிறிக்கேட்ஸ் (Brigades) எனப்படும் பல அதிசிறு பேரணிகளாகும். அதி சிறு பேரணிகள் றெசிமன்ஸ் (Regiments), எனப்



இக்காலத்திய யுத்தத்திலுபயோகிக்கும் டாங்கி.

படும் பெருசிற்றணிகளையும், பெருசிற்றணிகள் வற்ருலியன்ஸ் (Battalions) எனப்படும் சிற்றணி



களையும், வற்ருலியன்ஸ் கொம்பனீஸ் (Companies) எனப்படும் அதிசிற்றணிகளையும் கொண்டுள்ளன.

மேலும், படைகள் தாம் கொண்டுசெல்லும் படைக்கருவிகட்குத் தக்கபடியும் உபயோகிக்கும் வாகனங்கட்குத் தக்கபடியும் போரிற் செய்யும் பிரத்தியேக கருமங்கட்குத் தக்கபடியும் பலவேறு வகையாய்ப் பிரிக்கப்படும். அவையாவன: காலாட் படை, கவல்றி (Cavalry) என்னும் குதிரைப் படை (இப்போதுள்ள யுத்தத்தில் குதிரைகட்குப் பதிலாக மோட்டோர் வாகனங்களிற் செல்லும் படைகளையே உபயோகிக்கின்றனர்), பீரங்கிப் படை, ராங்ஸ் என்னும் போர்ப்பாழிப்படை என் பன. (Tankcorps என்னும் போர்ப்பாழிகளை யியக்கிச்சென்று யுத்தஞ்செய்யும் போர்வீரர் ராங்கோர் எனப்படுவர்). போர்க்களத்திற் காய மடைவோருக்குத் தேவையான சிகிச்சை செய் வதற்காகவுள்ள வைத்திய நிபுணரைக் கொண்ட பகுதியினரும், போர்க்களத்துக்குச் சென்ற படை களுடன் சம்பந்தமான நிர்வாகத்தி லேற்படும் லிகித வேலையைச் செய்யும் பகுதியினரும், யந்தி ரங்களை ஒன்ருய்ச் சேர்க்கவும் வெவ்வேருய்ப் பகுக்கவும், அவற்றி லேற்படும் பிழைகளைத் திருத் தவும், தந்தி, தூரபாஷிணி முதலிய வசதிகளை ஏற் படுத்தவும்; ஆறுகள் முதலிய நீர்வளங்களைக் கடந்து படை செல்ல வேண்டின் அவ்விடங்களிற் பாலங்களை அமைக்கவும், இவை முதலான கருமங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் செய்யும் யந்திர விற்பன்னப் பகுதியினருமுண்டு. தரைப்படை இப்போது முற்றிலும் யந்திர சகிதமானதாய் மாறிவிட்டது. சான்டேர்ஸ், ஊல்விச் என்னும் பட்டணங்களிலே தாபிக்கப் பெற்றிருக்கும் உயர்தரப் போர்த் தொழிற் பயிற்சிக் கழகங்களிற் படைகளுக்கு வேண்டிய உத்தியோகத்தர்கள் பயிற்றப்படுகின்றனர். பிரித்தானிய சக்கராதிபத்தியத்தைச் சேர்ந்த நாடுகளொவ்வொன்றிலும் நிரந்தர தரைப்படையைச் சேர்ந்தவர்கள் பல்வேறு சாதியினரிலுமுண்டு. இந்திய நாட்டில் இந்தியரும் வேறு சாதியினரும் தரைப்படையிற் போர்வீரர்களாயும் உயர்தர உத்தியோகத்தராயு மிருக்கக் காணலாம். ஆபிரிக்காவில் ஆபிரிக்க நாட்டவரும் ஏனையவரும் படையிற் சேர்ந்துள்ளனர். அவ்வண்ணமே ஏனைய நாடுகளிலுமுண்டு.

பிரித்தானிய நாட்டிலுள்ள நிரந்தர தரைப்படை மிகச் சிறியது. ஆனல் யுத்த மேற்படுங் காலங்களில் மிகப் பெரிய படைகளை இலகுவாய்த் திரட்டும் சக்தியுள்ள நாடாய்க் காணப்படும்.

இக்காலப் போர்முறையில் ஆகாயப்படை மிக முக்கியம் வாய்ந்தது. ஆங்கில நாட்டில் ஆகாயப்படை மற்றைய இருவகைப் படைகளிலும் பின்னரே ஸ்தாபிக்கப்பட்ட தெனினும், எதிரிக்குச் சேதம் விளைப்பதில் மற்றவைகளிலும் பார்க்க மிகச் சிறந்ததெனலாம். 1914—1918ல் நிகழ்ந்த உலகப் பெரும் போரின்போதே ஆகாயப்படை



யைப் போரில் உபயோகிக்கத் தொடங்கினர். ஆகாயப் படையைப் பரிபாலனஞ் செய்யும் பகுதியின் தலைவர் ஆகாயப்படை மந்திரியாவர். இப்படை பலவழிகளில் தனது நாட்டிற் குதவி புரியலாம். தரைப்படை கடற்படை ஆகிய படைகளுக்கு இப்படைகள் கண்கள்போன்றனவெனலாம். கடலிலும் தரையிலும் மாற்றான் படைகள் செய்யுமாயத்தங்களைப் பார்த்துவந்து தன் நாட்டுப் படைகளுக் கறிவிக்கு மாகலின். அஃதன்றி எதிரி போர்க்களத்துக்குப் படைகளையும் அவைகட்கு வேண்டிய யுத்தக் கருவிகளையும் உணவுப்பொருள்களையும் கொண்டுவரும் வழிகளிலுள்ள புகையிரதப் பாதைகளையும் பாலங்களையும் தெருக்களையுஞ் சிதைவுறச் செய்து, முன்னேறாது தடுக்கவுங் கூடும். எதிரி தன் படையின் உபயோகத்திற்காகப் பெற்றோல் சேமிக்கு மிடங்களையும் துவக்குக்கள் பீரங்கிகள் ஆகியவற்றிற்குரிய குண்டுகளைச் சேமிக்கு மிடங்களையும் யுத்தக் கருவிகளைச் செய்யுந் தொழிற்சாலைகளையும் ஏனைய யுத்த முயற்சிக் குதவியாய தொழில் ஸ்தானங்களையும் தீக்கிரையாக்கலாம். போரிற் சேராது போர்க்களத்துக் கப்பாலே நாட்டில் வசிக்கும் ஜனங்களின் மீது வெடிகுண்டுகளை எறிந்து அவர்களைப் போரில் ஆர்வங் குறையச் செய்யலாம். இப்போது நிகழும் போரில் பிரித்தானிய நாட்டின் ஆகாயப்படை எதிரியைத் தாக்குவதிலும் தமது நாட்டைக் காப்பதிலும் அளவிறந்த பணி யாற்றுகின்றது. போரிலீடுபட்டிருக்கும் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குத் தேவையான போர் விமானங்களை அதி சீக்கிரமாய் உற்பத்தி செய்து கொடுத்தற்பொருட்டு ஒரு தனி மந்திரியார் நியமிக்கப்பட்டிருக்கின்றார். தரைப்படையைப் பரிபாலனஞ்செய்யுந் தரைப் படைக் குழுவினரைப் போன்ற ஒரு குழுவினர் ஆகாயப்படைப் பரிபாலனத்துக்கும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

உலகிலுள்ள சகல நாடுகளிலும் ஆகாயப் படை போர்ப் படைகளுட் சிறந்ததும் முக்கியம் வாய்ந்ததுமாய்க் காணப்படுகின்றது. எந்நாடும் சிறந்தவோர் ஆகாயப் படையைத் தனது பாது காப்பிற்காக ஏற்படுத்துவதிற் சிரத்தை யற்றிருக்க மாட்டாது. பிரித்தானிய சக்கராதிபத்தியத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் அப்பேரரசின் ஆகாயப் படையின் சிறு பகுதிகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. எனவே, நாட்டின் பாதுகாப்புக் குரிய இம்மூன்றுவகைப் படைகளும் எவ்விதம் அமைக்கப்பட்டன என ஆராய்ந்தோம் இம் மூவகைப் படைகளினதும் சிறு சிறு கூட்டங் களும் பிரித்தானியப் பேரரசு நாடுகளில் ஸ்தா பிக்கப்பட்டுள்ளன. உலகெங்கும் பரந்து கிடக் கும் வெவ்வேறு நாடுகளினதும் பாதுகாப்பை ஒரு முகமாக்கிப் பரிபாலனஞ் செய்து சீர்ப்படுத்தும் பொருட்டு இப்போதைய போர் தொடங்கிய சில மாதங்களுக்கிடையில் ஒரு புதிய மந்திரியார் நிய மிக்கப்பட்டார். அவர் **பாதுகாப்புப் பரிபாலன மந்திரி** எனப்படுவார். ஆனால் இறுதியாக ஏற்



பட்ட மந்திரிசபை மாற்றத்தில் இம்மந்திரிப் பதவி நீக்கப்பட்டுப் பிரதம மந்திரியாரே அக்கடமைகளை யுஞ் செய்து வருகின்றார்.

### அப்பியாச வினாக்கள்.

1. கடற்படை நாட்டுப் பாதுகாப்பின் முதலணி என்பது எக்காரணங்களினால் ?
2. கடற்படையோடு சம்பந்தப்பட்டுப் போரில் உதவிசெய் யும் ஆகாயப்படை செய்யும் வேலைக ளெவை ?
3. தரைப்படை ஆட்சிக் குழுவினது கடமைகள் யாவை?
4. பாராளுமன்றம் போர்ப்படைகளைத் தன் ஆஞ்ஞைக்குக் கீழ் இருக்கும்படி செய்வ தெப்படி ?
5. ஆகாயப்படை எவ்வகைகளில் முக்கியம் வாய்ந்ததென விரித் தெழுது ?
6. ஆகாயப் படைக் குழுவின் அமைப்பை விபரிக்க ?
7. பாதுகாப்பு மந்திரியின் கடமைகள் யாவை ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்குமிடம் :-

சண்முகநாதன் புத்தகசாலை,
257, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரபல புத்தக [illegible]பாரிகளிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org